Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
டிச.15—21,1996

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 183

## தமிழ்கட்சிகள் + புலிகள்

# பிணக்கா உறவா

## திருப்பம் வருமா?

## அவசியங்களும் இரகசியங்களும்



## அழகும் எடையும்

## நக்மாவுடன் மோதலா?

## பிரபாவின் மறுப்பு இந்தியா வெறுப்பு

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

# முரசம்

## அறிவிப்பும் –நிலவரமும்

**அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.**

வடக்கில்
உள்ளூராட்சித் தேர்தல்களை
அறிவித்துள்ளது அரசாங்கம்!

அரசாங்கத்தைத் தவிர
வேறு யாரும்
அந்த அறிவிப்பை
வியந்து வரவேற்கவில்லை!

ஜனநாயக நிறுவனங்களை
யாழ் குடாநாட்டில்
கட்டியெழுப்புவதுதான்
அரசின் நோக்கமா?

அப்படியொரு நோக்கம்
இருப்பின்-நிச்சயம்
வரவேற்கத்தான் வேண்டும்!
அதற்கிடையே சில கேள்விகள்
எழுந்து முகம் காட்டுகின்றன!

உள்ளூராட்சி சபைகளைவிட
மிக உயர்ந்த ஜனநாயக நிறுவனம்
பாராளுமன்றம்!

வடக்கு-கிழக்கில் இருந்து
பாராளுமன்றத்திற்குச் சென்றுள்ள
பிரதிநிதிகளுக்கு
தரப்படும் மரியாதை என்ன?

பாராளுமன்றத்தில் அவர்கள்
சுட்டிக்காட்டும் குறைகள்
செவியில் ஏறுகின்றனவா?

பாராளுமன்றத்தில் பேசுவது-
அரசாங்கத்தின் செவியில்
விழவேண்டும் என்பதற்காகத்தான்!

நாட்டின் உயர்ந்த
ஜனநாயக நிறுவனம்-
மக்களின் பிரச்சனைகளுக்கு
பரிகாரம் காணவேண்டும்
என்பதற்காகத்தான்!

பாராளுமன்றத்தில் தமிழ்
பாராளுமன்ற உறுப்பினர்களின்
பேச்சுக்களுக்கு
அமைச்சர்கள் யாரும்
அக்கறை எடுத்து
பதில் அளிப்பதாகவே தெரியவில்லை!

பாராளுமன்றத்துக்கு வெளியே
என்ன நடக்கிறது?
வடக்கு-கிழக்கில்
தினம் ஒரு பாதுகாப்பு விதி,
நாளொரு கட்டுப்பாட்டு விதி,
விதிகள் போடப்படும்போது
பாராளுமன்ற உறுப்பினர்களுடன்
கலந்து பேசப்படுகிறதா?

உள்ளூராட்சித் தேர்தல்
அறிவிக்கப்பட முன்னர்
வடபகுதியைச் சேர்ந்த
பாராளுமன்ற உறுப்பினர்களுடன்
சம்பிரதாயத்துக்குக் கூட
கலந்து பேசப்படவில்லை;
கருத்து அறியப்படவில்லை!

"புலிகள் ஆயுதங்களைக்
கீழே போட்டுவிட்டு வந்தால்தான்
அவர்களுடன் பேசலாம்,"
என்பது அரசின் நிலைப்பாடு.

ஆனால், வடக்கு-கிழக்கில்
ஆயுதம் ஏந்திப் போராடிவிட்டு
ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ள
தமிழ் கட்சிகளுக்கு
வடக்கு-கிழக்கு விவகாரங்களில்
உரிய முக்கியத்துவம்
தரப்படுவதாகத் தெரியவில்லையே!

அக் கட்சிகளின் கருத்தறிவதும்
கலந்து பேசுவதும்
ஆயுதங்களைக் கைவிட்டவர்களுக்கான
கௌரவமாக அமையுமல்லவா?

ஜனநாயகப் பாதையில்
நம்பிக்கையூட்டும் அணுகுமுறைகளை
அரசாங்கம் வெளிக்காட்டட்டும்!
தேர்தல்கள் நடத்துவது மட்டும்
ஜனநாயகத்தின் அடையாளமல்ல!

யாழ் குடாநாட்டில்
படைபலம் இல்லாமல்
அரச கட்டுப்பாடு சாத்தியமல்ல!

படைபலத்தை
தக்கவைக்கும் வகையில்தான்
அங்குள்ள நடைமுறைகள்
அமையும் என்பது தெளிவு!

உள்ளூராட்சி சபைகள்
நிர்வாகம் நடத்தக்கூடிய நிலை
தற்போது அங்கே இல்லை.

உள்ளூராட்சி சபைகளையும்
அதன் உறுப்பினர்களையும்
படையினர்தான் பொத்திக்காக்க வேண்டும்!
சுதந்திரமாக நடமாடவே முடியாத
உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்
ஒழுங்கான- சுதந்திரமான
நிர்வாகம் நடத்துவது எப்படி?

படையினரில் தங்கியிருந்து,
படையினரின் விருப்பப்படி
நடைபெறும் நிர்வாகத்துக்கு
மக்களின் அங்கீகாரம்
இருப்பதாகக் காட்டும் முயற்சிதான்
உள்ளூராட்சித் தேர்தல்!

ஜனநாயக நிறுவனங்கள் மீதும்
தம்மால் தெரிவு செய்யப்படும்
பிரதிநிதிகள் மீதும்
மக்கள் நம்பிக்கை இழக்கவே
இவ்வாறான அணுகுமுறைகள்
வழிவகுக்கும்! ❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## ஜெபத்தினால் ஜெயம்

**வே**தம் சொல்கிறது: 'நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற் படியிடக்கடவோம்' (சங்.95:6)

தானியேல் முழங்காற்படியிட்டு ஜெபிக்கிறதை மற்றவர்களெல்லாம் கவனித்த போதிலும் தானியேல் அதைக் குறித்துக் கவலைப்படவில்லை. தன்மேல் குற்றம் கண்டு பிடிக்க ஒரு கூட்டத்தினர் முயற்சி செய்கிறார்கள் என்று அவன் அறிந்த போதிலுங்கூடத் தன் ஜெபத்தை நிறுத்தவில்லை. ஆகவே கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் தானியேலை வெற்றி சிறக்கச் செய்தார்.

தானியேலின் காரியம் ஜெயமாய் இருந்ததைப் போல நம்முடைய காரியமும் ஜெயமாயிருக்க வேண்டும் அல்லவா? தேவ பிள்ளையே நீ ஜெயமான ஜீவியம் செய்யவேண்டுமென்றால், கர்த்தரிடத்தில் ஊக்கமாக ஜெபிப்பாயாக, உன்னுடைய ஜெப ஜீவியத்தைக் குறித்து நீ ஜாக்கிரதையுள்ளவனாய் இரு, அப்பொழுது நிச்சயமாகவே கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பார்.

தி.பெ.தேவபாலன்- மட்டக்களப்பு.



## நலன் விளைக்கும் உதவி!

**ஒ**ரு மனிதனுக்கு இன்னொரு மனிதன் உதவுவது என்பது நீண்ட காலத்துக்கு நிலைக்காது. அந்த உதவி நினைக்கும் அளவுக்குப் பலன் தரவும் செய்யாது. ஏனெனில் அது இவனைப் போன்ற இன்னொரு மனிதனின் உதவி. அதன் மூலம் பெரும் பயன்கள் எதுவும் விளையாது.

நமக்குக் கிடைக்கும் உதவியால் நாம் நிறைவு பெறவும் வேண்டும், பிறர் நம்மிடம் குறுக்கிட முடியாது போகவும் வேண்டும். அப்படிப்பட்ட ஒரு தனி வலிமை நமக்கு வரும் அளவுக்கு யாரோ உதவுவார்?

ஏகப் பரம்பொருளான 'அல்லாஹ்' உதவலாம்

அந்த உதவி நிலைத்த, தனித்த, தனிப் பெரும் வல்லமை படைத்த உதவி என அவன் குறிப்பிடுகின்றான்; அந்த உதவி கிடைத்து விடுமானால் பிறகு வேறு யாரும் நம்மில்-வரம்பு மீறி நடக்க முடியாது. அவன் பாதுகாத்துக் கொள்வான்.

"இறைவன் உங்களுக்கு உதவி செய்து விட்டால் (அது போதும்) உங்களை மிகைப்பவர் யாரும் (பிறகு) இருக்கமாட்டார்கள். அவன் உங்களைக் கைவிட்டுவிட்டால் பின்னர் யார் உங்களுக்கு உதவுவார்? (எனவே) நம்பிக்கையாளர்கள் இறைவனின் மீதே பாரம் சாட்டுவார்கள்." (அல் குர்ஆன்),

கும்புக்கந்துறை- மௌலவி அனீஸ் எம். ஷாகிர்

# கவிதைப் போட்டி இல.180



## பரிசுக்குரிய கவிதை

### துயிலாத கண்கள்

**துணையின்றி- உறவின்றி துயிலாத-**
**கண்ணிரெண்டை**
**தனியாக நின்று நீ தூங்க வைத்தாய்!**
**உறவின்றி-துணையின்றி தூங்காத கண்கள்-**
**இங்கு**
**பலநூறு இருக்குதம்மா! பாழான இந்த**
**நாட்டினிலே!**

சாரதா- பேலியாகொட.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### விழி

தூங்கு கண்மணி...!
உலகழிந்து
உயிர் அழிந்து
சமாதானம் வரும்;
அதுவரை
தூங்கு கண்மணி!

சுபா வரன்-கண்டி.

### தெருவில் வாழ்க்கை

பட்டினிக்கு சோறுமில்லை;
பாலூட்ட தாயுமில்லை;
கருவறையில் கண்மலர்ந்து
நிலவறையில் நீர் சிந்த
தெருவோரம் தூளி கட்டி
தினந்தோறும் வாடுகின்றோம்!
போர்தேசமது கொடுத்துவிடும்
நாம் போகுமிடம் எத்தனையோ?

தெ. லோஜனா-கொழும்பு-15.

### ஏன் மறந்தீர்?

கதியற்று வந்தவரை
கைதிகளாக்கிவிட்டீர்!
விருந்துக்கு அழைத்துவிட்டு
விரோதிகளாய் பார்க்கின்றீர்!
மனதில் மரணபயம்
மரத்தடியில் எம் வாழ்க்கை
மானமுள்ள மனிதர்களாய்
மதிக்க மட்டும் ஏன் மறந்தீர்?

சி.மு. சுந்தரேசன்-
மஸ்கெலியா.

### ஆராரோ ஆரிவரோ??

ஆராரோ ஆரிவரோ
அன்புத்தம்பி நீயாரோ
அம்மா யாரோ!
அப்பா யாரோ!!
ஆகாரம் தருவார் யாரோ
ஆதரவு தருவார் யாரோ
போரோயும் நாளேதோ!
போதுமடா போரின் தொல்லை!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

### ஏனென்றால்.....நீ அகதி!

சின்ன மரக்கிளையில்
சீலையினால் தொட்டிலிட்ட
அன்னக் குலக் கொடியே...!
ஆராரோ சொல்லியுன்றன்
சின்னப் பிறப்பினுக்குத்
தாலாட்டுப் பாடுவதை....
எண்ணிச் சிலிர்க்கின்றோம்!
ஏனென்றால் நீ...அகதி!!

செல்வன் வீ. கவிதாருபன்-
திருக்கோவில்.

### தாயகம் தந்த பரிசு

முலைப்பாலுக்கு தாயில்லை,
விலைப்பாலுக்கு தந்தையில்லை!
இருப்பதற்கு மனையுமில்லை,
இரப்பதற்கு மனிதருமில்லை,
தாயகம் தந்த பரிசுதானே!

பதிலா ஆப்தீன்-ஏறாவூர்-01.

### இனியார் உனக்கு.....?

போர்வேட்டின் தாலாட்டில்
பெற்றோர்கள் தூங்கியதால்;
துணியிலே தொட்டில் கட்டி...
தம்பியை தூங்க வைத்தாய்!
இனி நீ தூங்க...
யாரம்மா தாலாட்டு(ப்) பாடுவது?


சிவராஜா மௌனேஷ்-
மட்டக்களப்பு.

### நம்பிக்கை

உனை நம்பி ஒரு ஜீவன்!
உன் ஜீவன்
எதை நம்பி...?

என்.எஸ்.குமாரன்-வவுனியா.

# கவிதைப் போட்டி இல-183



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி:- 21.12.1996

முகவரி: கவிதைப் போட்டி இல.183 தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### துயில் கொள்வாய்....!

கருவினில் சுமந்தவளோ
கரிமருந்துக்கிரையானாள்!
காத்துவந்த தந்தையவர்,
காணாதோர் பட்டியலில்!
ஊர்விட்டு ஓடிவந்து,
கானகத்தில் தொட்டிலிட்டேன்!
துயில்கொள்ளு தங்கையே...
துயர் நமக்குதொடர்கதையே!

ஆரையம்பதி-இதயம்.

### தோட்டக் காட்டினிலே...

அம்மா அவள்,
கொழுந்து மலையில்!
அக்காவோ,
ஆயா வேலை!
அரிவரிக்குப்போக,
அவகாசமில்லை.
ஆராரோ ஆரிரரோ....!

தலவின்னை சிபார்- உடதலவின்ன.

# வாசக(ர்) சாலை

"எக்ஸ்ரே ரிப்போர்ட்' வரப்போகின்ற கடல் போரின் கனத்தைக் காட்டியது. 'கொள்ளை ராணி' தொடர் காட்சிகளை கண்முன் கொண்டு வருவது சுப்பர். 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' எமது சரித்திரத்தை நடுநிலைமையோடு தருவதற்கு நன்றி.

ஆ.சசிகரன், திருகோணமலை.

அன்பின் முரசே!

நீ வாரம் தோறும் வழங்கி வரும் அனைத்து அம்சங்களும் மிகவும் நன்றாக இருக்கின்றன. அதிலும் கொள்ளைராணி பூலான் தேவியின் கதை மிகவும் நன்றாக இருக்கின்றது.

தர்மலிங்கம் காந்தரூபன், கல்லடி வேலூர், மட்டக்களப்பு.

முரசு கொட்டுவது எல்லாம் முத்தாகத்தான் இருக்கின்றன. அதிலும் சிந்தியாவின் சிறப்பான பதில்கள் சிந்திக்க வைக்கின்றன. இலக்கிய நயம் தரும் ரசிகனின் ரசனை பிரமாதம்! காதில பூ கந்தசாமியின் கற்பனைக்கு ஒரு கைகுலுக்கல்.

சு.சுபாஷினி, மாத்தளை.

என் இனிய முரசுக்கு!

நீ சுமந்து வரும் ஆக்கங்கள் அனைத்தும் தேனிலும் இனிது. குறிப்பாக "தாய்" நாவலைத் தொடர்ந்து வரும் "தூக்கு மேடைக்குறிப்பு", சுஜாதாவின் "அனிதா இளம் மனைவி" பிரமாதம். உனது பணி தொடர எனது நல்வாழ்த்துகள்.

எம்.ஆர்.எம்.பைறூஸ், தித்தவெல்காளை.

முரசில் வெளியாகும் 'தூக்குமேடை குறிப்பு' தொடர் நிகழ்கால சிறைவாசத்தை அனுபவிக்கும் அனுபவத்தை ஏற்படுத்துகின்றது. காலங்கள் கடந்த அனுபவங்கள் எம்நாட்டை பொறுத்தவரை நிகழ்கால நிகழ்வுகள்.

பே.கிறிஸ்டி அன்ரனி, கொழும்பு-06.




அன்பின் முரசே

நீ தரும் அனைத்து அம்சங்களும் இனிமையாக உள்ளன. புதிதாக அறிமுகப் படுத்தியுள்ள "அனிதா இளம் மனைவி", "தூக்கு மேடை குறிப்பு" மிகவும் விறு விறுப்பாக அமைகின்றன.

எங்கே கையை கொடுங்கள் காதில பூ கந்தசாமி! பிரபா-கருணாநிதி பேச்சு வார்த்தை; கற்பனை மிகவும் சுவையாக அமைந்தது. கந்தசாமியாருக்கு எனது பாராட்டுக்கள்!

ஆர்.ஜெகதீசன், காரைதீவு-12.

பேச்சுவார்த்தை என்பது கானல் நீராய் மாறிவிட்டது. அரசு- புலிகள் இடையே இணக்கம் ஏற்படுவது முயற்கொம்புதான். போரில் மனித உயிர்கள் மதிப்பிழப்பதையும், மறைந்துபோகும் கொடூரங்களையும் 'முரசு' தொடர்ந்து வெளிக்கொணர வேண்டும்.

–ஆர்.நடேசன், மட்டக்களப்பு

'முரசு' சொன்னது சரிதான்! வந்தார்கள், சென்றார்கள், பத்திரிகைகளுக்கும் தாம் வந்து போன செய்திகளைச் சொன்னார்கள். பாராளுமன்றத்திலும் அனல் பறக்க விவாதித்தார்கள். அகதிகள் இப்போதும் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள். விடிவுக்கு உதவாத விளம்பர மோகம் அரசியல்வாதிகளுக்கு!

கு.தவமோகன், வவுனியா.

'தூக்குமேடைக் குறிப்பு', 'அனிதா இளம் மனைவி', இரண்டு புதிய தொடர்களும் வெவ்வேறு கோணங்களில் அமைந்த நிறைவான படைப்புக்கள். 'பூலான்தேவி' தொடர் பற்றி சொல்லவே வேண்டும். நம் நாட்டிலும் பூலான்தேவி தேர்தலில் நின்றால் வென்றுவிடுவார். அந்தளவுக்கு அபிமானிகள் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். தொடர் பிரமாதம்.

ஜெ.பெரோஸ், காலி.

'சினிவிசிட்' தூக்குது தலைவா! 'அவ்வை சண்முகி' கமல் மாமி அசத்தல். முரசில் விமர்சனம் பார்த்தபின்னர்தான் வீடியோவில் படம் பார்த்தேன். பார்க்கக்கூடிய படம் என்று 'முரசு' சொன்னால் சொன்னதுதான்.

செல்வி.சுசிலா ராகவன், கொழும்பு-10.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்படுபவர்கள்:

- ★ அ.லோகேஸ்வரி, மாத்தளை.
- ★ எஸ்.ஆனந்தன், கொழும்பு-11.
- ★ எ.நஸ்புல்லா, கிண்ணியா-06.
- ★ சரவனேஸ் டெயிசி, பத்மா டெயிசி, கலவானை.
- ★ பூ.மகேந்திரதாஸ், கோட்டைக்கல்லாறு.
- ★ வே.நவமோகன், வவுனியா.
- ★ என்.ரீ.அமீனுதீன், அக்கரைப்பற்று-06.
- ★ என்.ஜீ.நாகேஸ்வரன், பூண்டுலோயா (வடக்கு)
- ★ க.சுதர்சன், செங்கலடி.
- ★ செல்வி.கல்யாணி பரமானந்தம், மாகோ.
- ★ இ.தேவதாஸ், பள்ளிக்குடியிருப்பு.
- ★ வே.சச்சுதா, புப்புரஸ்ஸ.
- ★ தில்லை பாலசிங்கம், இராகலை.
- ★ எம்.செல்வக்குமார், மஸ்கெலியா.
- ★ ச.காங்கேயன், ஈச்சிலம்பற்று.
- ★ ஏ.ஜே.எம்.ஜஃபார், கொழும்பு-15.
- ★ வி.வசந்தன், கனடா.
- ★ எஸ்.எஸ்.கிருஷ்ணா, ஹட்டன்.
- ★ திருமதி மா.தேவிகா, மெல்போர்ன்- அவுஸ்திரேலியா.
- ★ சாந்தினி துரைசாமி, கண்டி.
- ★ ஆர்.ரெட்ணராஜ், அன்னைபுரம்.
- ★ கே.நவமலர், கோட்லோஜ்.
- ★ மும்தாஸ் பேகம் ஸபீர்.
- ★ எம்.றசீன், பெரிய நீலாவணை-03.
- ★ எம்.ஐ.எம்.அரூஸ், காத்தான்குடி-06.
- ★ ஆ.இளங்கோவன், தெனியாய.
- ★ யூ.ஏ.ஜவ்பர், முந்தல்.

"வீடு கொடாதீர்" ஆசிரியரின் குறிப்பு பல நூறு அப்பாவி தமிழ் மக்களின் இதயத்தை குளிர வைத்திருக்கும். சகோதர மொழி பேசும் பலரும் சட்டத்துக்குப் பயந்தே தமிழருக்கு வீடு வாடகைக்குவிடத் தயங்கி நிற்கின்றார்கள். தூக்கு மேடைக்குறிப்பு சிறப்பாய் தொடர்கின்றது.

திருமதி.எஸ்.பவானி, ஏகித்த, வத்தளை.

# வன்னியில் தரையிறங்கிய ஹெலிக்கொப்டர்! வழிகாட்டிச் சென்ற தமிழ்க் குடும்பம்!

பாதுகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தையும், இராணுவத் தளபதி மற்றும் உயரதிகாரிகளும் சென்ற ஹெலிக்கொப்டர் தரையிறங்கியது தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் பின்வருமாறு:

வவுனியா பம்பைமடுவில் கிடாய்சூரி என்றழைக்கப்படும் இடத்தில்தான் ஹெலிக்கொப்டர் தரையிறங்கியது. திருச்செல்வம் என்பவருக்குச் சொந்தமான காணியில்தான் ஹெலி இறக்கப்பட்டது.

ஹெலியில் இருந்து முதலில் இறங்கிச் சென்ற வவுனியா பா.உ சுமதிபாலா, திருச்செல்வம் வீட்டுக்குச் சென்றார்.

ஹெலி இறங்கியதைக் கண்டதும் திருச்செல்வம் பயந்துபோயிருந்தார். அவரது வீட்டுக்கு அருகில் வேறு வீடுகள் இருக்கவில்லை. குறைந்தளவு குடும்பங்களே வசிக்கும் பகுதி என்பதால் பரபரப்பு ஏற்படவில்லை.

### குடும்பத்தோடு பயணம்

திருச்செல்வத்திடம் சென்ற சுமதிபாலா பா.உ., "இது ஒட்டிசுட்டான் பகுதியா?" என்று கேட்டிருக்கிறார். "இல்லை" என்று அந்த இடத்தின் பெயரைக் குறிப்பிட்டிருக்கிறார் திருச்செல்வம்.

அதே நேரம் ஹெலியில் பாதுகாப்புக்காகச் சென்ற கொமாண்டோக்கள் சிலர் வந்து திருச்செல்வத்தை தமக்கு பாதை காட்டுமாறு கேட்டனர். அதேநேரம் ஹெலியிலிருந்து பிரதி பாதுகாப்பு அமைச்சரும், ஏனையோரும் இறங்கி வந்துகொண்டிருந்தனர்.

வருவது பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்பது திருச்செல்வத்துக்கு தெரிந்துவிட்டது.

திருச்செல்வத்தையும் அவரது வீட்டிலிருந்த அவரது மனைவி மற்றும் பிள்ளைகளையும் தம்மோடு புறப்பட்டு வருமாறு கொமாண்டோக்கள் கூறினார்கள்.

வழக்கமாக இவ்வாறான சந்தர்ப்பங்களில் தகவல் வெளியே பரவாமல் இருக்க, தம்மை கண்டுகொண்ட அத்தனை பேரையும் தாம் தப்பிச் செல்லும்வரை தம்முடன் வைத்திருப்பதுதான் முறையாகும்.

திருச்செல்வத்துடனும் குடும்பத்தினருடனும் காட்டுப்பாதைவழியாக நடந்துவரும் போது, திருச்செல்வத்தின் மனைவியால் நடக்க முடியவில்லை. சமீபத்தில் அவருக்கு ஒப்பரேசன் நடைபெற்றது. அதனால் நடக்கச் சிரமப்படுகிறார் என்று திருச்செல்வம் தெரிவித்தார்.

அதனால் திருச்செல்வத்தின் மனைவியை மட்டும் இடையில் ஒரு பகுதியில் இருக்கச் செய்துவிட்டு திருச்செல்வத்துடனும், பிள்ளைகளுடனும் தொடர்ந்து நடந்தனர்.

### பாதுகாப்பு ஏற்பாடு

இராணுவக் காவலரணை சமீபிக்க முன்பாக காட்டுப்பகுதியில் ஒரு பாதுகாப்பான இடத்தில் பிரதிபாதுகாப்பு அமைச்சரையும், உயரதிகாரிகளையும் இருக்கச் செய்துவிட்டு, விமானியும் கொமாண்டோக்களும் திருச்செல்வத்துடனும், பிள்ளைகளுடனும் இராணுவக் காவலரண் நோக்கிவந்தனர். இராணுவத்தினருக்குத் தகவலும் கொடுத்தனர்.

அதன்பின்னரே இராணுவத்தினர் புறப்பட்டுச் சென்றனர். விமானப் படை ஹெலிக்கொப்டருக்கும் தகவல் போனது. பிரதி பாதுகாப்பு அமைச்சரும், உயரதிகாரிகளும் இருந்த பகுதிக்கு இராணுவத்தினர் சென்றனர்.

அதன்பின்னரே விமானப்படை ஹெலிக்கொப்டரில் அவர்கள் பத்திரமாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதேவேளை, தரையிறங்கிய ஹெலிக்கொப்டரை படையினரே தகர்த்தனர் என்று முதலில் செய்தி வெளியாகியிருந்தது. இப்போது புலிகளே அதனைத் தகர்த்தனர் என்று படைவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ காவலரணில் இருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்தில் தரையிறங்கிய ஹெலிக்கொப்டரை மீட்கமுடியாமல் போனது ஏன்? என்ற கேள்வி எழக்கூடும் என்பதால் அவ்வாறு கூறப்படுகிறதோ என்று சந்தேகம் எழுந்துள்ளது.

ஹெலியைத் தாம் தகர்த்ததாக புலிகளும் தெரிவிக்கவில்லை.

# தமிழ் கட்சிகளின் உடன்பாடு! அரசுக்கு வெற்றி!

ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசியபோது, உள்ளூராட்சித் தேர்தல் திகதியை நீண்டகாலம் பின்போட முடியாது; தமிழ்கட்சிகள் யாழ் குடாநாடு சென்று தேர்தலில் போட்டியிடத் தயாராவதற்கு மட்டும் ஒரு கால அவகாசம் தரப்படும் வகையில் புதிய திகதி அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதியாகக் கூறியிருந்தார்.

தமிழ் கட்சிகள் தவிர வேறு யாரும் வடக்கில் தேர்தலில் போட்டியிடத் தயாராக இல்லை. பிரஜைகள் குழுக்களில் உள்ளவர்களைப் போட்டியிட வைக்க மேற்கொண்ட முயற்சிகளும் தோல்வி கண்டிருந்தன.

இந்நிலையில் யாழ் குடாநாட்டில் தேர்தலை நடத்துவதாயின் தமிழ் கட்சிகளையே அரசாங்கம் நம்பியிருக்க வேண்டும்.

அதனால்தான் தமிழ் கட்சிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்கி அரசாங்கம் தேர்தல் திகதியைப் பின்போடச் சம்மதித்தது.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பை வெளியிடமுன்னர் தமிழ் கட்சிகளை அபிப்பிராயம் கேட்டிருந்தால் 'இப்போதைக்கு வேண்டாம்' என்று அவை மறுத்திருக்கலாம்.

அதனால் அரசாங்கம் தேர்தல் அறிவிப்பைத் தானாகவே வெளியிட்டது. தமிழ் கட்சிகளும் தேர்தலை நிராகரிக்கவில்லை. பின்போடச் சொல்லித்தான் கேட்டன. "அதற்கென்ன- திகதியை மாற்றலாம். ஆனால் அதற்கிடையில் நீங்கள் அங்குபோய் தயாராகி விடவேண்டும்" என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தால் தமிழ் கட்சிகளுக்கு வெற்றியாக இருந்திருக்கும். ஆனால் நடத்திருப்பதோ திகதி மாற்றம்தான். தமிழ் கட்சிகளை தேர்தலில் போட்டியிடவைத்துவிட்டமையால் அரசாங்கத்திற்குத்தான் வெற்றி என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தமிழ் கட்சிகள் யாவும் ஒன்றுபட்டு ஒரே நிலைப்பாட்டில் நின்றிருந்தால் உள்ளூராட்சித் தேர்தலை காலவரையறையின்றி ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருக்கும். தமிழ் கட்சிகள் சில ஊசலாடத் தொடங்கியதே உறுதியான முடிவுக்கு வரமுடியாமைக்கான காரணம் என்று கூறப்படுகிறது.

# கருணாநிதி மீது கண்டனம்

"தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் தமிழ் நாட்டிலுள்ள இன உணர்வாளர்கள் கைது செய்யப்படுகின்றனர். இது ஒரு பாசிசப் போக்காகும்." இவ்வாறு தமிழ் தேசியக் கட்சித் தலைவர் பழ.நெடுமாறன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை தமிழக முதலமைச்சர் சுமத்திவருகிறார். அதற்குப் பதில் சொன்னால் கைது செய்கிறார்கள்.

ஈழத் தமிழரின் பிரச்சனை பற்றிப் பேசும்போது விடுதலைப் புலிகளைத் தவிர்த்துவிட்டு பேசமுடியாது என்றும் நெடுமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இயக்கத்தில் இணைய அழைப்பு!

கிழக்கில் பெண்களைத் திரட்டுவதில் புலிகள் இயக்க மகளிர் பிரிவினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மகளிர் படையில் பெண்களை இணைந்து கொள்ளுமாறு கோரி புலிகள் இயக்க மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மகளிர் பிரிவு பிரசுரங்களை விநியோகித்து வருகிறது.

"பெண்ணினத்துக்கு எதிரான வன்முறைகள் இன்று உலகெங்கும் பெருகி வருகின்றன. அவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல தமிழீழ மாதருக்கு எதிரான திட்டமிட்ட அக்கிரமங்கள் அரங்கேறுகின்றன.

கிருஷாந்தி, ராஜினி போன்றோருக்கு நேர்ந்த கொடூரங்கள் மட்டுமே வெளியில் வந்தாலும் உள்ளத்தைப் பிழியும் சம்பவங்கள் பல இன்னமும் உள்ளுக்குள்ளேயே உறைந்து கிடக்கின்றன.

இவை மட்டுமல்ல, சீதனம், சாதீயம், நம்பிக்கை மோசடி, சமூகத்தின் பழமைவாதம் போன்ற கொடிய நோய்களும் எங்கள் சகோதரிகளைக் கொல்லாமல் கொல்லுகின்றன.

தமிழீழ புத்திரியாய் பிறந்ததில் பெருமை கொள். போர்க்குணம் எங்கள் பெண்மைக்குப் புதிதல்ல. உனக்காக- உனது உரிமையை வென்றெடுக்க இன்றே புறப்படு. புலிகளின் மகளிர் படையில் இணைந்திடு!" இவ்வாறு அப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒத்துழைக்கக் கோரும் படையினர்

'அரச ஊழியர்கள்' என்னும் பெயரில் வெளியாகியுள்ள பிரசுரம் ஒன்று படையினரால் விநியோகிக்கப்பட்டுவருகிறது. அப்பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

"எல்.ரி.ரி.ஈ.யினர் தாம் போர் வீரர்கள் என்று பொய்யான சொரூபத்தை முழு உலகத்திற்கும் காண்பிக்க முயல்கின்றனர்.

இன்னும் சில தினங்களில் அல்லது மாதங்களில் எல்.ரி.ரி.ஈ. கெரில்லாக்கள் முற்றிலும் அழிந்து போவார்கள்.

இலங்கையில் வாழும் அனைத்துப் பிரஜைகளினதும் நன்மை கருதியே அரசாங்கம் தீர்வு யோசனைகளை முன்வைத்துள்ளது.

சரியான உறக்கமின்றி, ஒழுங்கான கல்வியின்றி, நல்லொழுக்கமுறையின்றி பயங்கரவாதத்தால் துன்பப்படும் உங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றவே நாம் முயற்சிக்கின்றோம். ஆகையால் எங்கள்மீது நம்பிக்கை வைத்து முழு ஒத்துழைப்பு வழங்குங்கள். எதிர்காலத்தில் நடைபெறப் போகும் அழிவில் இருந்து எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொள்ள உறுதி கொள்ளவும்." இவ்வாறு அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் புலிகளுக்குத் தடை?

## உளவு நிறுவனம் தகவல் திரட்டல்!

அமெரிக்காவில் எல்.ரி.ரி.ஈயினரின் நடவடிக்கைகளுக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைப்பதற்கு கிளிண்டன் நிர்வாகம் நடவடிக்கை எடுக்கக்கூடும் என்று ஆங்கில வார ஏடான 'சண்டே லீடர்' செய்தி வெளியிட்டிருக்கிறது. அமெரிக்க புலனாய்வுத்துறைகளில் ஒன்றான எஃப்.பி.ஐ. (FBI), எல்.ரி.ரி.ஈ. தொடர்புடையவர்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலனாய்வுத்துறைக்குப் போதுமான ஆதாரங்கள் கிடைக்குமானால் எல்.ரி.ரி.ஈ.யினருடன் தொடர்புடையவர்கள், அனுதாபிகள் போன்றோர் நாடு கடத்தப்படுவர். அது மட்டுமல்லாமல் எல்.ரி.ரி.ஈ.யினரை உலகளாவிய அளவில் தடுப்பதற்கு ஐ.நா. சபையை கிளிண்டன் நிர்வாகம் தூண்டக்கூடும் என்றும் இராஜதந்திரி ஒருவர் தெரிவித்ததாக அப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

அமெரிக்காவில் செயலாற்றும் எல்.ரி.ரி.ஈ. இயக்க ஆதரவாளர்களின் விபரங்களை தருமாறு வாஷிங்டனிலுள்ள இலங்கை தூதரகத்தில் இயங்கும் உளவுப் பிரிவை அமெரிக்க அரசாங்கம் சில காலத்துக்கு முன்னர் கேட்டிருந்தது. ஆனால் தூதரகத்தினரால் அத்தகைய தகவலைத்தர முடியவில்லையாம்.

இருப்பினும், புலிகளுக்காக நிதி சேகரிக்க அமெரிக்காவில் பலமுகவர்கள் இருப்பதாக தூதரக உளவாளிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் நிரூபிப்பதற்கேற்ற ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லையாம்.

# திருமலையில் ஜனவரி முதல் புதிய கட்டுப்பாடு!

## 'காவலரணில் அடையாள அட்டையை ஒப்படைக்கவேண்டும்'

(திருமலை நிருபர்)

வெளிமாவட்டங்களிலிருந்து அலுவல்கள் நிமித்தம் திருகோணமலை நகருக்கு வருபவர்கள் தங்கள் தேசிய அடையாள அட்டைகளை இனிமேல் நகர நுழைவாயிற் காவலரண்களில் ஒப்படைத்த பின்னரே நகரத்துள் நுழைய அனுமதிக்கப்படுவார்கள்.

சமீபத்தில் திருக்கோணமலை பொலிஸ் நிலையத் தலைமையகத்தில் இடம்பெற்ற சமாதானக் குழுக்களுடனான சந்திப்பில் பொலிஸ் அதிகாரிகள் இந்த முடிவைத் தெரிவித்துள்ளனர்.

இந்த நடைமுறை ஜனவரிமாதம் தொடக்கம் அமுலுக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் பிரகாரம் வெளியார்கள் தாங்கள் வரும்பொழுது சந்திக்கும் நுழைவாயிற் காவலரணில் தங்கள் அடையாள அட்டைகளை ஒப்படைத்துவிட வேண்டும்.

அதற்குப் பதிலாக அவர்கள் தங்கவிருக்கும் இடத்தின் முகவரி, திரும்பிச் செல்லவிருக்கும் திகதி என்பவை பதியப்பட்டு அட்டையொன்று வழங்கப்படும். திரும்பிச் செல்லவிருக்கும் தினத்தன்று அதே காவலரணுக்குச் சென்று அட்டையை ஒப்படைத்து அடையாள அட்டையைப் பெற்று பயணத்தைத் தொடரலாம்.

இதேவேளையில் வெளியார் தங்கியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர், தங்கியிருப்போர் விபரங்களைப் பொலிஸாரிடம் பதிந்து கொள்ள வேண்டுமென்ற தற்போதைய நடைமுறையும் தொடர்ந்து அமுலிலிருக்கும்.

உரிய நாட்களில் வெளியார் திரும்பிச் செல்லாவிட்டால் கண்டுபிடிக்கவும், விடுதலைப்புலிகளின் ஊடுருவலை நகருக்குள் தடுக்கவும் இந்த முறை பெரிதும் பயன்படும் எனப் பொலிஸார் நம்புகின்றனர்.

# "பிரபாகரனிடம் போ!" ஒரு தாதியின் சினம்

(காரைதீவு நிருபர்)

கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் ஆறாம் ஆண்டு படிக்கும் மாணவி ஜெ.சரண்யா. வயது11.

தொண்டையில் ஒரு கட்டி வளர்ந்தமையால் சரண்யாவுக்கு கல்முனை மற்றும் மட்டக்களப்பு வைத்திய சாலைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

அவற்றால் பயன் எதுவும் ஏற்படாமையால் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு சரண்யா அனுப்பப்பட்டார். அவரது தாயாரும் கூடச் சென்றார்.

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சரண்யாவுக்கு சிகிச்சை செய்த டாக்டர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். மிகவும் பரிவுடன் அவர் நடந்துகொண்டார். ஆனால் அங்கு கடமையாற்றிய தாதி ஒருவர் பேசிய வார்த்தைகளும், நடந்து கொண்ட முறையும் சரண்யாவையும், தாயாரையும் கண்ணீர் விட்டுக் கலங்கச் செய்துவிட்டதாம்.

"வைத்தியம் செய்வது என்றால் பிரபாகரனிடம் போக வேண்டியதுதானே. இங்கே வந்து ஏன் கழுத்தறுக்கிறீர்கள்?" என்று திட்டித் தீர்த்து விடுவாராம். உரிய முறையில் மருந்துகளையும் தரமாட்டாராம்.

தற்போது சரண்யா இறந்து விட்டார். தாயார் கண்ணீருடன் சொன்ன தகவல்கள் தான் மேலே உள்ளவை.

# மன்னாரில் தொடரும் கைதுகள்! முஸ்லிம்கள் வெளியேறும் நிலைமை!!

(மன்னார் நிருபர்)

மன்னார்த்தீவில் வாழும் முஸ்லிம்கள் தற்போது எதிர்பாராதவிதமான பல சோதனைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

மன்னார் நகரில் உள்ள மூர் வீதி, உப்புக் குளம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த சில முஸ்லிம் இளைஞர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

கடந்த 7.12.96 அன்று மூர் வீதியிலுள்ள இரு முஸ்லிம் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின் மறுநாள் விடுதலை செய்யப்பட்டனர்.

1990ம் ஆண்டுக் காலப் பகுதியில் இராணுவ தொண்டர் படையில் இணைந்து கடமையாற்றியபின் விலகிய ஒரு சில முஸ்லிம் இளைஞர்களும் இப் பகுதியில் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1991 ம் ஆண்டு மீள்குடியேறிய மன்னார்த்தீவு முஸ்லிம்கள் இவ்வாண்டின் நடுப் பகுதிவரை எந்தவிதமான பிரச்சனைகளுமின்றியே வாழ்ந்து வந்தபோதிலும் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்குதல்கள் இப்பகுதியில் தொடர்ந்தும் இருப்பதா இல்லையா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

மன்னார்த்தீவில் தொடரும் இவ்வாறான கைது நடவடிக்கைகள் இப்பகுதி முஸ்லிம்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. இனியும் இங்கிருப்பதில் அர்த்தமில்லை என முஸ்லிம் அரச ஊழியர் ஒருவர் குறிப்பிட்டார்.

# இடர்க்கொடுப்பனவு தடைப்படுவது ஏன்?

## ஆசிரியர்கள் திரண்டு போர்க் கொடி!

(திருமலை நிருபர்)

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்களது பதினெட்டு மாதகால இடர்க் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படாததைக் கண்டித்தும், உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கத் தூண்டியும், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் குழுமி ஒருநாள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

டிசம்பர் 4ந் திகதி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மூதூர், கந்தளாய், திருகோணமலை ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரியர்கள் ஒருமித்துக் கலந்துகொண்டு தமது எதிர்ப்பைக் காட்டினர்.

கோமரன்கடவை, சேருவிலை ஆகிய பகுதிகளிலிருந்து ஆசிரியர்கள் வந்து போராட்டத்தில் கலந்து கொண்டபோதிலும் நகரத்தின் சில முன்னணித் தமிழ்ப் பாடசாலைகளிலிருந்து ஒரு ஆசிரியர்கூட கலந்து கொள்ளாமல் இருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களைப் புகழ்ந்து அவர்களைச் சமாதானப்படுத்த கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா முயன்றபோது "சுற்றி வளைக்கவேண்டாம்; விடயத்துக்கு வாருங்கள்" என்ற குரல்களும் 'நல்ல நடிகர்' என்ற குரல்களும் ஆசிரியர்களிடமிருந்து எழுந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

போராட்டத்தின் தொடர்ச்சியாக, க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை சம்பந்தமாக, உதவிப் பரீட்சை ஆணையாளரால் வியாழனன்று திருக்கோணமலையில் ஒழுங்குபடுத்தப்பட்ட கலந்துரையாடலில் ஆசிரியர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. மாற்று நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் பரீட்சைகள் நடத்துவதில் இடையூறு ஏற்படலாம் எனக் கல்வி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

"இடர்க் கொடுப்பனவை வழங்கும் வரை எமது நிலைப்பாடு மாறாது" என ஆசிரிய சங்கங்கள் பிடிவாதமாக இருக்கின்றன.

இதேவேளை தமிழாசிரியர் சங்கத்தில் ஒரு பகுதியினர் கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் பணியாற்ற முன்வந்துள்ளனர். இதனால் தமிழாசிரியர் சங்கத்தில் பிரச்சனைகள் தோன்றியுள்ளன.

'தமிழாசிரியர் சங்கம் வரலாற்றுத் துரோகம் செய்துவிட்டது' என்று இடர்க் கொடுப்பனவு நடவடிக்கைக் குழு வெளியிட்டுள்ள பிரசுரத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒத்துழைக்கப் புலிகள் இணக்கம்

(ஏறாவூர் நிருபர்)

கடந்த இரு மாதங்களாகத் துண்டிக்கப்பட்டிருந்த மட்டக்களப்புக்கான மின்சார விநியோகம் சென்ற 05.12.96 முதல் திருத்தியமைக்கப்பட்டுள்ளதால் மீண்டும் இம் மாவட்டத்திற்கான மின் விநியோகம் முழுமையாகக் கிடைத்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் விநியோகம் அம்பாறை-இங்கினியாகலை ஊடாகவும், ஹபறணை ஊடாகவும் வழங்கப்படுகிறது. இதில் இங்கினியாகலை ஊடான மின் வழங்கலை புலிகள் கடந்த ஒக்டோபர் மாதம் போரதீவில் சேதப்படுத்தித் தடைப்படுத்தினர். அங்கு திருத்த வேலைக்குச் சென்ற இ.மி.ச. ஊழியர்களையும், வாகனத்தையும், உபகரணங்களையும் புலிகள் பிடித்து வைத்திருந்தனர். ஹபறணை ஊடான மின் விநியோகத்தையும் புலிகள் அவ்வப்போது தடைப்படுத்தி வந்ததால் மட்டக்களப்பு இருளிலேயே ஸ்தம்பிக்க வேண்டியதாயிற்று.

தற்சமயம் மின்சாரத் திருத்த வேலைகளுக்குப் புலிகள் இணங்கியதைத் தொடர்ந்து மின் விநியோகம் சீரடைந்துள்ளது.

# தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒருவர் தற்கொலை!

## ஏனையோர் சம்பவத்தின் பின்னர் விடுதலை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பைச் சேர்ந்த நகை வேலை செய்யும் ஐவர் கடந்த 40 நாட்களுக்கு மேலாகப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். போரதீவிலுள்ள காளியம்மன் ஆலயத்தில் இந்த ஐவரும் தீப்பாய்ந்து கொண்டிருக்கும்போது இவர்களின் தேசிய அடையாள அட்டைகளைப் புலிகள் எடுத்துக்கொண்டு தம்மை வந்து சந்திக்குமாறு கூறியிருந்தனர். அதன் பின்னர் இந்த ஐவரும் புலிகளின் அழைப்பையேற்றுச் சென்ற வேளையிலேயே நிதிகேட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வே.சுப்பிரமணியம் (55), நகை வியாபாரி, இ.அமிர்தலிங்கம், நகைவியாபாரி-கொழும்பு, கா.முத்துலிங்கம், நகை வியாபாரி-மட்டக்களப்பு, சகோதரர்களான சி.குமாரசிங்கம், சி.பூபாலப்பிள்ளை, லங்கா ஜுவலர்ஸ்-மட்டக்களப்பு ஆகியோரே புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்தோராவர்.

இவர்களில் சுப்பிரமணியத்தைத் தவிர மற்றைய நால்வரிடமும் தலா 25 இலட்ச ரூபாவைப் புலிகள் நிதியாகக் கேட்டிருந்தனர். சுப்பிரமணியத்திடம் 5 இலட்ச ரூபாவே கேட்கப்பட்டது. அத்தொகையில் ஒரு இலட்ச ரூபாவைக் கொடுத்த சுப்பிரமணியம் மிகுதிப் பணத்தைத் தான் விடுதலையானதும் சம்பாதித்துத் தருவதாகக் கூறியிருந்தாராம். எனினும் புலிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. இதனால் மனமுடைந்த நிலையில் அவர் காணப்பட்டாராம். அவ்வேளையில் அவரது உறவினரிடம் புலிகள் சென்று "உங்களது கணவரை விடுவித்துவிட்டோம். வரவில்லையா?" என்று கேட்டிருக்கிறார்கள். பின்னர் கடந்த 30.11.96 அன்று அவரது சடலத்தை முதிரை மரப் பெட்டிக்குள் பக்குவம் செய்து உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர். புலிகள் தன்னை விடுவிப்பார்கள் என்பதில் நம்பிக்கையிழந்திருந்த அவர் மனமுடைந்து பாழடைந்த கிணறொன்றில் குதித்துத் தற்கொலை செய்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இத்தற்கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த 02.12.96 அன்று புலிகள் தாம் பிடித்து வைத்திருந்த ஏனைய நான்கு நகை வியாபாரிகளையும் விடுதலை செய்தனர்.

சமீப சில நாட்களாக மட்டக்களப்பில் நிதி வசூலிப்பு நடவடிக்கையைப் புலிகள் தீவிரப் படுத்தியுள்ளனர். பெரும் புள்ளிகள், வர்த்தகர்கள், அரச ஊழியர்கள், வெளிநாடு சென்றுள்ளோர் என்று அப்பட்டியல் நீண்டு செல்கிறது.

# முட்டுக் கட்டை போடும் மும்மூர்த்திகள்

## அபிவிருத்திப் பணிகளில் குறுக்கீடு

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மூன்று தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பத்திரிகைகளில் தங்கள் பெயர்கள் இடம்பெறவேண்டும் என்ற காரணத்துக்காகத்தான் பாடுபடுகிறார்களே தவிர அம்மாவட்டத்துக்கான எத்தகைய அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபடுவதாகத்தெரியவில்லை.

மட்டக்களப்பு மாநகரிலுள்ள பொது மருத்துவமனை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல இலட்சம் மக்களுக்கு மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை, காரைதீவு, நிந்தவூர் மற்றும் படுவாங்கரையிலுள்ள பழுகாமம், மண்டூர், கொக்கட்டிச்சோலை ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கும் பயன்படும் ஓரிடமாகும். இந்த மருத்துவமனையில் 1974ம் ஆண்டுக்குப் பின்னர் எத்தகைய அபிவிருத்திகளும் இடம்பெறவில்லை.

இங்குள்ள சத்திரசிகிச்சைக்கான அறைகள் 19ம் நூற்றாண்டுக்குரியவை போலுள்ளன. சாதாரண மழைக்கே ஒழுகத் தொடங்கிவிடும். நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறுவதற்குரிய வார்டுகள், அந்நோயாளிகளுக்கு மேலும் பல நோய்களைத் தொற்ற வைக்கும் நிலையில்– சுகாதாரக் கேடுள்ளவைகளாகக் காணப்படுகின்றன. மலசல கூடங்கள் யாவும் படுமோசமான நிலையிலுள்ளன.

குழந்தைகளுக்கான வார்டில் மொத்தம் 30 கட்டில்களே உள்ளன. பெரும்பாலும் அந்த வார்டின் தரைகளில் மேலும் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் படுத்துக்கிடப்பதைக் காணலாம். இவ்வாறு இவ்வைத்தியசாலையின் குறைபாடுகளை அடுக்கிக் கொண்டேபோகலாம். மருந்துகளுக்கான தட்டுப்பாடு, மருத்துவர்களுக்கான தட்டுப்பாடுகள் பற்றியெல்லாம் விபரிக்கத் தேவையில்லை.

### முட்டுக்கட்டை

இந்த மருத்துவமனையின் நிர்வாகிகளும் இயக்குநரும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பல முறை வேண்டியும் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பிரதி அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, சுகாதார அமைச்சர் ஏ.எச்.எம். ஃபௌசியிடம் இம்மருத்துவ மனையைச் சீர்திருத்தித்தரும்படி கோரிக்கை விடுத்தார். ஆனால் அமைச்சரோ நிதி பற்றாக்குறை என்று கூறி நழுவிவிட்டார்.

ஹிஸ்புல்லா நேரடியாக ஜனாதிபதியை அணுகி இம்மருத்துவமனை சீர்திருத்தத்துக்காக ரூபா 3 கோடிக்கான காசோலையைப் பெற்று அதன்மூலம் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதனை அறிந்த தமிழ் எம்.பிக்கள் மூவரும் சுகாதார அமைச்சர் ஃபௌஸியை அணுகி தங்களுக்குத்தெரியாமல் தங்கள் தொகுதிக்குள் அபிவிருத்திப் பணிகளுக்கு எவ்வகையில் பணம் ஒதுக்க முடியும்,

**மட்டக்களப்பு தபால்**

என்று குமுறியிருக்கின்றார். ஜனாதிபதி பணம் கொடுத்த விடயம் அமைச்சருக்கே தெரிந்திருக்கவில்லை. அதன் பிறகுதான் அவருக்கும் தெரியவந்திருக்கிறது.

### ஹிஸ்புல்லாவின் முயற்சி

மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே– புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள படுவான்கரைப் பிரதேசத்தில் சில அபிவிருத்திகளை மேற்கொள்ளுவதற்கு புலிகளின் ஒப்புதலை ஹிஸ்புல்லா பெற்று, சில தெருக்களையாவது பழுது பார்க்கும் பணிகள் தொடங்கிவிட்டன. இப்பணிகளைத் தொடர்வதுக்கும் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் முட்டுக்கட்டை போடுவதாகத் தெரிகிறது.

மகிழடித்தீவுக்கிராமத்துக்கு தனி இயந்திர சாதனம் மூலம் மின்சாரம் வழங்குவதற்கு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா முழு ஏற்பாடுகளையும் செய்து முடித்துவிட்ட நிலையில் அப்பணியையும் அமுலாக்க விடாமல் இந்தப் பா.உக்கள் தடுப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

### சமுர்த்தியில் தலையீடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்தி நியமனங்களை வழங்குவதிலும் இம்மும்மூர்த்திகள் முட்டுக்கட்டை போட்டிருப்பதாகவும் தெரிகிறது.

யுத்தம் காரணமாக வடக்கு–கிழக்கில் சமுர்த்தித்திட்டத்தை அமுல் செய்ய முடியவில்லை என்று அரசாங்கம் சாக்குப் போக்குச் சொன்னது.

அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளிலாவது நடைமுறைப்படுத்தலாமே என்று ஈ.பி.டி.பி.பாராளுமன்ற உறுப்பினர்கள் வற்புறுத்தியதின் பேரில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கோட்டா அடிப்படையில் பட்டியல் தயாரிக்கப்பட்டு பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் ஏறத்தாழ 1000 இளைஞர்கள் மாதாந்தம் ரூபா 2,500 வேதனமாகப் பெறுவார்கள். இந்தப் பட்டியலில், கூட்டணி யினர்கொடுத்த பெயர்களுடன் ஏனைய சில கட்சி பா.உக்கள் கொடுத்த நபர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

இதனையும் இடையில் புகுந்து கூட்டணியினர் தடுத்து விட்டனர். இந்நியமனங்கள் அத்தனையும் தங்களுடைய விருப்பத்தின் படியே நடைபெறவேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கை.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற– படித்த இளைஞர்கள் 1000 பேருக்கு மாதாந்தம் ரூ 2500 வீதம் வருமானம் கிடைப்பதை இவர்கள் தடுத்துவிட்டனர்.

ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுக்கும் 3 ஊக்குவிப்பாளர் வீதம் நியமிக்கப்படுவார்கள். ஆரம்பத்தில் கிராம சேவகர் பிரிவுக்கு ஒருவர் வீதமே நியமனங்கள் வழங்கப் படவிருந்தன. அதுவும் தடைப்பட்டுவிட்டது.

அம்பாறை மாவட்டத்தில் டிசம்பர் 19ம் திகதி, இரண்டாம் கட்ட நியமனங்கள் வழங்கப் படவுள்ளன. கூட்டணியினரின் தலையீட்டினால் மட்டக்களப்பில் முதலாவது கட்ட நியமனமே தடைப்பட்டுவிட்டது. –கீரன்.

# வேலை நிறுத்த முஸ்தீபு!

(மன்னார் மாவட்ட நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் கடமை புரியும் அரச ஊழியர்களுக்கு 'வன்முறைப் பிரதேசங்களில்' கடமை புரிபவர்களுக்காகக் கொடுக்கப் பட வேண்டிய ஆபத்துக்கால ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் காட்டப் பட்டு வருகிறது.

இருந்தபோதிலும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உட்பட சில துறைகளைச் சார்ந்தவர்களைத் தவிர ஏனைய ஊழியர்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

மிகவும் அதிகளவு அரச ஊழியர்களைக் கொண்ட மேற்படி துறையினருக்கு, இக்கொடுப்பனவு வழங்குவதில் தாமதம் காட்டினால் மிக விரைவில் பொது வேலை நிறுத்தத்தில் இறங்கப் போவதாக தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட வேண்டிய இக் கொடுப்பனவுகள் ஆண்டு முடிவடையும் தறுவாயில் உள்ள இவ்வேளையில் வழங்கப்படாதது குறித்து இப்பகுதி அரச ஊழியர்கள் கடும் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

# சமுர்த்தித் திட்டம்! மலையகத்தின் ஏமாற்றம்!

வடக்கு, கிழக்கு மற்றும் மலையக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே சமுர்த்தி முகவர்களை நியமித்து, அதன் மூலம் மக்கள் பயன்பெற்று வருகிறார்கள். பொதுசன ஐக்கிய முன்னணி அரசு இதன் மூலம் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றி வருவதாக கூறி வருகின்றது.

ஆனால், மலையகத் தமிழர்களை இவ்விடயத்தில் ஏன் புறக்கணித்து வருகின்றது என விளங்கவில்லை. சமுர்த்தி முகவர்களை இப்பகுதியில் நியமிக்காமல் இருப்பதினால், வருமானமில்லாத குடும்பங்கள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகி, பிச்சை எடுக்கும் நிலை மலையகத்தில் உருவாகியுள்ளது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சமுர்த்தி முகவர்களில் சிலர் இனவாத ரீதியில் நடந்து கொள்வதாகவும் முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

எந்தப் பிரச்சனைக்கும் காலதாமதமாக தீர்வு காண்பது அர்த்தமற்ற செயலாகும். இந்த நடைமுறையை தமிழ் மக்கள் விடயதில் கடந்த காலத்தில் மேற்கொண்டதால் இன்று இந்நாட்டில் நடைபெறும் நிகழ்வுகளை இந்நாட்டு மக்கள் அறியாததல்ல. மலையக மக்கள் மத்தியில் இந்நடைமுறையை கையாள வேண்டாம்.

இவ்வருட வரவு–செலவு திட்டத்திற்கு முன் மலையக பகுதியில் சமுர்த்தி முகவர்கள் 475 பேர் நியமிக்கப்படுவதாக அண்மையில் அறிவிக்கப்பட்டது. அவர்களின் பெயர்களும் பிரதேச செயலாளர் செயலகத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்கள் 16.11.1996 அன்று அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டனர்.

இந்நியமனத்தை ஆவலுடன் எதிர்பார்த்து, பிரதேச செயலாளர் அலுவலகம் சென்றவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

இந்நியமனம் வரும் என்ற எண்ணத்தில் இருப்பவர்கள் ஏமாற்றத்துக்கு உள்ளாகினர்.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு அமைக்க ஆதரவளித்தவர்கள் என்ற முறையில் இந்த நியமனத்தை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சகல மக்கள் மத்தியிலும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்ற மனோநிலை உருவாகி வருகின்றது.

பொதுசன ஐக்கிய முன்னணி, மக்கள் மத்தியில் நீடிக்க வேண்டுமென்றால் தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

– வீ.டி.தர்மலிங்கம்,
*துணைத் தலைவர், மலையக மக்கள் முன்னணி.*
*மத்திய மாகாண சபை உறுப்பினர்.*

# விசர் நாய்க்கடிக்கு மருந்தில்லை!

## அம்பாறை மாவட்டத்தில் திண்டாட்டம்!

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் விசர்நாய்க்கடிக்கு ஏற்றும் தடுப்பு ஊசி மருந்துக்கு (ANTI RABIES VACCINE) பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

குறிப்பாக மாவட்டத்தின் கரையோரப் பகுதி தமிழ்–முஸ்லிம் பிரதேசங்களில் விசர் நாய்த் தொல்லை அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது.

இதனால் விசர் நாய்க்கடிக்குள்ளாகும் பொதுமக்கள், சிறுவர்களது தொகை அதிகரித்துள்ள இவ்வேளையில் இப்பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளில் விசர் நாய்க்கடிக்கு ஏற்றும் தடுப்பு ஊசி மருந்துகள் கைவசம் இல்லாத அவலம் ஏற்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனைக்குடி, கல்முனை, சம்மாந்துறை போன்ற இடங்களிலுள்ள அரசினர் வைத்தியசாலைகளில் இந்த ஊசிமருந்து இன்மையால் மக்கள் பெரும் திண்டாட்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.

விசர் நாய்க்கடிக்குள்ளாகியோர் இந்த தடுப்பு ஊசியை ஏற்றுவதற்காக மட்டக்களப்பு, கண்டி, கொழும்பு போன்ற இடங்களை நாடவேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒருமாத காலமாக இந்தத் தட்டுப்பாடு நிலவி வருவதாக அறிய வருகின்றது.


**U.S.A GREEN CARDS**

அமெரிக்க அரசாங்க லொத்தர் சீட்டிழுப்பு முறையின் கீழ் 55,000 விசாக்கள் (GREEN CARDS) வழங்கப்படவிருக்கின்றன.
தெரிவு செய்யப்படுபவர்கள், அவர்களது துணைவர், பிள்ளைகள், அமெரிக்காவில் குடியேறமுடியும்.
இலவச விபரங்களுக்கு தபால் மூலம் தொடர்புகொள்க:
LAW ASSOCIATES
P.O.BOX 33, DEHIWALA.

**வத்தளையில்**

5.8 பேர்ச்சஸ் உடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. குளாய்க்கிணறு வசதியும் உண்டு.
தொடர்பு–332551
கா.கமலநாதன்
73, ஸ்ரீவிக்கிரம மாவத்தை, கல்வெட்டி, வத்தளை.

**வத்தளையில்**

தினமுரசு விற்பனை முகவர் தேவை. முற்பணம் செலுத்தக் கூடியக்கடை உரிமையாளர்கள் நேரில் வரவும்
நிர்வாகி

**UNION**

யூனியன் மோட்டிஸ் கதவு பூட்டுக்கள்
Single, Double, Night Latch & Sliding Locks, (English Origin)
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு - 12.
தொலைபேசி - 431511, 434411

**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
சந்திரன்
144 2/1, காலிவீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
T.P: 586218, 078-63611
Fax: 503030

**1997ம் ஆண்டுக்கான**

பொதுக் கலண்டர்கள்.
அழகுக்கும் பாவனைக்கும் !
அழகிகள், வண்ண மலர்கள், வாகனங்கள், வனஜீவ ராசிகள், மற்றும் இயற்கைக் காட்சிகள் என்பவற்றைப் பிரதிபலிக்கும் கலை நயம் மிகுந்த கண்கவர் கலண்டர்களை நாம் உருவாக்குகிறோம்.
ஆண்டு முழுவதும் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் அற்புதமான புகைப்படங்களுடன், உயர்ந்த தரத்தில் அச்சிடப்பட்டுள்ளன.
ஆகக் குறைந்தது 500 கலண்டர்களை கொள்வனவு செய்து இலண்டனுக்குச் செல்ல இலவச விமான டிக்கெட்டை பரிசாகப் பெறலாம்.
தேர்ந்தெடுக்கப் பலரகங்கள்.
இலவசக் கையேட்டுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.



Fast Print Service (Private) Limited
Dawatagahawatta Road, Off Kandawela Road, Ratmalana.
Telephone: 633131/610906

**வெள்ளவத்தையில்**

ROYAL SHELTER PROMOTERS வழங்கும்
மற்றும் ஒரு தொடர்மாடி வீடுகள்
No 5, FRANCES ROADல்
உறுதியான அழகிய கட்டட அமைப்பில் குறைந்த விலையில் இன்றே உங்களுக்கென்று ஒரு வீட்டை பதிவு செய்துகொள்ளுங்கள்.
2- BED ROOMS
படுக்கை அறையுடன் குளியல் அறை இணைப்பு
வசதியான வரவேற்பறை
LANKA TILES தள அமைப்பு
வெளிநாட்டின் குளியலறை இணைப்புக்கள்
நவீன பெண்றி கபட்
டிஸ் அண்டானா
5 நிமிட நடக்கும் தூரத்தில்:
- காலி வீதி
- மார்க்கட்
- பாடசாலை
- பஸ் நிலையம்
- ரயில் நிலையம்
- வங்கிகள்
- மத வழிபாட்டு நிலையங்கள்

ROYAL SHELTER PROMOTERS
18/1, 1st CHAPAL LANE, COLOMBO-06.
FAX: 595580

விளம்பரப் பகுதி

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPHY)**

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனத்தில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் P. ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. (விடுமுறை நாட்களில் சந்திக்கவும்.)

டிசம்பர் 19 முதல் 31 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO:10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST., Opposite Ranjanas) COLOMBO 11. T.P. 436383, 436390, 078-71101 ஜனவரி 4, 5 Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், ஜனவரி 11, 12, 13 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR.P.ARUMUGAM No:33, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தரையிறக்கமும் - தரை நிலவரமும்

**பா**துகாப்பு பிரதியமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்கும், புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் டிசம்பர் 7ம் திகதிதான் மறக்க முடியாத நாள்.

டிசம்பர் 7ம் திகதியை தனது அதிர்ஷ்டமான தினமாக அனுருத்த ரத்வத்தை இனி எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார். அதே நாளை தனது துரதிர்ஷ்டமான நாளாக பிரபாகரனும் மறக்காமல் நினைவில் வைத்திருப்பார்.

வெலி ஓயாவுக்குச் சென்று கொண்டிருந்த அமெரிக்கத் தயாரிப்பான பெல் 412 ரக ஹெலிக்கொப்டர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் காலை 9 மணியளவில் தரையிறங்கியது.


தரையிறங்கினாலும் ஆபத்து, தரையிறக்காவிட்டாலும் ஆபத்து என்ற கட்டத்தில் தான் ஹெலியை தரையிறக்கினார் விமானி.

ஹெலி தரையிறங்கிக் கொண்டிருந்த போது உள்ளே இருந்தவர்களின் மனநிலை எப்படியிருந்திருக்கும் என்பது கற்பனைக்கும் எட்டாத ஒரு விஷயம்.

தரையிறங்கியவுடன் ஆயுதமேந்திய புலிகளால் தாம் சுற்றிவளைக்கப்படுவோம் என்று அவர்கள் நினைத்திருப்பர்.

பாதுகாப்பு விதிமுறைகளின்படி ஒரே வாகனத்தில் முக்கியமானவர்கள் பலர் பயணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும்.

ஊர்காவற்துறையில் ஒரே வாகனத்தில் சென்றபோதுதான் டென்சில் கொப்பக்கடுவ




உட்பட படை உயரதிகாரிகள் மூவர் பலியானார்கள்.

ஒரே வாகனத்தில் ஏன் சென்றார்கள்? என்று அப்போது சந்தேகம் எழுப்பப் பட்டது.

அதே தவறை இப்போது மீண்டும் செய்தபோதும், ஆபத்திலிருந்து மீண்டுவந்துவிட்டதுதான் பேராச்சரியமாகிவிட்டது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை, இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தலுவத்த, பொலிஸ் மா அதிபர் டபிள்யூ. பி. ராஜகுரு உட்பட உயர் அதிகாரிகள் ஒன்றாகவே பயணம் செய்திருக்கிறார்கள்.

புலிகளின் பிடியில் சிக்கியிருப்பார்களேயானால், முக்கிய தலைகள் எப்படி ஒன்றாகப் பயணம் செய்தனர் என்ற கேள்விதான் பெரிதாகக் கிளம்பியிருக்கும்.

முக்கிய தலைகள் தப்பிவந்துவிட்டனர் என்பதால் எழுந்த ஆச்சரியம் சில மிகைப்படுத்தல்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

"புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் தரையிறங்கிவிட்டு தப்பிவந்துவிட்டார்கள்" என்பதுதான் பத்திரிகைகளில் வெளியான தலைப்புச் செய்திகள்.

புலிகளின் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிக்கு மேலாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் செல்லும் ஹெலிகொப்டர் பறந்து சென்றிருக்க முடியாது.

புலிகளிடம் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் இருப்பதால், புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகாத பாதை வழியாகவே ஹெலிக்கொப்டரை செலுத்தியிருப்பார் விமானி.

வடபகுதி முகாம்களுக்கு செல்லும் விமானங்களும், ஹெலிகொப்டர்களும் புலிகளின் விமான எதிர்ப்புத் தாக்குதலுக்கு உள்ளாகாத பாதை வழியாகவே செல்கின்றன.

அதுவும் ஹெலிகொப்டரால் ஒரு குறிப்பிட்ட உயரத்துக்கு மேல் பறக்க முடியாது என்பதால், விமான எதிர்ப்பு ஆயுதங்களால் சுடப்படும் ஆபத்து இருக்கிறது.

வெலி ஓயா முகாமை நோக்கிப் பறந்த ஹெலிகொப்டரும் வன்னியில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை அண்டிய வான்பாதை வழியாகவே சென்றிருக்கிறது.

அவ்வாறு சென்றமையால்தான் பம்பைமடுப் பகுதியில் உடனடியாக தரையிறங்க முடிந்திருக்கிறது.

வவுனியாவுக்கு மேற்குப் பகுதியில் இராணுவக் காவலரன்கள் மன்னார் வீதிவரை அமைந் துள்ளன.

இராணுவத்தினரின் முன்னரங்க காவலரண்களில் இருந்து கிட்டத்தட்ட ஐந்து கிலோ மீற்றர்கள் தூரத்தில் உள்ள பகுதிதான் பம்பைமடு.

வவுனியாவின் மேற்கே பம்பைமடு இருக்கிறது. பம்பைமடுவுக்கும் இராணுவக் காவலரண்களுக்கும் குறுக்கே மடுறோட் இருக்கிறது. அந்த வீதியை குறுக்காகக் கடந்து சென்றால் காட்டுப்பகுதி வரும். அதையும் தாண்டினால்தான் பம்பைமடு கிராமம் இருக்கிறது.

அந்த இடைப்பட்ட காட்டுப்பகுதியில் படையினரும், புலிகளும் அதிகமாக நடமாடுவதில்லை. படையினரின் முன்னரங்க காவல் நிலைகளில் இருந்து மோட்டார் தாக்குதல் நடத்தக்கூடிய பகுதி என்பதால் புலிகள் அங்கு நிலைகொண்டிருப்பதில்லை.

தமது முன்னரங்க காவலரண்களின் பாதுகாப்புக்காக அக் காட்டுப்பகுதியை நோக்கி படையினர் திடீரென்று முன்னேறிச் சென்றுவிட்டு திரும்பிவந்துவிடுவர்.

இராணுவ முன்னரங்க காவல் அரண்களை தாக்குவதற்கு தகவல் திரட்டவும், கண்காணிக்கவும் புலிகள் இரவு நேரங்களில் அப்பகுதிகளில் நடமாடுவர்.

சமீபத்தில் வவுனியாவுக்கு மேற்கே உள்ள இராணுவக் காவலரண்கள் புலிகளால் தாக்கப்பட்டன. புலிகள் தாக்கிவிட்டுச் சென்றபின்னர் மீண்டும் இராணுவத்தினர் அங்கு நிலை கொண்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று புலிகளுக்கு சந்தேகம் இருக்கிறது.

அதனால் இரவு நேரங்களில் படையினரின் நடமாட்டங்களை கவனிக்க புலிகளின் உளவுப் பிரிவுவைச் சேர்ந்த இரண்டு மூன்றுபேர் மட்டும் அப்பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

இரவோடு இரவாக அல்லது அதிகாலை நேரத்தில்தான் படையினர் தமது நடவடிக்கைகளை ஆரம்பிப்பர். இதுவரைகால அனுபவம் அதுதான். அதனால் அதிகாலைவரை கண்காணித்துவிட்டு புலிகளின் உளவுப்பிரிவினர் திரும்பிச் சென்றுவிடுவார்கள்.

பம்பைமடு மிகப் பின்தங்கிய பழைய கிராமம். அங்கு பத்துக்கு உட்பட்ட குடும்பங்கள்தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக குடியிருக்கின்றன.

அதனால் அங்கு புலிகளின் முகாமோ காவல் நிலைகளோ கிடையாது. தினமும் ஒரு புலிகள் இயக்க உறுப்பினர் அங்கு பகலில் வந்து செல்வார். அவரை 'ஹெக்கி' எடுப்பவர் என்று அழைப்பார்கள்.

இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகள் எங்கும் புலிகள் அங்குலம் அங்குலமாக நிலைகொண்டிருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்ப்பவர்களுக்கு, டிசம்பர் 7ம் திகதிச் சம்பவம் பேராச்சரியம்தான்.

வவுனியாவில் இருந்து படையினர் செல்லாமல் இருந்தாலும், விமானப் படையினரின் ஹெலி அவர்களைக் கண்டிருக்காவிட்டாலும் தரையிறங்கியவர்கள் வவுனியா இராணுவ முன்னரங்க நிலைக்கு நடந்தே வந்திருப்பார்கள்.

பிரதிபாதுகாப்பு அமைச்சரும் இராணுவத்தில் பணியாற்றியவர். இராணுவத் தளபதியும், உயரதிகாரிகளும் அவருடன் இருந்தனர். அதனால் ஹெலி தரையிறங்கியதும் புத்திசாலித்தனமாக துரிதமாகச் செயற்பட்டனர்.

ஹெலி தரையிறங்கிய இடத்தின் அருகே உள்ள ஒரு தமிழ் விவசாயியை அழைத்துப் பாதையைக் காட்டுமாறு கேட்டுள்ளனர்.

வோக்கி டோக்கி இருந்தும்கூட அதனை உடனடியாகப் பயன்படுத்தவில்லை. வோக்கியில் தொடர்பு கொண்டால் அதனைப் புலிகள் இடைமறித்துக் கேட்டுவிடுவார்கள் என்பதால் மிக ஜாக்கிரதையாகவே செயற்பட்டுள்ளனர்.

வழிகாட்டிய விவசாயி நினைத்திருந்தால் புலிகளின் பகுதி நோக்கி திசைமாற்றி அழைத்துச் சென்றிருக்கலாமோ?

அப்படிச் செய்திருக்க முடியாது. வழக்கமாக விமானியிடம் திசையறிகருவியும், ஒரு கைத்துப்பாக்கியும் பையில் இருக்கும். எதிர்பாராத விபத்துக்களில் சிக்கினால் தப்பிவருவதற்குத்தான் அந்த முன்னேற்பாடு.

அதுதவிர தரையிக்கப்பட்ட பகுதி காட்டுப் பகுதி என்பதால் மறைந்து மறைந்து நோட்டமிட்டு முன்னேறும் சாதகம் இருந்திருக்கிறது.

சாதாரணமாக ஐந்து கிலோமீட்டர் தூரத்தை நடந்து கடப்பதற்கு ஒரு மணிநேரம் போதும். ஆனால் தரையிறங்கியவர்கள் இராணுவ முன்னரங்க நிலையைச் சமீபிக்க கிட்டத்தட்ட நான்கு மணிநேரங்கள் சென்றுள்ளன.

ஒவ்வொரு அடியையும் நிதானமாக எடுத்துவைத்து, நடமாட்டங்கள் இருக்கிறதா என்று நோட்டமிட்டு, தாம் செல்லும் திசை சரியாக இருக்கிறதா என்று உறுதிப்படுத்தியபடிதான் வந்திருக்கிறார்கள்.

வவுனியாப் பகுதி பரிச்சயமான வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் சுமதிபாலாவும் பிரதிபாதுகாப்பு அமைச்சருடன் சென்றமை மற்றொரு மேலதிகச் சாதகமாக அமைந்து விட்டது.

ஒரு வேளை புலிகள் அப்பாதை வழியாக வந்திருந்தால்கூட மறைந்து கொண்டு அவர்கள் கண்ணில்படாமல் தப்பியிருக்க முடியும்.

ஹெலிகொப்டர் தரையிறங்கும்போது புலிகள் கண்டிருந்தால் மட்டுமே ஆபத்தாகியிருக்கும். அல்லது பம்பைமடு கிராமம் ஜன நடமாட்டம் அதிகமுள்ள பகுதியாக இருந்திருந்தால் புலிகளுக்கு செய்தி போயிருக்கும்.

பிரதிபாதுகாப்பு அமைச்சரும், உயரதிகாரிகளும் சென்ற ஹெலிகொப்டரைக் காணவில்லை என்றதும் ஜனாதிபதியும், பாதுகாப்பு தரப்பினரும் நிலை கொள்ளாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

விமானப்படை ஹெலிகொப்டர் அவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டது.

ஆனாலும், இராணுவமுன்னரங்க நிலைகளுக்கு அருகே வந்து பிரதிபாதுகாப்பு அமைச்சரோடு வந்த இராணுவ உயரதிகாரிகள் வோக்கியில் தொடர்பு கொண்டபின்னர்தான் அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்ற விபரம் தெரியவந்தது.

அதன்பின்னர்தான் இராணுவத்தினர் தமது முன்னரங்க நிலைகளில் இருந்து முன்னேறிச் சென்றனர்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு இராணுவத்தினர் சென்றதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அவர்களைச் சந்திக்க முன்னரே துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி சென்றிருந்தால் அச்சத்தம் கேட்டு புலிகள் உஷாராகியிருப்பர்.

அதுதவிர தரையிறங்கியவர்கள் வந்து கொண்டிருக்கும் திசையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டு முன்னேறுவது அங்கிருந்து வருபவர்களுக்குத்தான் ஆபத்தாகிவிடும்.

பிரதி பாதுகாப்பு அமைச்சரும், உயரதிகாரிகளும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த பின்னர்தான் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக் கின்றனர்.

செய்தி அறிந்து புலிகளின் அணிகள் வரக்கூடும் என்பதால் தற்பாதுகாப்புக்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

ஹெலி தரையிறங்கிய பகுதியை நோக்கியும் படையினர் முன்னேறினார்கள்.

புலிகளின் கையில் சிக்கிவிடும் என்பதால் ஹெலியை உடனடியாகத் தகர்த்துவிடுமாறு உத்தரவிடப்பட்டது.

பிரதிபாதுகாப்பு அமைச்சரையும் உயரதிகாரிகளையும் படையினர் சென்று மீட்டு வந்தனர் என்பது சற்று மிகைப்படுத்தல்தான்.

தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்றப்பட்ட ஒரு பகுதியில் சிக்கிக்கொண்டால் எப்படி சமயோசிதமாக தப்பிக்கொள்ளவது என்பதும் இராணுவப் பயிற்சியில் இருக்கிறது.

அதற்கேற்ப துரிதமாகச் செயற்பட்டு மீண்டு வந்திருக்கிறார்கள்.

ஹெலிகொப்டர் தரையிறங்கியதை புலிகள் காணாமல் போனதுதான் அதிஷ்டம்.

ஹெலிகொப்டர் தரையிறங்கிய தகவல் எட்டாமல் போனதை நினைத்து பிரபாகரன் நிச்சயம் வருந்தியிருப்பார். யாழ் குடாநாட்டை இழந்தபோதுகூட அந்தளவு வருத்தப்பட்டிருக்கமாட்டார்.

புலிகளின் குரல் மிகச் சோகமாக அந்தச் செய்தியை அறிவித்தது. எனினும் அது குறித்து சொந்தக் கருத்து எதனையும் கூறவில்லை.

"மயிரிழையில் உயிர்தப்பி வந்தார்கள் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன" என்று மட்டுமே கூறியது புலிகளின் குரல்.

◆□□◆

நாரதர்

## தமிழ் கட்சிகளும்-புலிகளும் ஒருவரை ஒருவர் பயன்படுத்தும் தந்திரத்தோடுதான் செயற்படுகின்றனர். தமிழ் கட்சிகள் பலமானவையாக கருதப்படுவதை புலிகள் விரும்பவில்லை!

**ஏ**னைய தமிழ் கட்சிகளை கடுமையாகச் சாடுவதை புலிகள் சமீபகாலமாக நிறுத்திவைத்துள்ளனர்.

பாரிசில் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் ஏனைய தமிழ் அமைப்புக்களை குற்றம் சாட்டவில்லை.

அவ்வாறு குற்றம் சாட்டியதாக செய்தி நிறுவனம் ஒன்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் புலிகள் வெளியிட்ட அறிக்கையில் அப்படியான குற்றச்சாட்டு எதுவும் காணப் படவில்லை.

அதுமட்டுமல்லாமல், பின்னர் விடுத்த அறிக்கை ஒன்றில், "பாரிசில் நடவடிக்கையில் ஈடுபடுமளவுக்கு தமிழ் குழுக்கள் எதுவும் திறமையைக் கொண்டிருக்கவில்லை. அவற்றுக்கு அந்த வாய்ப்போ, வசதியோ கிடையாது. பாரிஸ் படுகொலைகள் முழுக்க முழுக்க சந்திரிக்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கையே!" என்று புலிகள் கூறியிருந்தனர்.

ஆனால் இந்த அறிக்கையை மட்டும் வைத்து ஒரு முடிவுக்கு வந்துவிடமுடியாது.

ஏனைய தமிழ் குழுக்கள் பலம் வாய்ந்தவையாக கருதப்பட்டுவிடக்கூடாது என்ற அக்கறையும் புலிகளின் அறிக்கையில் மறைமுகமாகத் தெரிகிறது.

தம்மைத் தவிர ஏனைய தமிழ் அமைப்புக்கள் பலமானவையும் அல்ல, தமக்கு ஒரு பொருட்டும் அல்ல. ஆனால் அவை விரும்பினால் தமக்கு கீழே, தமது கட்டளைப்படி செயற்படலாம் என்பதுதான் புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது.

அதே நேரத்தில் ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் தோன்றும் முரண்பாடுகளையும் இன்றைய காலகட்ட தேவை கருதி புலிகள் பயன்படுத்துகின்றனர்.

உதாரணமாக, அரசியல் தீர்வுப் பொதியை சகல தமிழ் கட்சிகளும் நிராகரித்திருப்பது புலிகளுக்குச் சாதகமான விஷயம்.

தாம் ஒரு அரசியல் தீர்வு யோசனையை முன்வைத்திருப்பதாக அரசாங்கம் வெளியுலகில் சொல்கிறது.

அரசை ஆதரிக்கும் தமிழ் கட்சிகள்கூட அதனை நிராகரித்துவிட்டன. நாம் எப்படி ஏற்கமுடியும்? என்று புலிகள் கேள்வி எழுப்ப முடிகிறது.

அதே நேரம் தமிழ் கட்சிகளும் மனம் திறந்த போக்கை மேற்கொள்வதாக கருதிவிட முடியாது.

அரசின் நிலைப்பாடுகளை நேரடியாக எதிர்க்க முடியாத தருணங்களில், புலிகள் மீது பழியைப் போட்டு விடுகிறார்கள்.

வடக்கு-கிழக்கு இணைப்பு விடயத்தில் கூட "புலிகள் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் அதனால்தான் நாமும் உறுதியாக நிற்க வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் புலிகள் எம்மைத் துரோகிகள் என்று மக்களிடம் சொல்லிவிடுவார்கள்" என்று அரசாங்கத்திடம் கூறிய தமிழ் கட்சிகளும் இல்லாமல் இல்லை.

புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ் கட்சிகள் கூறுவதுகூட ஒரு தந்திரம் தான்.

புலிகளின் பலம் வீழ்ச்சியடையுமானால் அவ்வாறு கூறும் தமிழ் கட்சிகள் மறுநிமிடமே தாம்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று கூறத்தொடங்கலாம்.

புலிகளுடன் பேசித்தான் தீர்வு காணமுடியும் என்று தமிழ் கட்சிகள் சொல்வது உண்மையானால், புலிகள் சம்பந்தப்படாத தீர்வு முயற்சிகளில் பங்கெடுக்கக் கூடாது.

ஆனால் புலிகளுடன்தான் பேசவேண்டும் என்று கூறியபடியே தமிழ் கட்சிகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு தமது யோசனைகளை முன்வைத்துள்ளன.

வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது கூட்டணி ஒரு அறிக்கை வெளியிட்டது.

தேர்தலை நடத்த வேண்டாம் என்று கோருகிறோம். தேர்தல் நடத்தப்படுமானால் என்ன செய்வது என்று எமது கிளைகளுடன் கூடி முடிவு செய்வோம்" என்பதுதான் கூட்டணியின் நிலைப்பாடு.

ஐந்து தமிழ் கட்சிகளும் விடுத்த அறிக்கையில் கூட தேர்தலை பின்போடும்படி கேட்டனவே தவிர, பின்போடாவிட்டால் போட்டியிடமாட்டோம் என்று கூறவில்லை. ஈ.பி.டி.பி. மட்டும் போட்டியிடவே மாட்டோம் என்று தனியான ஒரு அறிக்கை வெளியிட்டது.

ஆக, ஒருவரை ஒருவர் பயன்படுத்தும் தந்திரம்தான் புலிகளிடமும், தமிழ் கட்சிகளிடமும் காணப்படுகின்றன.

ஒருவரை ஒருவர் நம்பும் அளவுக்கு சூழல் காணப்படவில்லை.


இந்நிலையில் தமிழ் கட்சிகளுக்கும் புலிகளுக்கும் இடையே நட்பு மலரும் என்பது சாத்தியமற்ற ஒரு விடயம்.

புலிகளின் பலம் சரிந்தால் தம்மையும் அரசாங்கம் ஓரம் கட்டிவிடுமோ என்ற பயமும் தமிழ் கட்சிகளிடம் இருக்கிறது. புலிகள் பலவீனமானால் தாம் தனிக்காட்டு ராஜாக்களாக மாறமுடியுமோ என்ற ஆசையும் தமிழ் கட்சிகளிடம் இருக்கிறது.

ஒரே உறைக்குள் ஒரே ஒரு கத்திதான் இருக்க முடியும் என்பதுதான் பிரபாகரனின் நிலைப்பாடு.

எனவே-தற்போதைக்கு ஐக்கியம் என்பது பகல் கனவுதான். ◯

# அதிரடி அய்யாத்துரை



**பா**துகாப்புக்கு துணைப்பொறுப்பானவர் தமிழ் கட்சிகளை யாழ் வருமாறு அழைப்பு விடுத்தவரல்லோ. மாறு வேடத்திலாவது வாருங்கள் அழைத்துச் செல்கிறேன் என்று கூறியிருந்தார். அதன்பின்னர்தான் ரெண்டு எழுத்தாரின் பகுதிக்குள் அவர் சென்ற 'தும்பி' தரையிறங்கியது. தமிழ் கட்சிப் பிரமுகர் ஒருவர் அடித்தார் பாருங்கோ ஒரு ஜோக். "கூட்டிக் கொண்டு போவார் எண்டது சரிதான், எங்களையும் கொண்டுபோய் ரெண்டு எழுத்தாரின் பகுதிக்குள் இறக்கிப்போட்டா என்ன செய்யிறது?"

**த**ரையிறக்கத்தின் பின்னர் வழிகாட்டிய விவசாயிக்கு பலத்த உபசரிப்பாம். என்ன வேண்டும் கேளும். உள்நாட்டில் இருக்கப் பயந்தால் வெளிநாட்டுக்கும் போகலாம். சகல வசதிகளும் செய்து தரப்படும் எண்டு சொல்லப்பட்டதாம். அந்த மனுசன் ரெண்டு எழுத்தாரின் கையில் மாட்டுப்பட்டாலும் உபசரிப்பு பலமாகத்தான் இருக்கும்!

**ப**டைக்கு பொறுப்பானவர் 'பாபா' பக்தர். பாதுகாப்புக்கு பொறுப்பானவர் 'ஏழுமலையான்' பக்தர். பாபாவும், ஏழுமலையானும் ரெண்டு எழுத்துத் தலைவருக்கு எதிராக செயற்பட்டுப் போட்டினம். இந்திய ஆட்சியாளர்கள்தான் அதிருப்தியோடு இருக்கினம் எண்டால், பாபாவும், ஏழுமலையானும்கூட தங்கள் நாட்டு ஆட்சியாளரின் பொலிசியோடு ஒத்துப் போகினமாக்கும்.

**யா**ழில் தேர்தல் நடத்துவதற்கு பிரஜைகள் குழுக்களோடு கலந்து பேசினவையாம் பச்சை உடையினர். "நந்திக்கொடி ஏற்றிய இராமலிங்கத்தாரையே நீங்கள் மிஸ்பண்ணிப் போட்டியள். நாங்கள் எப்படி நம்பி இறங்குவது?" எண்டு கேட்டுப்போட்டு நழுவிப்போட்டினமாம்.

**தே**ர்தலைப் பின்போடக் கேட்ட ஐந்து தமிழ்க் கட்சிகளில் ஒன்று காதும் காதும் வைத்தமாதிரி வேட்பு மனுவை வாங்கிக்கொண்டு வவுனியாவுக்குப் பறந்துபோனதாம். ஏன் அவளவு அவசரம்? எண்டு விசாரித்தபோது கிடைத்த தகவல் இது. படிவத்தில் முன்கூட்டியே கையெழுத்து வாங்கிப்போட்டால், கையெழுத்துப் போட்டவையை வேறு கட்சிகள் தங்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்ள முடியாதல்லோ. கடைசி நேரத்தில் ஆள்பிடிக்க வெளிக்கிட்டால் டிமாண்ட்டும் அதிகமாகிப்போகுமல்லோ. எல்லாம் ஒரு முன்னேற்பாடுதான்! வாழ்க ஒற்றுமை!

**யா**ழில் பெண்களை சோதனையிடும்போது பெண் சீருடையினரும் கிண்டல் செய்கிறார்களாம். ஆண் சீருடையினரை மகிழவைக்க அந்த உத்தியாம். பெண் சீருடையினர் நின்றாலும் கருவி மூலம் சோதனை செய்வது ஆண் சீருடையினர்தானாம். ஆண் சீருடையினர் முன்பாக சோதனையிடப்படுவதையிட்டு வெகுஜனப் பிரதிநிதிகளின் கவனத்துக்கு சிலர் கொண்டுவந்துள்ளனராம்.

**கி**ழக்கின் தனித்துவக் கட்சிக்கும், நீலக் கட்சிக்கும் இடையே கிழக்கில் பிணக்குத் தோன்றியிருக்கிறதாம். 'சமுர்த்தி' விடயத்தில் தமக்கு 50 வீதம் தேவை என்பது கிழக்கு நீலக்கட்சியினரின் கோரிக்கையாம். தமக்குத்தான் 50 வீதம் என்பது தனித்துவக் கட்சியினரின் பிடிவாதம். விடயம் மேல் மட்டம் தலையிட்டு சமரசம் செய்யுமளவுக்கு சென்றதாம். தொலைபேசி வழங்கலிலும் தமது ஆட்கள் புறக்கணிக்கப்படுவதாக மேலிடத்தில் புகார் செய்துள்ளனராம் நீலக்கட்சி அமைப்பாளர்கள்.

**த**மிழ்க் கட்சிகளைக் கேட்காமல் உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்தவுடன் தமிழ் கட்சி பிரமுகர் ஒருவர் சொன்ன கொமன்ட் இது: "ஜெயலலிதா சுதாகரனை தத்தெடுத்த மாதிரி, இங்கே தமிழ் மக்களை அம்மையார் தத்தெடுத்துப் போட்டாராக்கும்! தத்துப் பிள்ளைக்கு சீர் செய்ய எங்கள் ஆலோசனை ஏன் எண்டு நினைச்சுப்போட்டாராக்கும்!!

**ரெ**ண்டு எழுத்தாருக்கு ஆதரவு காட்டினால்தான் பிடித்து உள்ளே தள்ளுவோம். இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக மாநாடே நடத்தலாம். ஆதரவு தருவேன் 'என்கிறாராம் தமிழக முதல்வர். ரெண்டு எழுத்தாரை ஆதரித்துப் பேசிய ஆட்களை பிடித்து உள்ளே போட்டுவிட்டார்கள்.'இதைவிட வேகமாக, தீவிரமாகவெல்லாம் முன்னர் கலைஞரே பேசியிருக்கிறாரே, அதுக்கு என்ன செய்யலாம்? எண்டு கேட்கிறார்களாம் வேறு சிலர்.

**இ**ந்தவாரம் ஒரு சீனதேசத்துப் பழமொழி.

"சோகம் என்னும்
பறவைகள் உங்கள்
தலைக்குமேல் பறப்பதை
உங்களால்
தடுக்க முடியாமல் போகலாம்.
அவை உங்கள்
தலையிலே கூடுகட்டி
வாழ்வதை
உங்களால் தடுக்க முடியும்!" ◼

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# இடைக்கால நிர்வாக சபை!

# பிரித்தாள ஜே.ஆர். வகுத்த திட்டம்!

## கருணாநிதியின் 'தமிழ் ஈழ' முழக்கம்

அரசியல் தொடர் 107

அற்புதன் எழுதுவது

### சென்னையில் பிரசாரம்

செப்டம்பர் 26ல் திலீபன் உயிரிழந்த பின்னர் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

திலீபனின் மரணம் தொடர்பாக ஈ.பி.டி.பி. தமிழ்நாட்டில் அஞ்சலி தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

ஈ.பி.டி.பி.செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவால் வெளியிடப்பட்ட அனுதாபச் செய்தி சென்னையில் உள்ள புலிகள் இயக்கத்தினரின் அலுவலகத்தில் பொறுப்பாக இருந்த காஸ்ரோ என்பவரிடம் கையளிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி. சார்பாக ரமேஷ், அசோக் ஆகியோர் காஸ்ரோவை சந்தித்து அச் செய்தியைக் கையளித்தனர்.

அப்போது சென்னை அலுவலகத்தில் கிட்டுவும் இருந்தார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு எதிரான பிரசாரங்களை இந்தியாவில் இருந்துகொண்டே புலிகள் அமைப்பினர் மேற்கொள்ள ஆரம்பித்தனர்.



சென்னையில் இருந்த புலிகளின் அலுவலகம் (உள் படம் - கிட்டு)

புலிகளின் சென்னை அலுவலகத்தில் இருந்து 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையும் வெளியிடப்பட்டது.

இந்தியப் படைகளுக்கும், புலிகளுக்கும் இடையில் வடக்கு-கிழக்கில் முறுகல் நிலை ஏற்படத் தொடங்கியபோதும், சென்னையில் கிட்டுவுடன் இந்திய உளவு நிறுவனங்கள் தொடர்புகளை வைத்திருந்தன.

இந்திய உளவு நிறுவனங்களைச் சேர்ந்த சிலரும், ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த முடியாது; அவசரமாகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் தமக்கும் உடன்பாடில்லை என்று கிட்டுவிடம் தெரிவித்தனர்.

திலீபனின் மரணம் தமிழ் நாட்டிலும் அனுதாபத்தை ஏற்படுத்தியிருந்தது.

### கலைஞரின் ஆவேசம்

தமிழ்நாட்டில் இப்போது புலிகளை ஆதரித்துப் பேசுகின்றவர்களை பொலிசார் கைது செய்கின்றனர். புலிகளை ஆதரிப்பது தமிழ்நாட்டிலும் பிரிவினையைத் தூண்டும் செயல் என்று தமிழக அரசு கூறுகிறது.

கிட்டத்தட்ட ஒன்பது வருடங்களுக்கு முன்னர் கலைஞர் கருணாநிதி எதிர்க் கட்சித் தலைவர். இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக அவர் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றை இந்தக் கால கட்டத்தில் நினைவுபடுத்திப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

கலைஞர் கருணாநிதியின் சொந்தப் பத்திரிகை முரசொலி. அதில் 'கரிகாலன் பதில்கள்' என்றொரு பகுதியில் கலைஞரின் பதில்கள் இடம்பெறும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக கரிகாலன் பதில்கள் என்ற பகுதியில் கலைஞர் வெளியிட்ட கருத்துக்களைத் தொகுத்து தி.மு.க தலைமையகம் ஒரு நூல் வெளியிட்டது.

'கொழும்பு ஒப்பந்தம்' என்ற தலைப்போடு, கலைஞரின் வர்ணப்படத்துடன் வெளியான அந்த நூலில் இருந்து சில முக்கிய பகுதிகள் இவை:

**கேள்வி:** இலங்கை அதிபர் ஜயவர்த்தனே 'மீண்டும் பேச்சுவார்த்தை' என்ற பல்லவியைப் பாடத்தொடங்கியிருக்கிறாரே?

**பதில்: அவர் பாடுகிற பாட்டுக்குத் தலையாட்டுவதற்கு இந்திய அரசு தயாராக இருக்கும் போது, மேலும் இலங்கைத் தமிழினத்தை அழிக்கவும், தமிழ் ஈழம் அமையாமல் தடுக்கவும் அவர் எந்தப் பல்லவியை வேண்டுமானாலும் பாடுவார்.**

**கேள்வி:** இறுதியாக 'தனித்தமிழ் ஈழம்' இல்லாமலே போய்விடும் போலிருக்கிறதே?

**பதில்: அப்படியொரு முடிவு ஏற்பட்டால் "தனித் தமிழீழத்தை ஆதரிக்கமாட்டோம்" என்று மத்திய காங்கிரஸ் அரசும், மாநிலத்தில் எம்.ஜி.ஆர். அரசும் ஆரம்பத்தில் இருந்தே சொல்லிவந்ததை நிலைநாட்டுவதில் வெற்றிபெற்றுவிட்டன என்றுதான் அர்த்தம்.**

(சமீபத்தில் ஜெயின் கமிஷன் முன்பாக சாட்சியமளித்த கலைஞர் கருணாநிதி, தான் எப்போதும் தமிழீழக் கோரிக்கையை ஆதரித்தது கிடையாது, எனக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

**கேள்வி:** "அரசியல் நாணயம் சிறிதுமில்லாத சிங்கள ஆட்சியாளருடன் அவசரக்கோலத்தில் செய்யப்படும் எந்த உடன்படிக்கையும் ஏமாந்த தமிழனின் வரலாற்றில் இன்னொரு சோணகிரி அத்தியாயமாகவே அமையும்" என்று உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அறிக்கை விட்டுள்ளாரே?

**பதில்: தமிழின உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரும் இப்போது செய்யப்படும் அவசர ஒப்பந்தம் குறித்து இப்படித்தான் கருதுவார்கள்!**

**இப்படித்தான் கருத முடியும்!**

### படைசென்றது ஏன்?

**கேள்வி:** யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்டுள்ள இந்திய இராணுவத்தினர் இலங்கை அதிபர் ஜயவர்த்தனாவின் கட்டளைப்படி இயங்குவார்கள் என்று இந்தியத் தூதர் திக்ஷித் கொழும்பில் அறிவித்துள்ளாரே?

**பதில்: சிங்கள இராணுவத்தினர் தமிழினத்தின்மீது குண்டுகளை வீசி அழிப்பதைத் தடுத்து தமிழீழம் பெற்றுத்தர இந்திய இராணுவம் செல்ல வேண்டுமென்று நாம் கூறினோம். ஆனால் இப்போது இந்திய இராணுவம் இலங்கை அரசின் கட்டளைக்கு கீழ்ப்பட்டு நடக்க அனுப்பப்பட்டிருக்கிறது.**

**கேள்வி:** இப்பொழுது இலங்கையின் ஈழப் பகுதியில் என்ன நடக்கிறது?

**பதில்: இலங்கை இராணுவத்துக்குப் பதிலாக இந்திய இராணுவம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளைத் தாக்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது.**

**கேள்வி:** "தாங்கள் கோரியதற்கு அதிகமாகவே தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. எனவே அவர்கள் புகார் செய்வதற்கு எதுவுமில்லை" என்று அலஹாபாத்தில் ஒரு விழாவில் பேசிய ராஜீவ் காந்தி கொழும்பு ஒப்பந்தம் தொடர்பாகக் கூறியுள்ளாரே?

**பதில்: அவர்கள் கோரியது தமிழ் ஈழம் என்ற தனிநாடு. அந்தத் தனிநாட்டில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டும் என்பது!**

**இப்போது கிழக்கு மாநிலத்தைப் பற்றிய உத்திரவாதம் பொதுவாக்கெடுப்பில் தொங்கிக் கொண்டிருக்கிறது. தனிநாடு கிடைக்கவில்லை என்பது மாத்திரமல்ல, அமைய இருக்கும் தமிழ் மாநிலத்துக்கும் சுயநிர்ணய உரிமையோ, அல்லது குறைந்த பட்சம் மாநில சுயாட்சி அந்தஸ்தோ கூட தரப்படவில்லை.**

**இந்த நிலையில் தாங்கள் கோரியதற்கு அதிகமாகவே தமிழர்களுக்கு கிடைத்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது!**

### மதிக்காவிட்டாலும்....

**கேள்வி:** விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனும், அந்த இயக்கத்தவரும் தி.மு.கழகத்தை மதிக்காத நிலையில் நடந்து கொண்டார்களே: இப்போது வெளியிடப்படுகின்ற உங்களின் கருத்துக்கள் பிரபாகரனையும் அவரது புலிகள் இயக்கத்தையும் ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ளதே?

**பதில்: சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர்-பெப்ரவரி மாதம் பத்தாம் தேதியன்று (1987) சென்னையில் கூடிய தி.மு.க நிர்வாகக் குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தை நினைவுக்கு கொண்டுவந்தால் யாருக்கும் இப்படியொரு சந்தேகம் எழாது!**

**அந்தத் தீர்மானத்திலேயே பிரபாகரனும் அவரது இயக்கமும் மத்திய மாநில அரசுகளால் எப்படியெல்லாம் அலைக்கழிக்கப்பட்டனர் என்பதையும், பொதுவாகப் போராளிகளிடம் இருந்த ஒற்றுமையை மத்திய, மாநில அரசுகள் எப்படியெல்லாம் திட்டமிட்டுச் சீரழித்தன என்பதையும் விளக்கமாகக் கழகம் சுட்டிக்காட்டியிருக்கிறது.**

**இலங்கைத் தமிழர் பிரச்சனையில் பிரபாகரன் என்ற தனிப்பட்ட ஒருவரோ, அவரது இயக்கத்தினரோ நமது கழகத்தை மதிக்கிறார்களா இல்லையா என்பது முக்கியமல்ல!**

**இலங்கையில் தமிழின அழிவையும் அவர்களது உரிமைகள், உடமைகள் பறிக்கப்படும் கொடுமையையும் தமிழ்க் குருதியோடு கிற நம்மால் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும் என்பதே முக்கியம்!**

**கேள்வி:** "ராமாயணத்தில் இலங்கையை மீட்ட ராமச்சந்திரமூர்த்தி எனப் படித்துள்ளோம். இன்று இலங்கையை மீட்டிருப்பவரும் இந்த இராமச்சந்திர மூர்த்திதான்! என்று அமைச்சர் ஒருவர் பேசியுள்ளாரே?

**பதில்: பழைய இராமாயணத்தில் 'அசோகவனம்'. புதிய ராமாயணத்தில் டெல்லி 'அசோகா ஹோட்டல்'...**

(பிரபாகரன் அசோகா ஹோட்டலில் தடுத்துவைக்கப்பட்டதையே கலைஞர் குறிப்பிடுகிறார். ராமச்சந்திரமூர்த்தி என்பது எம்.ஜி.ஆரைக் குறிக்கிறது)

ராஜீவ் காந்தி, ஜே.ஆர்., எம்.ஜி.ஆர். மூவரும் கூட்டுச்சேர்ந்து தமிழ் ஈழம் அமைவதை தடுத்துவிட்டதாக தி.மு.க தமிழ்நாடெங்கும் பிரசாரம் செய்தது.

எம்.ஜீ.ஆர். தமிழர்கள்மீது பற்றே இல்லாதவர் என்பதை எடுத்துக்காட்ட அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தியது தி.மு.க.

### இரகசியப்பேச்சுக்கள்

யாழ்ப்பாணத்தில் இந்திய அதிகாரிகளும் புலிகள் இயக்கத் தலைவர்களும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

இந்தியா சார்பாக இந்தியத் தூதர் திக்ஷித், அவரது உதவியாளர் சென், லெப்டினன்ட் ஜெனரல் திபீந்தர் சிங் ஆகியோரும், புலிகள் தரப்பில் பிரபாகரன், மாத்தையா, அன்ரன் பாலசிங்கம் ஆகியோரும் பங்குகொண்டனர்.

இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது தொடர்பாகவே பேச்சுவார்தைகள் நடைபெற்றன.

இடைக்கால நிர்வாகத்தில் தமக்கு கூடுதல் பிரதிநிதித்துவம் தேவை என்று புலிகள் தரப்பால் கேட்கப்பட்டது.

பொலிஸ் அதிகாரம், குடியேற்றம் ஆகிய பொறுப்புக்கள் தம்மிடம்தான் இருக்க வேண்டும் என்பதையும் புலிகள் வலியுறுத்தினார்கள்.

எட்டுப் பேரைக் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பது. அதில் மூன்றுபேர் புலிகளால் சிபாரிசு செய்யப்படும் பிரதிநிதிகளாக இருப்பார்கள் என்று முதலில் முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதிக பிரதிநிதித்துவம் வேண்டும் என்று புலிகள் தரப்பினரால் கேட்கப்பட்டதால் இடைக்கால நிர்வாக சபையில் 12 உறுப்பினர்கள் இருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஏழு பேர் புலிகளின் பிரதிநிதிகள், இரண்டுபேர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கியதாக இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படும் என்று முடிவானது.

### கூட்டறிக்கை

இந்தியத் தரப்புக்கும், புலிகளுக்கும் இடையே பேச்சுக்கள் இரகசியமாகவே நடந்தன. ஆயினும் பேச்சுக்களின் இறுதியில் இரு தரப்பும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டன.

இடைக்கால நிர்வாக சபையொன்றை ஜே.ஆர் ஜயவர்த்தனா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி உருவாக்குவார்.

இடைக்கால நிர்வாக சபைக்கு தலைவரைத் தெரிவுசெய்ய மூன்று பெயர்களை புலிகள் அமைப்பினர் சிபாரிசு செய்வர். அதிலிருந்து ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்வார்.

புலிகள் இயக்கத் தலைவர்களினதும், ஏனைய உறுப்பினர்களதும் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதும், தலைவர்களின் சொந்தப் பாதுகாப்புக்கான ஆயுதங்கள் தவிர, ஏனையவை கையளிக்கப்படும் என்று பிரபாகரன் தெரிவித்தார்.

பொலிஸ் படை நடவடிக்கை உட்பட சிவில் நிர்வாக அம்சங்கள் அனைத்துக்கும் புலிகள் அமைப்பினர் பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்று பிரபாகரன் கூறினார்.

மாகாண சபைக்கான தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெற தனது முழுமையான ஒத்துழைப்பை புலிகள் வழங்குவார்கள் என்றும் பிரபாகரன் கூறினார்.

புலிகள் இயக்கத்தினரும், இந்தியத் தகவல் துறையினரும் பரஸ்பரம் விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தூதுவர் திக்ஷித்தும் பிரபாகரனும் ஒப்புக்கொண்டனர்.

இவ்வாறு கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அறிக்கையில் இந்தியத் தரப்பு சார்பாக இந்தியத் தூதரக முதல் செயலாளர் (அரசியல்) பூரியும், புலிகள் சார்பாக துணைத் தலைவர் மாத்தையாவும் ஒப்பம் இட்டிருந்தனர்.

இடைக்கால நிர்வாக சபை விடயத்தில் பிரபாகரன் மனம் விரும்பித்தான் உடன்பட்டார் என்று சொல்ல முடியாது. அதனால் தான் கூட்டறிக்கையிலும் அவர் கையொப்பமிடவில்லையோ என்று சந்தேகம் எழுந்தது.

இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் பதவிக்கு புலிகள் அமைப்பினரால் மூன்று பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தன.

முதல் பெயராக அப்போது திருமலை மேலதிக உதவி அரசாங்க அதிபராக இருந்த என்.பத்மநாதனின் பெயரை புலிகள் பிரேரித்திருந்தனர். இரண்டாவதாக யாழ் மாநகரசபை ஆணையாளராக இருந்த சிவஞானத்தின் பெயர் இடம்பெற்றிருந்தது.

இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் மற்றும் பிரதிநிதிகளாக 15 பேரின் பெயர்கள் புலிகள் இயக்கத்தினரால் சிபாரிசு செய்யப்பட்டன.

### ஜே. ஆர். தந்திரம்

சிபாரிசுப் பட்டியலை ஆராய்ந்தார் ஜே.ஆர்.ஜயவர்த்தனா.

புலிகள் அமைப்பினர் சிபாரிசு செய்த பட்டியலில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்களும் இருந்தன.

இடைக்கால நிர்வாக சபைத் தலைவராக புலிகள் இயக்கத்தினர் சிபாரிசு செய்திருந்த என்.பத்மநாதனும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்தான்.

முதல் வேலையாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்களை ஒதுக்கித் தள்ளினார் ஜே.ஆர்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களையும் சேர்த்துவிட்டால் வடக்கு-கிழக்கு ஒற்றுமைக்கு வழி செய்வதாக அமைந்துவிடும்.

இடைக்கால நிர்வாக சபையில் கிழக்கைச் சேர்ந்தவர்கள் இல்லையென்றால் தான் கிழக்கு மாகாண மக்களிடம் அதிருப்தி ஏற்படும்.

**வடக்கு-கிழக்கு இணைந்திருந்தால் வடக்கின் ஆதிக்கம்தான் மேலோங்கியிருக்கும் என்ற அபிப்பிராயத்தை உருவாக்க ஜே.ஆர் கையாண்ட சாணக்கிய தந்திரம் அது.**

இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் பதவிக்கு சகல வகையிலும் பொருத்தமானவராகவும், அனுபவம் வாய்ந்தவராகவும் என்.பத்மநாதன் இருந்தார்.

ஆனால், அவரைத் தலைவராக நியமித்தால் வடக்கு-கிழக்கு பூசலை தூண்டிவிட முடியாது.

அதனால் பத்மநாதனை ஒதுக்கிவிட்டு இடைக்கால நிர்வாக சபைத் தலைவராகவும் வடக்கைச் சேர்ந்த சிவஞானத்தை தெரிவு செய்தார் ஜே.ஆர்.

சிவஞானம், யாழ் மாநகர சபை ஆணையாளராக இருந்தபோது தமிழ் ஈழ விடுதலை இராணுவத் தலைவர் ஒபரேய் தேவனால் சுடப்பட்டு உயிர்தப்பியவர்.

மாநகர சபையில் ஊழல் செய்தார் என்பதனாலும் அரசாங்கத்துக்கு ஆதரவானவர் என்பதாலும் அவர் சுடப்பட்டார்.

அவரது பெயரையும் புலிகள் சிபாரிசு செய்தது பலருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

அவரையே இடைக்கால நிர்வாக சபைத் தலைவராக ஜே.ஆர் அறிவித்த போது புலிகள் அமைப்பினர் அதிர்ச்சி அடைந்தனர்.

"மூன்று பெயர்களை சிபாரிசு செய்ய வேண்டும் என்பதற்காகவே சிவஞானத்தின் பெயரையும் சேர்த்திருந்தோம். பத்மநாதனின் பெயரை முதல் பெயராக குறிப்பிட்டிருந்தோம். அவரைத்தான் இடைக்கால நிர்வாக சபைத் தலைவராக அறிவிக்க வேண்டும்" என்று புலிகள் கூறினார்கள்.

தாம் சிபாரிசு செய்த பட்டியலில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் பெயர்கள் இல்லாததும் புலிகள் அமைப்பினருக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

### பிரபா ஒப்புதல்

இந்தியத் தூதர் திக்ஷித் பலாலிக்கு விரைந்தார். பிரபாகரனும் திக்ஷித்தும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்கள்.

சிவஞானத்தை தெரிவுசெய்தது தொடர்பாக ஜே.ஆர் ஒரு புத்திசாலித்தனமான நியாயத்தை திக்ஷித்திடம் கூறியிருந்தார்.

"என்.பத்மநாதனைவிட சிவஞானம் வயதிலும், அனுவத்திலும் மூத்தவர். பத்மநாதன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சில காலம் சிறையில் இருந்தவர். அதனால்தான் சிவஞானத்தை தெரிவு செய்தேன்" என்று கூறியிருந்தார் ஜே.ஆர்.

அதனைப் பிரபாகரனிடம் கூறினார் திக்ஷித். கிழக்கு மாகாணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும். பத்மநாதனையே தலைவராக நியமிக்க வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினார் பிரபாகரன்.

மாலை ஐந்து மணிவரை கூட்டம் நடைபெற்றது. பிரபாகரனை திக்ஷித்தும், இந்திய அதிகாரிகளும் பலவாறு சமாதானம் செய்தனர்.

இறுதியாக சிவஞானத்தை தலைவராக நியமிக்க சம்மதம் தெரிவித்தார் பிரபாகரன். பிரபாகரன் சம்மதம் தெரிவித்தபோது இந்திய தூதர் உட்பட அதிகாரிகள் கரகோஷம் செய்து வரவேற்றனர்.

தலைவர் தேர்வுக்கான ஒப்புதல் பத்திரத்தில் பிரபாகரனிடம் கையொப்பம் வாங்கினார் திக்ஷித்.

'அப்பாடா..' என்று நிம்மதிப்பெருமூச்சோடு கொழும்பு திரும்பினார் திக்ஷித்.

ஆனால் பிரபாகரன் மட்டும் வேறு ஒரு திட்டம் வைத்திருந்தார்.

இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் பதவியை ஏற்கக்கூடாது என்று சிவஞானத்துக்கு புலிகள் இயக்கத்தினர் கண்டிப்பாகக் கட்டளையிட்டனர்.

அதே நேரத்தில் இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் தெரிவில் தனக்கு உடன்பாடில்லை. "நிர்ப்பந்தம் காரணமாகவே ஒப்புதல் பத்திரத்தில் கையொப்பம் இட்டேன்" என்று பிரபாகரன் கூறிவிட்டார்.

"இடைக்கால நிர்வாக சபைத் தலைவர் பதவி எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று சிவஞானமும் அறிவித்தார்.

### இறுதிக் கட்டம்

இவ்வாறான நிலையில் இந்திய-புலிகள் உறவின் கடைசிக் கட்டம் விரைந்து வந்தது.

1987 அக்டோபர் 3ம் திகதி, இலங்கைக் கடற்படையினர் சந்தேகத்துக்கு இடமான ஒரு படகைக் கண்டனர்.

கடற்படையினரால் அப் படகு சுற்றி வளைக்கப்பட்டது.

படகில் புலிகள் இயக்கத்தின் 17 உறுப்பினர்கள் இருந்தனர்.

திருமலை மாவட்டத் தளபதி புலேந்திரன், யாழ் மாவட்டத் தளபதி குமரப்பா ஆகியோர் உட்பட 17 பேர் படகில் இருந்தனர்.

அனைவரையும் கைது செய்தனர் கடற்படையினர்.

அதன்பின்னர்தான் உருவானது விபரீதம். (தொடர்ந்து வரும்)

## அலசுவது– இராஜதந்திரி

# அரசுக்கு தேவையான இடைத்தரகர்கள்!

# இன்னொரு துரையப்பா தேவையா?

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இறுதிப் பொதுத்தேர்தல் 1977ம் ஆண்டிலேயே இடம்பெற்றது. அத்தேர்தலின் பின்னர் உருப்படியாக ஒரு தேர்தலும் யாழ்ப்பாணத்தில் இன்றுவரை இடம்பெறவில்லை.

1982ம் ஆண்டு காலஞ்சென்ற ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனாவின் அரசாங்கம் தனது அரைகுறைத் தீர்வான மாவட்ட அபிவிருத்தி சபையை அறிமுகப்படுத்தி அதற்கான தேர்தலையும் வடக்கே நடத்தியிருந்தது. ஆனால் அத்தேர்தல் குளறுபடியானதாகவும், முறைகேடானதாகவுமே இருந்தது.

இருந்தபோதிலும், மாவட்ட அபிவிருத்தி சபை தோற்றுவிக்கப்பட்டு வடக்கே அச்சபையின் தலைவராக சட்டத்தரணி சு.நடராசா பதவியேற்றார். இவரைப் 'பொட்டர் நடராசா' எனவும் கூறுவதுண்டு.

'பொட்டர் நடராசா'வின் பதவிக் காலமோ அல்லது வடக்கே மாவட்ட அபிவிருத்தி சபையின் நிர்வாகமோ நெடுநாள் நீடிக்கவில்லை. காலப்போக்கில் 'பொட்டர் நடராசா'வுக்கு பெடியள் 'பொட்டு' வைத்தும் விட்டிருந்தார்கள். 'பொட்டு வைப்பது' என்பது வடக்கே தீவிரவாதம் வளர்ச்சி பெற்ற காலத்தில், ஒருவருக்கு நெற்றியில் சுடுவதையே யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில், குறித்து நின்றது.

'பொட்டர் நடராசா' மட்டுமல்ல, அக்காலத்தில் ஸ்ரீ.ல.சு.க., ஐ.தே.க. போன்ற தேசியக் கட்சிகளைச் சேர்ந்த பலரும் தீவிரவாதம் வளர்ச்சிபெற்றகாலத்தில் சுடப்பட்டிருந்தனர்.

1982ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் குழப்பங்களே யாழ்ப்பாணப் பொதுசன நூலகம், 'ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம், யாழ்ப்பாணச் சந்தை ஆகியவற்றுக்கு தீவைத்தும் விட்டிருந்தது.

மாவட்ட அபிவிருத்தி சபை ஏற்கப்படாததும், அதனைத் தொடர்ந்து 83ம் ஆண்டு கொழும்பில் வெடித்த இனக்கலவரம், அக்கலவரத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் என்பன வடக்கிற்கும், தெற்கிற்குமிடையிலான இடைவெளியை அகலமாக்கிவிடுவதாகவே இருந்தன.

கொழும்பு ஆட்சியின் அமுலாக்கங்கள் எதுவும் வெற்றியளிக்காத தன்மைகளே காலப்போக்கில் விரிவடைய ஆரம்பித்தன.

அரசியல் நிலைப்பாடுகள் மலையேறி எங்கும், எதிலும் தீவிரவாத நடைமுறைகளே தலையெடுக்க ஆரம்பித்தன.

வடக்கு-கிழக்கில் தீவிரவாதப்போக்குப் பலமடைவதற்கு ஏதுவாக தென்னிலங்கையில் ஜே.ஆர்.ஜயவர்தனா அறிமுகப்படுத்திய நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழான அம்சங்களும் நன்கு துணைபோயின.

தமிழ் மிதவாதக் கட்சியும், 1977ம் ஆண்டு வடக்கு-கிழக்கு மக்களின் தேர்தல் ஆணையைப் பெற்ற கட்சியுமான தமிழர் விடுதலைக்கூட்டணிகூட ஜே.ஆரின் போக்கில் அதிருப்தியடைந்தது. அக்கட்சி பாராளுமன்றிலிருந்தும் வெளியேற்றப்பட்டிருந்தது. இந்தியாவில் அடைக்கலம் தேடவேண்டிய நிலையும் கூட்டணித் தலைவர்களுக்கு ஏற்பட்டது.

70ம் ஆண்டுகளின் இறுதிப்பகுதியில் ஆரம்பமான தமிழ்த்தீவிரவாதம் 1983ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் உச்சக்கட்டத்தை எட்டியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பல்வேறு தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகள் உருவாகின. பேரினவாத ஆட்சியாளர்களது கெடுபிடியான நடவடிக்கைகள் ஆயுதப்போராட்டமொன்றை நியாயப்படுத்துவதாகவும் விளங்கியது!

லெபனான், இந்தியா போன்ற நாடுகளில் தீவிரவாத சிந்தனை கொண்ட வடக்கு-கிழக்கு இளைஞர்கள் ஆயுதப்பயிற்சிபெற்று வெளியேறினார்கள்.

இந்த இளைஞர்களின் எழுச்சியே யாழ்ப்பாணத்தின் அரசியல்-சமூக அமைப்பில் ஒரு புதிய பிரவாகத்துக்கு வழியமைத்தது.

வடக்கு-கிழக்கு மக்கள் அனைவருமே புரட்சிகர சிந்தனைகள், நடவடிக்கைகள் வசப்படும் சூழ்நிலைகளும் தோன்றலாயின.

இருந்தபோதிலும், ஒற்றுமைபேணி ஒரே இலக்கை அடையவேண்டிய ஆயுதப்போராட்ட அமைப்புகளின் செயற்பாடுகள் நாளடைவில் உருக்குலைந்து மோசமான குத்து வெட்டுக்களுக்கும் வழிகோலியிருந்தன.

1986ம் ஆண்டில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் ஆயுதப் போராட்ட அமைப்புகளிடையே ஏற்பட்ட மோதல்கள் அவற்றைப் பலவீனமாக்கியதுடன், 'குளத்தைக் கலக்கிப் பருந்துக்கு இரைகொடுக்கும்' சூழ்நிலைகளைக்கூட உருவாக்கியிருந்தது.

இதன் விளைவாகவே இந்திய-இலங்கை ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டு, அதனடிப்படையில் வடக்கு-கிழக்கில் 1988ம் ஆண்டு மாகாண அபிவிருத்தி சபைத் தேர்தலும் நடத்தப்பட்டது.

இந்திய அமைதிப்படையின் தலையீட்டுடன் நடத்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் இடம்பெறாத நிலையில் வடக்கு-கிழக்கு மாகாண சபை தோன்ற வழிவகுத்திருந்தது.

இருந்தபோதிலும் ஒரு கேலிக் கூத்தாக வடக்கு-கிழக்கு மாகாண சபை உருவானதுடன், காலப்போக்கில் அச்சபையின் நிர்வாகமும், இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்துடன் நிலை குலைந்து போயிற்று.

எனவே இத்தகைய நிகழ்வுகள் வடக்கு-கிழக்கில் ஓர் அரசியல் தீர்வு எட்டப்படாதவரை ஜனநாயக நிறுவனங்கள் பலமானவையாக இயங்க முடியாதென்பதையே புலப்படுத்தின.

ஆயினும் ஓரிரு வருடங்களுக்கு முன்னர் வடக்கு-கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான சூழ்நிலைகள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டபோதிலும், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தன.

இவற்றை முன்னுதாரணமாகக் கொண்டே வடக்கில்– குறிப்பாக யாழ்குடாநாட்டில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது.

படையினரின் பலத்தோடு உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களை நடத்தலாம் என்ற நம்பிக்கை காரணமாகவே அவ்வாறான அறிவித்தல் வெளியிடப்பட்டது.

ஆயினும் கடந்த காலத் தேர்தல்களைப் போல அல்லாமல் இம்முறை தமிழ் கட்சிகள் யாழ்குடாநாட்டில் போட்டியிட மறுத்துவிட்டன.

உள்ளூராட்சிச் சபைத்தேர்தல் அறிவிப்பு வெளியானதும் தமிழ் கட்சிகள் யாழ்ப்பாணம் செல்ல முன்வரக்கூடும். என அரசாங்கம் நினைத்திருக்கலாம்.

தமிழ் கட்சிகள் போட்டியிட மறுத்தால், சுயேச்சைக் குழுக்களைப் போட்டியிட வைக்கமுடியும் என படைத்தரப்பினர் அரசாங்கத்துக்கு நம்பிக்கை கொடுத்திருக்கலாம்.

ஆனால் தமிழ் கட்சிகளே போட்டியிட முன்வராத நிலையில் தமது உயிரைப் பணயம்வைத்து போட்டியிட வேறு யாரும் முன்வரமாட்டார்கள்.

தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னர் யாழ் பிரஜைகள் குழுக்களை அழைத்துப் படையினர் பேச்சு நடத்தினார்கள். பிரஜைகள் குழு உறுப்பினர்கள் பின்வாங்கிவிட்டனர் என்றே அறியமுடிகிறது.

அரசாங்கத்தின் உயர் மட்டத்திலும் ஜனாதிபதி, பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரைத் தவிர ஏனைய அமைச்சர்கள் பலரும் வடக்கில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் அறிவிப்பையிட்டு வியப்படைந்தவர்களாகவே காணப்பட்டனர்.

'தமக்கு இந்த அறிவித்தல் தொடர்பாக எதுவும் தெரியாது' என்று நீதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் தன்னைச் சந்தித்த தமிழ்கட்சி பா.உக்கள் சிலரிடம் வியப்புத் தெரிவித்ததாக அறியமுடிகிறது.

தமிழ் கட்சிகளை குறிப்பாக ஈ.பி.டி.பி., புளொட் ஆசிய கட்சிகளை யாழ் செல்லுமாறு ஜனாதிபதி சில மாதங்களுக்கு முன்பாக கோரிக்கை விடுத்திருந்தார்.

அக் கோரிக்கை தொடர்பாக சாதகமான பதில் அக் கட்சிகளிடம் இருந்து கிடைக்கவில்லை.

தேர்தல் அறிவிப்பு வெளியானால் அக் கட்சிகள் தாமாகவே யாழ் செல்லும் என ஜனாதிபதி நினைத்திருக்க வாய்ப்புண்டு.



உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு தமிழ் கட்சிகளுக்கு அரசாங்கம் விடுத்த சவால் போலவும் அமைந்திருந்தது.

'தமிழ் கட்சிகள் போட்டியிடாவிட்டால் வேறு வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலை நடத்துவோம்' என்பதுபோலவே அரசின் அறிவிப்பு காணப்பட்டது.

தமது தலைகளுக்கு மேலாக தமிழ் மக்களுடன் அரசாங்கம் தொடர்பு கொள்ள நினைப்பதாக முன்னர் எல்.ரி.ரி.ஈ.யினர் சந்தேகம் கொண்டிருந்தனர்.

இப்போது அதேபோன்றதொரு சந்தேகத்தை தமிழ் கட்சிகளிடமும் அரசின் அறிவிப்பு தோற்றுவித்துள்ளது.

எல்.ரி.ரி.ஈ.யினரை மட்டுமல்லாமல் ஏனைய தமிழ் கட்சிகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு வடக்கு-கிழக்கு விவகாரங்களை கையாள அரசு முனைகிறது என்பதை உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பு உணர்த்துவதாக அமைந்தது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி பதவியில் இருந்தபோதுதான் அல்பிரட் துரையப்பா யாழ்ப்பாண நகர மேயராக இருந்தார்.

அப்போது தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக விளங்கிய தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு போட்டியாக துரையப்பா போன்றவர்களை சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் உருவாக்கி வளர்த்து வந்தது.

தமது தரப்பிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என சித்தரிப்பதே அப்போது ஆட்சியாளரின் நோக்கமாக அமைந்திருந்தது.

எனினும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு மாறாக, அரசின் குரலாக ஒலித்த துரையப்பாக்களின் குரல் தமிழ் மக்கள் மத்தியில் எடுபடவில்லை. 'துரோகி' என்ற பட்டத்தோடு துரையப்பாவின் குரல் இறுதியாக அடங்கிப்போனது.

இந்நிலையில் யாழ் குடாநாட்டில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதாயின் மீண்டும் துரையப்பாக்களை உருவாக்க வேண்டும்.

எல்.ரி.ரி.ஈ.யினர் பலம் வாய்ந்த அமைப்பாக உள்ள நிலையில் தம் உயிரைப் பணயம் வைக்க எவரும் துணியமாட்டார்கள்.

ஆளும் கட்சிக்கு சார்பாகப்பேசும் தமிழ் பிரமுகர்கள்கூட பகிரங்கமாக தம்மை இனம்காட்ட முன்வராத நிலைதான் காணப்படுகிறது. குறிப்பிட்ட பிரமுகர்கள் ஆளும் தரப்பாருடன் திரைமறைவில் நட்புக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர். துணிந்து பகிரங்க அரங்கத்தில் முகம் காட்டுவதற்கு முன்வரமாட்டார்கள் என்பது தெளிவு.

எனவே-தமிழ் கட்சிகள் போட்டியிட மறுத்தால், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல் தயாரிப்பது இயலாத ஒரு விடயம் என்பதை அரசாங்கம் உணர்ந்தேயிருக்கும்.

எல்.ரி.ரி.ஈ. மற்றும் தமிழ் கட்சிகள் ஆகியவற்றின் பிரசன்னம் இல்லாமல் தமக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் இடைத்தரகர்களை உருவாக்க அரசாங்கம் முயலுமானால் அந்த முயற்சியில் தோல்வியையே தழுவும்.

உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பும் அதில் ஏற்பட்ட பின்னடைவும் நேரடியான நிரந்தரத்தீர்வு முயற்சிகளே பயனளிக்கும் என்பதையே துல்லியமாகப் புலப்படுத்துகின்றன.

எனவே நிரந்தரத்தீர்வு என்ற எதிர்பார்ப்பைக் கொச்சைப்படுத்தி, வடக்கு-கிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு மீண்டும், மீண்டும் ஆட்சியாளர்கள் வேட்டுவைக்கலாகாது.

ஆரோக்கியமான அரசியல் தீர்வைக் கொண்டுவந்து அனைத்து மக்களும், அரசியல் சக்திகளும் பங்கேற்கும் ஜனநாயக நடைமுறைகள் தோற்றம் பெறவேண்டியதே காலத்தின் தேவையாக இருக்கின்றது.

### அரசின் நோக்கங்கள்

- ☆சிவில் நிர்வாக இயந்திரம் யாழ் குடாநாட்டில் பழுதின்றி இயங்குவதாகக் காட்டுவது–
- ☆புலிகளை அரசியல் ரீதியிலும் தோற்கடித்து விட்டதாக வெளிப்படுத்துவது–
- ☆யாழ்–குடாநாட்டில் இராணுவக் கட்டுப்பாடு சார்ந்த நிர்வாக வடிவங்களுக்கு ஜனநாயகச் சாயம் பூசுவது.

---

## தடுமாறும் தமிழ்க் கட்சிகள்!

# கூட்டறிக்கையும் குறுக்கோட்டமும்

**வ**டக்கில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று ஐந்து தமிழ் கட்சிகள் கூடி முடிவு செய்ததாகப் பத்திரிகைகளில் அறிக்கை வெளியாகியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வழக்கம் போல தனியாக ஒரு அறிக்கை விடுத்து உள்ளூராட்சித் தேர்தல் நடத்த முடியாத சூழல் இருப்பதாகத் தெரிவித்தது.

வழக்கமாக இவ்வாறான தேர்தல்களில் கூட்டணி ஆர்வம் காட்டுவதில்லை.

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களிலும் கூட்டணி போட்டியிடவில்லை. பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டது.

பாராளுமன்றம் செல்லக்கூடிய விருப்பம் உள்ளவர்கள் மட்டுமே கூட்டணியின் முக்கிய அச்சாணிகளாக இருப்பதால், அவர்கள் உள்ளூராட்சித்தேர்தல்களில் ஆர்வம் காட்டுவதில்லை.

ஏனைய தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை எத் தேர்தலையும் அவர்கள் தவறவிடுவதில்லை. ஜனநாயகப் பாதைக்கு வந்த பின்னர் ஏனோ அப்படியொரு பிடிவாதம்(?!)

வேட்பாளர் பட்டியலை நிரப்புவதும் அவர்களுக்கு ஒன்றும் கஷ்டமல்ல.

அரசியல் என்றால் பலதும் பத்தும் இருக்கத்தான் செய்யும் என்ற அடிப்படையில் மசாலாப்பட்டியல் வெளியிட்டு தேர்தலில் போட்டியிடமுடியும்.

ஒரு இயக்கத்தில் இருந்து பணத்தோடு ஒடியவர், ஒழுக்க மீறலில் ஈடுபட்டவர் இன்னொரு இயக்கத்தின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவார்.

தமது சமூக விரோத செயல்களையும், கட்டுப்பாட்டு மீறல்களையும் நியாயப்படுத்த




குறிப்பிட்ட சில பேர்வழிகளுக்கு வாய்ப்பளிப்பதும் 'ஜனநாயகம்' என்று தமிழ் கட்சிகள் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலத்தில் தமிழ் கட்சிகள் வெளியிட்ட வேட்பாளர் பட்டியல்களில் இருந்து தெரிந்து கொண்ட உண்மை அதுதான்.

பொறுமையாகத் திட்டமிட்டு கட்டுக் கோப்பான அரசியல் அணிகளை உருவாக்குவதில் ஜனநாயகப் பாதைக்கு வந்துள்ள தமிழ் கட்சிகள் அனைத்துமே இதுவரை வெற்றிபெறவில்லை.

இக் கட்சிகளின் பலம் என்பது ஓடுகாலிகளைத் தக்கவைத்துக் கொள்ளும் திறமையில்தான் தங்கியிருக்கிறது. அதனால் பதவிகள், வசதிகள் என்பவற்றை பங்கிட்டுக் கொடுக்கக்கூடிய தேர்தல்கள், மற்றும் வாய்ப்புக்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

அதன்பொருட்டு தமது அரசியல் நிலைப்பாடுகளில் உறுதியாக நிற்க முடியாமல் ஊசலாடுகின்றன.

எதையும் தீர்மானிப்பவர்களாக இல்லாமல் அவ்வப்போது தோன்றும் நிலைமைகளுக்கு ஏற்ப அந்த நிலைமைகளில் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கிச் செல்பவையாக தமிழ் கட்சிகள் மாறிவிட்டன.

இந்தப் பலவீனத்தை உணர்ந்தே தமிழ் கட்சிகளின் கருத்தைக் கேட்காமல் அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்பை வெளியிட்டது.

தேர்தல் நடந்தே தீரும் என்ற நிலை உருவானால் தமிழ் கட்சிகள் ஓடிவரும் என்று நினைத்துவிட்டது அரசாங்கம்.

அப்படியிருந்தும் வடக்கில் உள்ளூராட்சிச் சபைத்தேர்தலைக் கண்டித்து ஐந்து தமிழ் கட்சிகள் கூட்டாக அறிக்கை விட்டது ஒரு ஆச்சரியம்தான்.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்த வேண்டாம் என்று அறிக்கை விட்ட ஐந்து தமிழ்கட்சிகளில் ஒன்று ரெலோ.

அறிக்கை விட்ட சூட்டோடு சூடாக தேர்தல் கமிஷனர் அலுவலகத்துக்குச் சென்று வேட்பு மனுக்களைக் கேட்டு வாங்கியது ரெலோ இயக்கம்.

வேட்பு மனு வாங்கப் போவது தொடர்பாக ஏனைய நான்கு கட்சிகளுக்கு ரெலோ மூச்சேவிடவில்லை. மறுநாள் பத்திரிகையில் செய்தி வந்தபோதுதான் ஏனைய கட்சிகளுக்கு விஷயமே தெரியும்.

சமீபகாலமாக அரசும், புலிகளும் பேச வேண்டும் என்று ரெலோ இயக்கம் பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.

புலிகளை அரசியல் ரீதியில் பலவீனமாக்கும் ஒரு நோக்கமும் பிரதான உள்ளடக்கமாக உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட தனது சக கட்சிகளையும் பின்னால் தள்ளிவிட்டு ஓடியது.

இவ்வாறான தடுமாற்றங்கள் தமிழ் கட்சிகள் தமது அரசியல் நிலைப்பாடுகளில் தெளிவாக இல்லையென்பதையே காட்டுகின்றன.

புலிகள் உள்ளூராட்சித் தேர்தலை கடுமையாகச் சாடி அறிக்கைவிட்ட பின்னர் தான் மீண்டும் ஐந்து தமிழ் கட்சிகளும் கூடின. யாழ்குடாநாட்டில் போட்டியிடுவதில்லை என்று முடிவு செய்தன.

முதல் எடுத்த முடிவில் ஏற்பட்ட தடுமாற்றத்தை நிறுத்த புலிகளின் அறிக்கைதான் தேவைப்பட்டிருக்கிறது.

# தருவது 22 ரசிகன்

கடிதத்தோடு தம்பி சிவநாராயணனை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

எனது பெயருக்கு கடிதம் வந்ததை வீட்டில் யாரிடமும் சொல்லவில்லை. கடிதத்தில் என்ன இருக்கிறது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

நாலெழுத்துக் கூட்டி வாசிக்கப் படித்திருந்தால் எத்தனை உபயோகமாக இருந்



பூலான்

# கொள்ளை ராணி - பூலான்தேவி

திருக்கும். நினைக்க நினைக்க கவலையாக இருந்தது.

வழியை வழியைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். இன்று மட்டும் இந்த சிவநாராயணன் வரத் தாமதமாகித் தொலைக்கிறதே என்று தவிப்பாக இருந்தது.

நல்ல வேளை அவனையாவது படிக்கவைத்தோமே. அதுவும் நான் சொல்லித்தான் அப்பா அவனை பள்ளிக்கூடம் போக அனுமதித்தார்.

இப்போது எனக்கே அவன் படிப்பு உதவியாக இருக்கிறது. இல்லாவிட்டால் வேறு யாரிடமாவதுதான் கடிதத்தைக் கொடுத்துப் படித்துச் சொல்லக் கேட்டிருக்க வேண்டும்.

கடிதத்தை யார் எழுதினார்களோ, என்ன எழுதியிருக்கிறார்களோ, அதையெல்லாம் ஒரு மூன்றாம் மனுசர் மூலம் படித்தறிவது எத்தனை அசிங்கம்?

அந்தக் கடிதத்தில் ஏதோ கெட்ட அறிகுறி இருப்பதாக என் உள்ளுணர்வு உறுத்திக்கொண்டே இருந்தது.

தூரத்தில் தம்பி சிவநாராயணன் வந்து கொண்டிருந்தான். ஆடி அசைந்து ஆறுதலாக நடந்து வருகிறான். அவன் வீடு வந்து சேரும்வரை எனக்கும் பொறுமை இருக்க வேண்டுமே!

அவனை நோக்கி கடிதத்தோடு ஓடினேன். அவன் கையைப் பிடித்து தரதரவென்று இழுத்துக் கொண்டு ஒரு தனியான இடத்திற்குச் சென்று, கடிதத்தை அவனிடம் கொடுத்தேன்.

"என்னக்கா இது?"

"தெரிந்தால் ஏனடா உன்னிடம் தருகிறேன்.?

படி, படித்துச் சொல்லடா!"

கடிதத்தைப் படிக்கத் தொடங்கிய அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றேன்.

படித்துக் கொண்டிருந்தவனின் முகம் பேயறைந்தவன் முகம் போலாகியது.

"என்ன..... என்னடா, எழுதியிருக்கிறது?" என்றேன் பொறுமையில்லாமல்.

"அக்கா! அது வந்து.."

"என்னடா.. படியடா, சத்தம் போட்டுப்படி!"

"வேண்டாம் அக்கா!"

"உதைபடாதே! படியடா"

கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான் தம்பி சிவநாராயணன்.

"அடியே பூலான்! இது எச்சரிக்கையல்ல, அறிவித்தல்.

கிராமத்தின் ஒழுக்கத்தைக் கெடுத்து குட்டிச் சுவராக்கி வருகிறாய்.

பூல்சிங் என்னும் நிலச்சுவாந்தாருக்கு நீ ஆசை நாயகியாக இருப்பது எங்களுக்குத் தெரியும்." தொடர்ந்து படிக்காமல் நிறுத்திவிட்டு என் முகத்தைப் பார்த்தான் தம்பி சிவநாராயணன்.

என் உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் "ம்.. மேலே படி" என்றேன்.

"பூல் சிங் ஒரு கிழவன். அவனால் மட்டும் உன்னைக் கவனிக்க முடியுமா கண்ணு? நீ அமோக விளைச்சல் கண்ட தோட்டம். ஒரு தோட்டக்காரன் போதுமா? போதாது.

கிராமத்து நிலச்சுவாந்தார்கள் பலர் உன் தோட்டத்தை குத்தகை எடுத்திருக்கிறார்கள். நீயும் கூசாமல் கொடுத்திருக்கிறாய். இப்படியே விட்டால் இந்தக் கிராமத்தையே நீ மேய்ந்து விடுவாய்.

அதனால் நாங்கள் உனக்கு வழக்கம் போல- வழக்கமான தண்டனையைத் தரப்போகிறோம். தயாராக இரு. இது நம் தலைவர் பாபு சிங் குஜாரின் உத்தரவுப்படி எழுதப்பட்டது."

கடிதத்தை திக்கித் திணறி வாசித்து முடித்த சிவநாராயணன் முகம் பயத்தால் இருண்டுவிட்டது.

"அக்கா! என்னக்கா இது?" என்று அழத் தொடங்கிவிட்டான்.

அவர்கள் கூறும் தண்டனை எப்படிப் பட்டது என்று கிராமத்தில் அனைவருக்குமே தெரியும்.

மூக்கையும், காதையும் வெட்டிவிடுவார்கள். கிராமத்தில் சில பெண்களுக்கு அந்தத் தண்டனை வழங்கப்பட்டதுண்டு.

மூக்கை வெட்டிவிட்டு காயத்திற்கு கட்டும் போடாமல் போய்விடுவார்கள். இரத்தப் பெருக்கால் சில பெண்கள் செத்தே போய்விட்டனர்.

இதையெல்லாம் கேள்விப்பட்டிருந்ததால்தான் சிவநாராயணன் பயந்து நடுங்கினான்.

மூக்கும், காதும் இல்லாத தோற்றத்தில் என்னைக் கற்பனை செய்து பார்த்திருப்பான் போலும். அவன் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது.

குடும்பத்திலேயே எனக்கும், தம்பி சிவநாராயணனுக்கும்தான் ஒட்டுதல் அதிகம்.

"அ..அக்.. அக்கா.. அம்மாவிடம் சொல்லலாம் அக்கா, பொலிஸ்.. பொலிசில் சொல்லலாம் அக்கா..."

**கடந்தவாரம்**

**பொலிசிலிருந்து விடுதலையான பூலானை கிராமத்தினர் வெறுக்கின்றனர். பூலானை கொள்ளைக் கோஷ்டி கடத்தத் திட்டமிட்டிருப்பதாக ஒரு பையன் வந்து சொல்கிறான். பூலானுக்கு தபாலில் ஒரு கடிதம் வருகிறது. இனி...**

"பொலிசா..?" எனக்குச் சிரிப்பாக இருந்தது. அடுப்பில் இருந்து நெருப்பில் விழுந்தது மாதிரித்தான் பொலிசில் சொல்வதும்.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்றிருப்பவர்களிடம் எப்படிப் போய் முறையிடுவது?

"அழாதே, நானே அழவில்லை, நீ ஆண்பிள்ளை அழுகிறாயே! தைரியமாக இருக்க வேண்டும், என்ன தெரிகிறதா? தைரியமாக இருக்க வேண்டும்!"

அவன் கண்களைத் துடைத்துவிட்டேன். "வாடா போகலாம்!"

வீட்டில் சொன்னதும் அம்மா ஒப்பாரி வைக்கத் தொடங்கிவிட்டாள். அப்பா பயத்தில் உறைந்துபோய், எதுவும் பேசாமல் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பாபுசிங் குஜார் என்ற பெயரைக் கேட்டாலே எங்கள் கிராமம் பயத்தில் ஆடிப்போகும். விக்ரம் சிங் மல்லாவின் கொள்ளைக் கோஷ்டித் தளபதிகளில் ஒருவன் தான் பாபுசிங் குஜார்.

ரொம்பப் பொல்லாதவன். கொலை, பாதகச் செயல்களுக்கு அஞ்சாதவன் என்று பெயரெடுத்தவன்.

அவன்தான் கடிதம் அனுப்பியிருக்கிறான் என்றதும் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் பாதி உயிர் போய்விட்டது.

எனக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"அவனது பெயரில் மையாதீன் கடிதம் எழுதி மிரட்டியிருக்கலாம். கொள்ளைக் கோஷ்டிக்காரர்களுக்கு என்னில் ஒரு கோபமும் கிடையாது. நீங்கள் ஏன் பயந்து சாகிறீர்கள்?" என்று சொன்னேன்.

அப்படியும் இருக்கலாமோ என்பது போல அம்மா என்னை ஒரு பார்வை பார்த்தாள். அப்படித்தான் இருக்கவேண்டும் என்று அவள் விரும்பினாள்.

அந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் நீடிக்கவில்லை.

கிராம அதிகாரியின் வேலையாளான ராதேஷ்யாம் என்பவன் எங்கள் வீடு தேடி வந்தான்.

அவனும் ஒரு கழுதைதான். அவனைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. அவன் பார்வையே சரியில்லை. 'பொறுக்கி' என்று நெற்றியில் பச்சை குத்தவேண்டும்.

சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு வீட்டுக்குள் வந்தவன், அப்பாவிடம் இரகசியம் பேசுவது போல, "பூலானை கடத்தப் போகிறார்கள். நம்ம சாதிப் பெண்ணாச்சே. அதனால் மனம் கேட்கவில்லை. அறிந்ததைச் சொல்லலாம் என்று யாருக்கும் தெரியாமல் தான் வந்தேன். என்னதான் கிராம அதிகாரிக்கு விசுவாசமாக இருந்தாலும் சாதி உணர்ச்சி இல்லாமல் போகுமா? நான் வரட்டுமா?"

போகும்போது என்னைக் கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டுதான் போனான் மூதேவி.

அவன் வந்துபோனதும் மறுபடியும் அம்மா அழத்தொடங்கிவிட்டாள்.

நடு இரவாகிக் கொண்டிருந்தபோது தான் எல்லோரும் தூங்கப் போனோம்.

என் ஒரு புறம் தம்பி சிவநாராயணன் படுத்திருந்தான். மறு பக்கத்தில் தங்கை முன்னி படுத்திருந்தாள். கொஞ்ச நேரத்தில் அவர்கள் ஆழ்ந்து தூங்கிப்போனார்கள்.

நான் மட்டும் தூங்கவில்லை. ஏதோ ஒன்று நடக்கப் போகிறது என்பது என் உள்ளுணர்வுக்குத் தெரிந்து விட்டது.

திடீரென்று நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்கத் தொடங்கியது.

நான் காதுகளைத் தீட்டிக் கொண்டு கவனித்தேன்.

எங்கள் வீட்டின் முன்பாக ஆட்கள் நடமாடுவதும், மெல்லப் பேசிக்கொள்வதும் கேட்டது.

என்னதான் துணிச்சலாக இருந்தாலும் அடி வயிற்றுக்குள் பந்து உருள்வதைப் போல சட்டென்று ஒரு கலக்கம் வரத்தான் செய்தது.

தம்பியை எழுப்பலாமா? வேண்டாம், அம்மாவைப் போய் எழுப்புவோம். படுக்கையை விட்டு மெல்ல எழுந்தேன்.

நான் எழவும், அவர்கள் எங்கள் வீட்டுக் கதவைத் தட்டத் தொடங்கவும் சரியாக இருந்தது.

சத்தம் கேட்டு அம்மாவும் அப்பாவும் எழுந்துவிட்டனர்.

"திற கதவை!" குரல் கடுமையாக ஒலித்தது. முரட்டுக் குரல்.

அம்மா அப்பாவைப் பார்த்தாள்.

"பூலான் நீ போய் ஒளிந்துகொள்!" என்று காதருகில் சொன்னார் அப்பா. மிகவும் பயந்திருந்தார். குரல் நடுங்கியது.

"வேண்டாம் அப்பா, உங்களை விட மாட்டார்கள். கதவைத் திறவுங்கள், நான் இங்கேயே நிற்கிறேன்"

"பூலான் அப்பா சொல்வதைக் கேளடி!"

"வேண்டாம் அம்மா"

"ஐயோ அப்பா சொன்னதுமாதிரி கேளடி!"

கதவை இடிக்கத் தொடங்கிவிட்டார்கள். நாய்கள் விடாமல் குரைத்துக் கொண்டிருந்தன.

"திற கதவை, திற கதவை!" என்று கதவை இடிக்கும் நாய்களும் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் வீட்டின் பின்புறமாக ஓடினேன். அங்கே விறகுக் கட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதன் பின்னால் மறைந்து கொண்டேன்.

கதவு திறக்கப்பட்டு கொள்ளைக் கோஷ்டி வீட்டுக்குள் புகுந்துவிட்டது என்பது புரிந்தது.

"பூலான் எங்கே, அந்த வேசை எங்கே?" என்று யாரோ ஒரு நாய் கத்திக் கேட்கிறான்.

"இந்த ரெண்டு கிழடுகளையும் கட்டிப் போடுங்கடா!" என்று யாரோ ஒரு நாய் மகன் கத்துகிறான்.

வீட்டுக்குள் ஏதோ உருண்டு விழும் சத்தம். "அய்யோ அம்மா!"

அய்யோ... அது என் தம்பி சிவநாராயணின் குரல். அவனை இந்த வேசிமக்கள் என்ன செய்கிறார்கள்?



"அடியே பூலான், சிறுக்கி வேசி, இங்கேதான் எங்கேயோ நீ ஒளிந்திருக்கிறாய். நாங்கள் யாரும் உன்னை தேடமாட்டோம். உன் ஆத்தாளும், அப்பனும், உன் தம்பிப் பயலும் கொஞ்சம் கொஞ்சமாக சாகப் போகிறார்கள். இவனை தலைகீழாக தூக்கிக் கட்டடா. சிறுக்கி ஒளிந்து கிடக்கிறாளா, வெளியே வருகிறாளா பார்க்கலாம்."

கத்தியவன் வீட்டின் பின்புறம் தலையை நீட்டி சுற்றிலும் நோக்கினான்.

பரட்டைத் தலை. பெரிய தாடி. முகத்தைப் பார்க்கவே கொடூரமாக இருந்தது.

இவன்தான் பாபு சிங் குஜாராக இருக்க வேண்டும்.

"அ..அ..அய்யோயோயோ..!"

உயிர் போவதுபோல தம்பி கத்திய சத்தத்தில் அந்தப் பிரதேசமே ஆடிப்போனது போல இருந்தது.

எனக்காக- என் ஒருத்திக்காக என் குடும்பமே அழிவதா?

கொள்ளையர்களை நான் சந்திக்க விரும்பினேன். ஆனால் இந்த மாதிரியான ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் என்று எதிர்பார்க்கவில்லை.

எலியும் பூனைகளும்போல சந்திக்க வேண்டிவரும் என்று நினைக்கவில்லை.

தலையை நீட்டியவன் உள்ளே போய் விட்டான்.

"அய்யோ.. என் பிள்ளை!" அம்மாவின் கிரீச்சிட்ட குரல் காற்றைக் கிழித்துக்கொண்டு கேட்கிறது.

நான் மறைவில் இருந்து வெளியே வந்தேன்.

விடுவிடுவென்று நடந்து வீட்டுக்குள் போனேன்.

பரட்டைத் தலையன் பார்வை என்மீது படிந்தது. என்னால் ஆத்திரத்தை கட்டுப் படுத்த முடியவில்லை;

"நான்தானடா பூலான் தேவி. விடுங்கடா அவர்களை!"

அத்தனைபேரும் என்னை நோக்கித் திரும்பினார்கள்.

**(தொடர்ந்து வரும்)**

# உருக வைக்கும் உயிர்த்தோழி

ஆடிய ஆட்டம் என்ன, கூடிய கூட்டம் என்ன?– இன்று கலங்கி கண்ணீர்வடித்துக் கொண்டிருக்கிறார் சசிகலா.

'காபிபோசா' என்றழைக்கப்படும் சட்டத்தின் கீழ் ஒருவருடகாலம் சிறைவைக்கப் பட்டார் சசிகலா.

அச் சட்டத்தின்கீழ் தன்னை சிறை வைத்தது முறையற்றது என்று முறையிட்டார் சசிகலா. அவரது மனுவை விசாரித்த நீதிபதிகள் சசிகலாவை விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

'அப்பாடா வெளியுலகத்தைப் பார்க்கப் போகிறேன். உடன்பிறவா சகோதரியுடன் மீண்டும் சேரப்போகிறேன்' என்று மகிழ்ந்தார் சசிகலா.

ஆனால், வேறொரு வழக்கில் அவரைக் கைதுசெய்ய அனுமதி பெற்று, சிறைக்குள் இருந்து வெளியே வரமுடியாமல் செய்து விட்டனர் வருமானவரித் துறையினர்.

விஷயம் அறிந்து சிறைக்குள் சத்தம் போட்டு அழத் தொடங்கிவிட்டார் சசிகலா.

தமிழ்நாட்டையே கட்டியாண்ட சசிகலா– கண்பட்ட இடத்தையெல்லாம் சொத்தாக வாங்கிக் குவித்த பல கோடிகளின் அதிபதி– கண்ணீர்விட்டு அழுவதைப் பார்க்க சிறை அதிகாரிகளுக்கு வருத்தமாக இருந்ததாம்.

இதற்கிடையே சிறைக்குள் சசிகலாவிடம் விசாரணை நடத்தச் சென்றனர் வருமானவரித் துறையினர்.



அவர்களைக் கண்டதும் பைத்தியம் பிடித்தவர்போல் நடந்துகொண்டார் சசிகலா. அவர்களது கேள்விகளுக்கு சத்தம் போட்டு பதில் சொல்லிக்கொண்டிருந்தவர் திடீரென்று மயங்கி விழுந்தார்.

அதன்பின்னர் மருத்துவமனைக்கு ஸ்ரெச்சரில் கிடத்தித் தூக்கிப்போனார்கள்.

பத்திரிகையாளர்கள் அக் காட்சியை புகைப்படம் எடுத்து வெளியிட்டனர். அதனைப் பார்த்த ஜெயலலிதா மனம் பொறுக்க முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதாராம்.

காலம் மாறினால் கௌரவம் மாறுமோ....? மாறும்தான்!

# கைப்பிடிக்க வந்த திருடி

## 84 தேடிய 19

19 வயதான அழகியைத் திருமணம் செய்யும் 84 வயதான முதிய வாலிபரின் திட்டத்தில் மண் விழுந்துவிட்டது. ரொம்பவும் சோகமாக இருக்கிறார் மணமகன்.

இத்தாலி நாட்டில் சர்டினியா என்னும் தீவு இருக்கிறது. இத்தீவில் உள்ள பணக்காரர்களில் ஒருவர் பிரான்சிஸ்கோ புருண்டு.

இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். மூன்று வருடங்களின் முன்னர் மனைவி இறந்துவிட்டார்.

கோடி கோடியாகப் பணம். ஜாலியாக இருக்க ஒரு துணைவேண்டாமா? துணைதேடினார். 'இளம் வயதுப் பெண் உடனேதேவை. கொஞ்சம் அறிவு, நிறைய அழகு போன்றவற்றுடன் 20 வயதுக்குள் இருந்தால் நல்லது' என்று விளம்பரம் செய்தார்.

பல இளம் பெண்கள் படையெடுத்து வந்தனர். குடு குடு மணமகனைக் கண்டதும் ஓட்டம் பிடித்தனர்.

லூசா என்னும் 19 வயது அழகிமட்டும் மகா துணிச்சலுடன் அவரை திருமணம் செய்ய முன்வந்தாள்.

கிழவன் இன்றோ நாளையோ குட்டை சொல்லிவிட்டு மண்டையைப் போட்டுவிடுவான். பின்னர் சொத்தெல்லாம் தனக்குத்தான் என்று திட்டம் போட்டாள் லூசா.

இந்த விஷயம் எப்படியோ புருண்டுவின் பிள்ளைகளுக்குத் தெரிந்துவிட்டது திருமணத்தை நிறுத்தக் கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

வழக்கின்போது திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின.

லூசா ஒரு பயங்கரத் திருடி. எக்கச்சக்கமான திருட்டுக் குற்றங்கள் அவள்மீது இருக்கின்றன என்ற விபரங்கள் வெளியாகின.

லூசாவின் அழகில் மயங்கி அவளைத் தன் அருகே வைத்து பூஜிக்க நினைத்த மணமகன் அதிர்ச்சியடைந்துவிட்டார்.

"அவள் என்னிடம் மூட்டை மூட்டை



யாகப் பொய் சொல்லியிருக்கிறாள். போகட்டும்; வேறு ஒரு நல்ல அழகி கிடைக்காமலா போய்விடுவாள்!" என்று சற்றும் சளைக்காமல் மணமகள் தேடுகிறார் தாத்தா.

# "அவனைத் தூக்கில் போடுங்கள்!"

## அசராத கொலையாளி

தமிழ்நாட்டில் சிரம்பரம்- அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கோரக் கொலை பற்றி சென்ற வாரம் விபரம் வெளியிட்டிருந்தோம்.

சக மாணவன் நாவரசு என்பவரை ஓரினச் சேர்க்கைக்கு வற்புறுத்தினான் ஜான் டேவிட். நாவரசு மறுத்தான். அதனால் நாவரசைக் கொலை செய்து தலையை ஒரு குளத்தில் வீசிவிட்டு, உடலைப் பாகம் பாகமாக வெட்டி மூட்டை கட்டிக் கொண்டுபோய் ஒரு பஸ்சுக்குள் போட்டுவிட்டான்.

நடந்த கோரக் கொலையின் சுருக்கம் அதுதான்.

ஜான் டேவிட் பெயர்தான் இப்போது தமிழ்நாட்டைக் கலக்கிக் கொண்டிருக்கிறது. தினமும் தமிழகப் பத்திரிகைகளில் அவனது படங்களும், செய்திகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. விரைவில் அவனது கதை திரைப்படமாக உருவாகினாலும் ஆச்சரியமில்லை.

ஜான் டேவிட்டுக்கு தூக்குத் தண்டனை விதிக்குமாறு கோரி மாணவர்களும், பொது மக்களும் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

நீதிமன்றத்திற்கு அவனைப் பொலிசார் அழைத்துவந்தபோது பொதுமக்கள் ஆயிரக் கணக்காகத் திரண்டு நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

"கொலை வெறியன் ஜான்டேவிட்டைத் தூக்கில் போடு" என்று கோஷமிட்டனர்.

நாவரசுவின் உடலை கேக் வெட்டுவது போல சுவாரசியமாக வெட்டித் துண்டு




நீதிமன்றத்தில் ஆஜர்

போட்டிருக்கிறான் ஜான் டேவிட்.

உடலை வெட்ட டாக்டர்கள் பயன்படுத்தும் 2 கத்திகள், 2 பிளேட் ஆகியவற்றை உபயோகித்து கச்சிதமாகக் காரியத்தை முடித்தானாம். அவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

நாவரசுவின் உடலில் ஒரு கை, ஒரு கால் ஆகியவற்றைக் காணவில்லை. எங்கே வீசினாய்? என்று கேட்டால் ஒவ்வொரு இடமாக பொலிசாரை அழைத்துச் சென்று அலையவைக்கிறானாம் டேவிட். பொலிஸ் காவலில் உள்ள ஜான் டேவிட் கொஞ்சமும் அசரவில்லை. "ஏதோ நடந்தது நடந்து போச்சு. என் கெட்ட காலமோ, நாவரசுவின் கெட்ட காலமோ இப்படியாகி விட்டது" என்று சொல்லும் ஜான் டேவிட்டைப் பார்த்து பொலிசார்தான் அசந்துபோய் நிற்கிறார்கள்.



# தகவல் பெட்டி

## பலூன் அது வானத்தின் மேலே


↓ 300 அடி உயரத்தில் பறக்கிறது இராட்சத பலூன். அதன் அடிப்பகுதியின் ஒரு தொட்டில் தெரிகிறது பாருங்கள். அதற்குள் ஒருவர், இருவரல்ல, ஏழு இராணுவவீரர்கள் இருக்கிறார்கள். பலூனின் உயரம் நூறு அடி.

காஸ் சிலிண்டர் மூலம் பலூனில் காற்றடிக்கப் பட்டது. 300 அடி உயரம் வரை வானில் எழுந்த இராட்சத பலூனின் தொட்டிலில் அமர்ந்தபடி சாகசம் செய்து காண்பித்தனர் இராணுவ வீரர்கள்.

1971ல் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் நடைபெற்ற யுத்தத்தில் இந்தியா வெற்றிபெற்றது. அந்த வெற்றியின் 25வது ஆண்டைக் கொண்டாடியது இந்திய இராணுவம். அந்தக் கொண்டாட்டத்தில் ஒரு பகுதிதான் இந்த இராட்சத பலூன் சாகசம்.

ராட்சத பலூன் மூலம் இந்திய இராணுவ வீரர்கள் இதுவரை 26 அடி உயரத்தில் பறந்து சாகசம் செய்துள்ளனர். ஆனால் 33 ஆயிரம் அடி உயரம்வரை ராட்சத பலூனில் பறந்திருப்பதுதான் உலக சாதனையாக இருக்கிறது.

அதனால் அந்த உலக சாதனையை முறியடிக்க அடுத்த வருடம் 35 ஆயிரம் அடி உயரம்வரை பறந்து சாகசம் செய்யத் திட்டமிட்டுள்ளனர் இந்திய இராணுவத்தினர். கரணம் தப்பினால் மரணம்தான்! சாகசம் செய்யவேண்டுமானால் மரணத்துடன் விளையாடித்தான் ஆகவேண்டும்.





பலூனின் அடிப் பகுதியில் உள்ள தொட்டில் இதுதான்.

## வானில் இருந்து கடலுக்குள் மோப்பம்

↑ படத்தில் இருப்பது டி.யூ-142 ரக விமானம்.

கடலின் அடியில் மிக இரகசியமாக செல்லும் நீர்மூழ்கிக் கப்பல்களையும் இந்த விமானம் மோப்பம் பிடித்துவிடும். இந்தியக் கடற்பகுதியில் பிறநாட்டு நீர்மூழ்கிகள் நடமாடினால் இதனிடம் இருந்து தப்புவது கஷ்டம்தான்.

ரசியாவிடம் இருந்து இதேபோல எட்டு விமானங்களை வாங்கி வைத்திருக்கிறது இந்தியா. கடந்த டிசம்பர் 4ம் திகதி இந்தியக் கடற்படைத் தினம் கொண்டாடப்பட்டது. முப்பதாயிரம் பொதுமக்கள் முன்பாக கடற்படை சாகசங்கள் இடம்பெற்றன. அப்போது டி.யூ-142 ரக விமானங்களும் காண்பிக்கப்பட்டன.

## பல்லவ ராஜன்



'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' என்பது பழமொழி. அந்தப் பழமொழி அமெரிக்கரான ஜோன் எம் கார்னருக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஆனாலும் அவரது பற்கள் இருக்கிறதே மகா மகா உறுதியானவை.

180 இறாத்தல் எடையுள்ள தனது நண்பரை தனது பற்களில் கட்டி தொங்கவிட்டிருக்கிறார். ஏதோ இரும்புக் கம்பியில் கயிறு கட்டித் தொங்குவது போல அந்த நண்பரும் வெகு அலட்சியமாக தொங்கிக் கொண்டிருக்கிறார்.

நமது பற்கள் என்றால் வேரோடு பிடுங்கப்பட்டு தொங்குபவரின் கையோடு போய் இருக்குமல்லவா.

"பற்பசைகளால் பல்துலக்குவது கிடையாது. கண்ட கண்ட பற்பொடிகளை பயன்படுத்துவது என்ற வழக்கமே இல்லை. இதனால் தான் எனது பற்கள் உறுதியாக இருக்கின்றன" என்று சொல்கிறார் ஜோன் எம் கார்னர்.

## சுடுவதில் சூரி

↓ இது ஒரு திரைப்படக்காட்சியோ என்று நினைத்துவிடாதீர்கள். இது நிஜக் காட்சி.

இந்த அழகு நங்கையின் பெயர் எட்ணாலி. மெச்சிக்கோ நாட்டைச் சேர்ந்தவர்.

கண்ணாடியில் பார்த்துக் கொண்டு பின்னால் 65 அடி தூரம்வரை குறிதவறாமல் சுட்டுத்தள்ளி விடுவார்.

அதுமட்டுமா இன்னொரு சாதனையும் செய்திருக்கிறார். 65 அடி பின்னால் உள்ள ஒரு அட்டையை சதுர வடிவாக சுட்டு, துளைகளை ஏற்படுத்தி சதுரவடிவ அட்டைகளாக துண்டு போட்டுவிடுவார். .22 ரிவேல்வர் மூலமாக குறிதவறாமல் சுடும் எட்லிணாவை 'குறிதவறாத நிபுணி' என்று அழைக்கிறார்கள். பின்புறமாக குறி தவறாமல் சுடுவது அசாத்திய சாதனைதான்.



## விலை உயர்ந்த ஒற்றன்

→ படத்தில் இருப்பது 'மினி ரேப் ரெக்கொடர்' என்று உடனே சொல்லிவிடலாம். ஆனால் இது சாதாரண ரெக்கோடர் அல்ல. அமெரிக்க உளவுநிறுவனமான சி.ஐ.ஏ.யின் ஒற்றர்கள் பயன்படுத்துவதற்காக விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது.

ஒரு தீப்பெட்டியின் அளவில்தான் இது இருக்கும். எடை, ஆக மொத்தம் நூறு கிராம் மட்டும்தான். இதனை இயக்க பற்றரி தேவையில்லை. 0 பாகையிலிருந்து 49 பாகை சென்ரிகிரேட் வரையான வெப்பம் இருந்தால்போதும். அதன் உபயத்தில் இயங்கக்கூடியது. ஒரு அறையில் பத்திரமாக மறைத்து வைத்துவிட்டு நைசாக வந்துவிட வேண்டியதுதான். தூரத்தில் இருந்து ரிமோட் கொன்றோல் மூலம் இதனை இயக்கலாம். நிறுத்தலாம். மொத்தமாக இரண்டு மணி நேர உரையாடல்களை பதிவு செய்யக்கூடியது.

இதன் விலைதான் கொஞ்சம் அதிகம். நாலு இலட்சம் ரூபாய்கள்!

உள்ளத்தை அறிய கருவிகள் இல்லாவிட்டாலும் உளவறியமட்டும் புது புது உத்திகளும் கருவிகளும் வந்துவிட்டன. அதனால் அறையில் நடந்தாலும் எதுவும் அம்பலமாகிவிடும் முக்கிய புள்ளிகள் வாய் திறக்கவே இனிமேல் யோசிக்க வேண்டியிருக்கும். எந்த மூலையில் 'ரேப் ரெக்கோடர்' கிடக்கிறதோ?



# பிரபுவுடன் நக்மா சமரசம்!
## இயக்குநர் முயற்சியால் பலன்

'பெரிய தம்பி' படத்தில் பிரபுவுக்கு முத்தம் கொடுக்க மறுத்தார் நக்மா. இந்த விடயம் எப்படியோ வெளியே தெரிந்துவிட்டது.

பிரபு அதனை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், சிவாஜியின் மகனுடன் நகராது செய்த நடிகை என்று பெயர்வரப்போகிறது. அது மார்க்கெட்டைப் பாதிக்கும் என்று பலரும் நக்மாவுக்கு புத்தி சொன்னார்களாம்.

ஆடிப்போனார் நக்மா. "எனக்கும் பிரபுவுக்கும் எந்த மோதலும் இல்லை. முத்தம் கொடுக்க நான் மறுக்கவும் இல்லை. எல்லாம் வதந்தி" என்று அறிக்கைவிட்டார் நக்மா.

போதாக்குறைக்கு பெரியதம்பி பட இயக்குநர் சித்ராலட்சுமணனைச் சந்தித்து, பிரபுவுடன் முத்தக் காட்சியில் நடிக்கத் தயார் என்று சொல்லிவிட்டார்.

சித்ரா லட்சுமணன் பிரபுவிடம் அதைச் சொல்லியிருக்கிறார். 'முத்தக் காட்சியே படத்தில் வேண்டாம்' என்று உறுதியாகச் சொல்லிவிட்டாராம் பிரபு. நக்மா முதலில் மறுத்ததுதான் பிரபுவின் பிடிவாதத்துக்கு காரணம்.

இறுதியாக சித்ராலட்சுமணன் இருவருக்கும் பொதுவாக ஒரு சமரச ஏற்பாடாக காட்சி வைத்திருக்கிறார்.

பிரபு வீட்டில் தூங்கிக் கொண்டிருப்பார். பிரபு வீட்டு சுவர்வழியாக பிரபுமீது குதிப்பார் நக்மா. பிரபு திடுக்கிட்டு கண்விழிப்பார். "ஏன் வந்தாய்?" என்று கேட்பார். முத்தம் கொடு மாமா, ஒரேயொரு முத்தம் கொடு, போயிடுவேன்" என்று நக்மா கெஞ்சுவார்.

"லெப்ரைட், லெப்ரைட் சுவிட்சின் அள்ளிக்கொடு, துரத்தித் துரத்திப் பிடிப்பேனே, நிறுத்தி நிறுத்தி அணைப்பேனே.." என்று பாடிக் கொண்டே நக்மா கெஞ்சுவதுபோல காட்சி.

பிரபுவுக்கு நக்மா முத்தம் கொடுக்க மறுத்தார் என்ற செய்தியால் பிரபு ரசிகர்கள் கோபமாக இருப்பார்கள். அதற்குப் பரிகாரமாக பிரபுவிடம் நக்மா முத்தம் கேட்டுக் கெஞ்சும் காட்சியை வைத்துவிட்டார் இயக்குநர்.

அக் காட்சிக்குப் பின்னர் பிரபுவும், நக்மாவும் மனம்விட்டுப் பேசுகின்றனராம். காதல் காட்சிகளில் நடிக்கும்போதும் பிரபுவுக்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கிறார் நக்மா.



## மேலும் 2 படங்கள்!

பாண்டியராஜன்-குஷ்பு நடிக்கும் 'கோபாலா கோபாலா' படத்தைத் தயாரித்து வரும் ரோஜா கம்பைன்ஸ் நிறுவனம் அடுத்து இரண்டு புதிய படங்களைத் தயாரிக்கவுள்ளது.

ஒரு படத்தை அகத்தியனும், மற்றப் படத்தை 'தாலாட்டுக் கேட்குதம்மா' புகழ் ராஜ் கபூரும் இயக்கவுள்ளனர்.

## இழந்த வாய்ப்பு

'மேட்டுக்குடி' படத்தை அடுத்து ஜெயராம் நடிக்கும் 'நாட்டரசன் கோட்டை' படத்தை இயக்குவதாக இருந்தார் சுந்தர். ஆனால் ரஜினியின் 'அருணாச்சலம்' படத்தை இயக்க அழைப்பு வர 'நாட்டரசன் கோட்டை'யை இயக்கும் வாய்ப்பை இழந்தார் சுந்தர்.

இப்போது 'நாட்டரசன் கோட்டை'யை குருதனபால் இயக்கி வருகிறார். இதில் ஜெயராம்- ரம்பா ஜோடியாக நடிக்கின்றார்கள்.

## மலையாளத்தில் அகானா

'அரண்மனைக்கிளி', 'சிவலப்பேரி பாண்டி' ஆகிய இருபடங்களும் பெரிய வெற்றியை எட்டின. இருந்தும் அவற்றில் கதாநாயகியாக நடித்த அகானாவுக்கு புதிய படவாய்ப்புக்கள் எதுவும் கதவைத் தட்டவில்லை. கன்னடப்படவுலகிற்குப்போனார். அங்கும் அவரது மார்க்கெட் நிலவரம் சுமார் தான். இப்போது அகானா 'ஸ்பந்தனம்' என்ற மலையாளப்படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

## சட்டம் ஒழுங்கு நிறுத்தம்

'விஸ்வநாத்' படத்தைத் தயாரித்து நடித்த சரவணன், அந்தப்படம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையில் 'சட்டம் ஒழுங்கு' என்ற பெயரில் ஒரு படத்தைத் தொடங்கினார். 'விஸ்வநாத்' படு தோல்வியடைந்து விட்டதனால் 'சட்டம் ஒழுங்கு' படம் ஆரம்ப அறிவிப்போடு நிறுத்தப்பட்டு விட்டது.

| முகப்பில் | |
|---|---|
| பிரபு<br>படம்:பெரியதம்பி | சருகிராஜ்<br>படம்:வீரத்தாலாட்டு |

## பகைவனில் பானுப்பிரியா?


'அமைதிப்படை', 'வில்லாதி வில்லன்', 'சிவசக்தி' 'சேனாதிபதி' என தொடர்ந்து வித்தியாசமான பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார் சத்யராஜ்.

'பகைவன்' படத்திலும் முற்றிலும் மாறுபட்ட பாத்திரத்தில் தோன்றப்போகிறார். இதில் அஜித்குமாரும் நடிக்கிறார். அஜித்குமாருக்கு மும்பை அழகி அஞ்சலா ஜோடியாக நடிக்கிறார்.

சத்யராஜுக்கு ஜோடியாக பானுப்பிரியா நடிக்கலாம் என்று பேசப்படுகிறது.

'கட்டளை' என்னும் படம் தயாரித்து அதில் சத்யராஜை கதாநாயகனாக நடிக்கவைத்தவர் பானுப்பிரியா. சத்யராஜுடன் நெருக்கமானவர் என்றும் பெயரெடுத்தவர்.

சமீபகாலமாக சோகம் மீது சோகமாக வாடிப்போயிருக்கிறார் பானுப்பிரியா. சத்யராஜைச் சந்தித்து தன் சோகத்தை கொட்டினாராம். மனம் நெகிழ்ந்துபோன சத்யராஜ் பகைவன் படத்தில் அவருக்கு வாய்ப்புக் கொடுக்க நினைத்திருக்கிறார்.





## "நான்தான்டா அருணாச்சலம் நான் அனைவருக்கும் சொந்தமடா"

'அருணாச்சலம்' படத்திற்கு தேவா இசையமைக்க வைரமுத்து பாடல் எழுதுகிறார்.

முன்னர் ரஜினியின் 'அண்ணாமலை' படத்தில் தேவாவின் இசையில் வைரமுத்து எழுதிய பாடல்கள் சூப்பர் ஹிட்டாகின.

'நான் குடித்தது தாய்ப்பாலு, என்னை வளர்த்தது தமிழ்ப்பாலு' என்று ரஜினிக்காக ஒரு பாட்டெழுதியிருந்தார் வைரமுத்து.

'அருணாச்சலம்' படத்தில் வைரமுத்து இப்போது எழுதியுள்ள பாடல் பின்வருமாறு ஆரம்பமாகிறது:

"அருணாச்சலம் நான்தான்டா அருணாச்சலம் நான்தான்டா, அன்னை தமிழ் நாட்டில் நான் அனைவருக்கும் சொந்தமடா, நான் உப்புப்போட்ட ஆள் மறப்பதில்லடா, தப்புச் செஞ்ச ஆள் விடுவதில்லடா.."

இந்தப் பாட்டும், இசையும் ரஜினிக்கு பிடித்துப்போய்விட்டதாம். வைரமுத்துவையும், தேவாவையும் கட்டியணைத்து பாராட்டினார்.

படம் ஆரம்பித்தவுடன் அந்தப் பாடலுடன் தான் தோன்றுவார் ரஜினிகாந்த்.

வேகமாக படப்பிடிப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

## கமலின் அடுத்த படம்

வயிறு குலுங்க சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்(ர்)ள் அவ்வை சண்முகி.

அடுத்த படம் நகைச்சுவைப் படமாக இருக்காது. ஒரே மாதிரியாக விருந்து போட்டால் ரசிகர்களுக்கு திகட்டிவிடுமாம். அதனால் சீரியசான பாத்திரம் ஒன்றில்தான் அடுத்த படத்தில் தோன்றுவாராம் கமல்.

சத்யராஜின் மனேஜர் ராமநாதன் தயாரிக்கும் படமொன்றில் கமல் அடுத்து நடிக்கலாம் என்று தகவல்.

ஏற்கனவே கமலின் தயாரிப்பான 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' படத்தில் சத்யராஜ் கதாநாயகனாக நடித்திருந்தார். அந்த நன்றிக்காக சத்யராஜின் மனேஜர் படத்திற்கு கமல் முன்னுரிமை கொடுக்கக்கூடும்.

இந்தியில் 'லேடீஸ் ஒன்லி' படப்பிடிப்பில் இப்போது பிஸியாக இருக்கிறார் கமல்.

## தனிமையில் இனிமை

சக்கரவர்த்தியுடன் காதலும் கிடையாது? கத்தரிக்காயும் கிடையாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார் மகேஸ்வரி. ஆனால் சக்கரவர்த்தி மட்டும் மகேஸ்வரியை லவ்பண்ணுகிறாரா இல்லையா என்பதற்கு இன்றுவரை பதில் சொல்லவில்லை.

தெலுங்குப் படங்களில் நடிக்க ஆந்திரா போனால் படப்பிடிப்பு தவிர்ந்த நேரங்களில் சக்கரவர்த்தியுடன்தான் சுற்றுகிறார் மகேஸ்வரி. கற்றது கையளவு கல்லாதது கடலளவு என்ற ரீதியில் தனிமையில் இனிமை கண்டுவரும் இருவரும் உண்மையை மட்டும் மறைக்கிறார்கள்.

மகேஸ்வரியும் சக்கரவர்த்தியும் இணைந்து நடித்த மற்றுமொரு தெலுங்குப் படம் தமிழில் வருகிறது. படத்தின் பெயர், 'என்னோடு கலந்துவிடு'. பொருத்தமான பெயர்தானே!

தமிழ்ப் பட இயக்குநர்கள் பற்றியும் குறைசொல்கிறார் மகேஸ்வரி. 'கருத்தம்மா' படத்தின் பின்னர் தமிழ்ப்பட இயக்குநர்கள் என்னை திரும்பியும் பார்க்கவில்லை. என்னிடமுள்ள கவர்ச்சியை பயன்படுத்தத் தெரியவில்லை. தெலுங்கில் போய் புகழ் பெற்ற பின்னர்தான் இப்போது அழைப்பு விடுக்கிறார்கள்" என்கிறார்.

## சுருதிக்கு அதிஷ்டம்

பாலசந்தர் இயக்கத்தில் வெளியாகியுள்ள 'கல்கி' எதிர்பார்த்தளவு அமையவில்லை. தொலைக்காட்சித் தொடர்களை இயக்கியதால், அதன் பாதிப்பில் தொய்வான ஒரு படத்தை தந்துவிட்டார் பாலசந்தர் என்கிறார்கள்.

'கல்கி' படத்தில் கதாநாயகியாக நடித்த சுருதிக்கு மட்டும் அதிஷ்டம் கதவைத் தட்டுகிறது. பாரதிராஜா இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் படம் 'வாக்கப்பட்ட பூமி'. சரத்குமாருக்கு ஜோடியாக சுருதியை நடிக்க வைக்கும் யோசனையில் உள்ளார் பாரதிராஜா.

சினி

...த்த 'பாஞ்சாலங்குறிச்சி' படத்தின் மூலம் இயக்குநராக ...னவர் பாரதிராஜாவின் சீடர் சீமான். இவர் அடுத்து ...டிக்கும் படமொன்றை இயக்கவிருக்கிறார்.

...விஜயகாந்திற்கு ஜோடியாக அறிமுகமாகி, 'காதல் யுத்தம்' ...தைத் தயாரித்து வரும் ரவளி, நீண்ட இடைவெளிக்குப் பிறகு ...திய படமொன்றில் நடிக்கிறார். படத்தின் பெயர் 'மனசுக்குள்...'

...டன் இணைந்து பாக்யராஜ் இயக்கி நடிக்கும் 'வேட்டிய ...கட்டு' படத்தை இந்தியிலும் பாக்யராஜே இயக்குகிறார். ...கோவிந்தா-நக்மா நடிக்கும் இப்படத்திற்கு 'சாஜன் டாடி' ...வரிடப்பட்டுள்ளது.

...புதுமுகங்களைக் கொண்டு உருவாகி வரும் 'மார்கழிப்பூவே' ...திய இசையமைப்பாளர் உதயா என்பவரின் இசையமைப்பில் ...பிரபல பாடகியான நிரோஷா 'இன்னிசை மழையில்...' ...டங்கும் பாடலைப் பாடியுள்ளார்.

* விக்ரமன் இயக்கத்தில் விஜய் நடித்து வெற்றி பெற்ற 'பூவே உனக்காக' படத்தைத் தொடர்ந்து விக்ரமன்-விஜய் இணையும் புதிய படத்தின் பெயர் 'உள்ளத்தில் என்னைக் கொடுத்தேன்.'

* அருண்குமார்-மந்த்ரா ஜோடியாக நடித்த 'ப்ரியம்' படத்தை இயக்கியவர் பாண்டியன். இவர் அடுத்து ...ராஜ் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* 'செல்வா' படத்தில் விஜயுடனும் 'ரோஜா மலரே' படத்தில் முரளியுடனும் நடிக்கும் ரீவா, இந்தியில் 'பண்டிட் குயின்' புகழ் சேகர் கபூர் இயக்கும் புதிய படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* ராம்கி-குஷ்பு-சங்கீதா நடிக்கும் 'சின்னப் பொண்ணு பெரிய பொண்ணு' படத்தின் பெயர் தற்போது 'கல்யாண வைபோகம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

* நக்மாவின் தங்கை ரத்திகா இப்போது ரோஷினி என்ற பெயரில் கார்த்திக் ஜோடியாக 'சிஷ்யா' படத்தில் நடித்து வருகிறார். இவரைத் தொடர்ந்து நக்மாவின் இன்னொரு தங்கை ஜோதிகாவும் படத்தில் நடிக்கப் போகிறார்.



## வங்கி

## 'அழகிய லைலா' பழனி பாரதி

வைரமுத்துவுக்கு போட்டியாக உருவாகியிருப்பவர் பழனிபாரதி. 'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் சகல பாடல்களும் அவரின் உபயம்தான். 'அழகிய லைலா' பாடல் பிரபலமானதால் பழநிபாரதியும் படு பிரபலமாகிவிட்டார்.

"என்னைப் பொறுத்தவரை எல்லாப் பாடலையும் நானே எழுதுவேன் என்று சொல்வது கிடையாது. இலக்கியம் என்பது ஜனநாயகம். இதில் எல்லோருக்கும் வாக்குரிமை உண்டு. ஒரு படத்தில் எல்லாப் பாடலையும் நான்தான் எழுதுவேன் என்று யாராவது சொன்னால், அது கள்ள வாக்குப் போடுவது மாதிரி. நான் யாரையும் குறிப்பிட்டு இதைச் சொல்லவில்லை" என்கிறார் பழனிபாரதி. அதிலிருந்தே யாரையோ குறித்துச் சொல்கிறார் என்று தெரிகிறது.

## அஜித் தனியறையில்

சென்னை மகாபலிபுரம் கடற்கரைப் பகுதிகளில் நடிகைகள் சிலர் பங்களாக்களை விலைக்கு வாங்கி இருப்பது தெரிந்த செய்திதான்.

மகாபலிபுரத்தில் பங்களாக்கள் இருப்பது பல வழிகளிலும் வசதி என்பதால்தான் அந்த ஏற்பாடு.

பிரபல நடிகர் ஒருவரும் மகாபலிபுரம் பகுதியை தனிமையான சந்திப்புகளுக்கு தெரிவு செய்திருக்கிறார். அந்த நடிகர் யார் தெரியுமா? அஜித்குமார்.

ஹீராவின் உடும்புப் பிடியில் இருந்து தப்பிப்பதற்காகத்தான் சென்னையை விட்டு ஒதுக்குப்புறமான இடத்தை நாடியிருக்கிறாராம் அஜித்.


வேறு நடிகைகளுடனோ, பெண்களுடனோ அஜித்குமார் பழகுவதை ஹீரா வெறுக்கிறார். ஹீராவை வெறுக்கவும் அஜித்குமாரால் முடியவில்லை. உப சந்தோசங்களை உதறவும் முடியவில்லை. அதனால்தான் ஹீராவின் கண்களில் இருந்து தப்ப இந்த ஏற்பாடாம்.

## புதிய வரவு

நரேஷ் கிருஷ்ணா, வசந்த் ஆகியோரைத்தொடர்ந்து கே.பாலசந்தர் பாசறையில் இருந்து புதிதாக வருகிறார் சரவணன். இவர் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'காதல் மன்னன்' என்ற படத்தை இயக்குகிறார்.

'காதல் மன்னன்' படத்தின் கதையை நகைச்சுவை நடிகர் விவேக் எழுதியுள்ளார். இவரும் கே.பாலசந்தரிடம் சிறிது காலம் உதவியாளராகப் பணிபுரிந்தவர்.

## சினிவிசிட்






## அன்றைய காதல் காட்சி

எம்ஜி.ஆர், சிவாஜி காலத்திலேயே 'காதல் மன்னன்' என்று அழைக்கப்பட்டவர் ஜெமினி கணேசன்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் காதல் மன்னராகத்தான் இருந்தார். நடிகை சாவித்திரியும் அவரது மனைவிகளில் ஒருவர்.

தற்போது ஜெமினி கணேசனுக்கு 77 வயது. 'அவ்வை சண்முகி' படத்தில் கமலின் மாமனாராக வெளுத்து வாங்கியிருக்கிறார். 'காலமெல்லாம் காதல் வாழ்க' போன்ற படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

'காதல் மன்னன்' என்று பட்டம் வந்தது எப்படி? என்ற கேள்விக்கு 77 வயதிலும் நயமாகப் பதில் சொல்லுகிறார் ஜெமினி.

"நான் பங்குகொண்ட காதல் காட்சிகளில் விரசம் இல்லாமல் பார்த்துக் கொண்டேன். நாகரீகம் அங்கு கடைப்பிடிக்கப்பட்டது. ரோஜாப்பூவை மல்லிகைப் பூவால் வருடுவது மாதிரி என் காதல் காட்சிகள் அமைந்திருக்கும்" என்கிறார் கில்லாடி.

## கௌரவ நடிகர்

'அவ்வை சண்முகி' படத்திலும் கௌரவவேடத்தில் தோன்றி தூள் பண்ணியிருக்கிறார் நாசர். 'காலமெல்லாம் காதல் வாழ்க' படத்திலும் நாசரை கௌரவ வேடத்தில் நடிக்க அழைத்தனர்.

படத்தயாரிப்பாளர் பாண்டியன் நாசரின் நண்பர். அதனால் கௌரவ வேடத்தில் நடிக்க ஒப்புக்கொண்டார் நாசர்.

நடித்ததுக்கு சம்பளம் கொடுத்தபோது நட்புக் கருதி வாங்க மறுத்துவிட்டார். "வேண்டுமானால் ஊனமுற்றோர் பாடசாலைக்கு மூன்று சக்கர சைக்கிள்கள் வாங்கிக் கொடுங்கள்" என்று சொல்லிவிட்டாராம். கௌரவ நடிகர்தான்!

## லீவு லெட்டர்

வேலைக்கோ, பாடசாலைக்கோ செல்லாவிட்டால் லீவு லெட்டர் கொடுப்பதுண்டு. படப்பிடிப்புக்குச் செல்லாமல் லீவு லெட்டர் கொடுத்திருக்கும் முதல் நடிகை சுகன்யாதான்.

'கோபுரதீபம்' படத்தில் ராமராஜனுடன் ஜோடியாக நடித்துவருகிறார் சுகன்யா. திடீரென்று ஒருநாள் லீவு லெட்டர் அனுப்பிவிட்டு வீட்டில் இருந்துவிட்டார் சுகன்யா. அவருக்காக காத்திருந்த படப்பிடிப்புக் குழுவினர் ஏமாந்துபோக, தயாரிப்பாளர் நஷ்டக் கணக்குப் பார்த்தாராம்.

சுகன்யாவின் மனநிலை அடிக்கடி மாறுகிறதாம். ஆட்சி மாறியதால் வந்த வினை. எப்படியோ படத்தை முடித்து தந்தால் போதும் என்று அழாக்குறையாகச் சொல்கிறார் தயாரிப்பாளர்.

## கால் அழகு தேடுகிறார்

நடிகை ஸ்ரீதேவி தன் அழகுக்கு அழகு சேர்க்க மூக்கை ஒப்பரேஷன் செய்துகொண்டார். உலக அழகி ஐஸ்வர்யா ராய் சினிமாவுக்கு வந்த பின்னர் மார்புகள் பெரிதாக இருக்கும்படியாக ஒப்பரேசன் செய்துகொண்டார்.

'சிறைச்சாலை', 'காதல் தேசம்' படங்கள் மூலம் தமிழ் பட ரசிகர்களுக்கும் அறிமுகமானவர் தபு. அவருக்கு ஒரே ஒரு மனக்குறை. தனது கால்கள் அழகாக இல்லையாம். அழகுக்கலை நிபுணர்கள் சிலரிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார் தபு.

ஏதாவது ஒரு பகுதியை ஒப்பரேசன் செய்தால்தான் ரசிகர்களைக் கவரலாம் என்று தபு நினைப்பது தப்புங்களா?

## இதும் வேண்டும்

தினமும் காலையில் ஒரு மணி நேரம் கடுமையான உடற்பயிற்சி செய்கிறார் சங்கவி. "உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருந்தால் தான் ரசிகர்கள் மகிழ்ச்சியடைவார்கள். படம் பார்க்க வருகிறவர்கள் கண்ணுக்கும், மனதுக்கும் இதமாக இருந்தால்தான் நடிகைகளுக்கு மதிப்பு இருக்கும்" என்று பட்டுப் பட்டென்று தத்துவக் கருத்துக்களாக வெடிக்கிறார் சங்கவி.

## நிலாவும்-கொக்கக் கோலாவும்

கார்த்திக்-கவுண்டமணி கூட்டணியின் இரு படங்கள் சூப்பர் ஹிட். 'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' இரண்டுமே வசூலை அறுவடை செய்துவிட்டன.

கார்த்திக்-கவுண்டமணி கூட்டணி தற்போது நடித்துவரும் படம் சிஷ்யா.

'சிஷ்யா' படத்திற்காக ஒரு பாடல் பதிவாகியிருக்கிறது.

"தித்திக்கிற நிலா, கொக்கக் கோலா குடித்த நிலா..." என்று தொடங்கும் அப் பாடல் காட்சியில் கார்த்திக்கும், நக்மாவின் தங்கை ரோஷினியும் நடித்தனர். செந்தில், கிரேசி மோகன், விவேக், தியாகு ஆகியோரும் நடித்து வருகின்றனர்.

# முடி இழக்காமல் இருக்க

ஆண்-பெண் தோற்றத்திற்கும் அழகிற்கும் அடிப்படையாக அமைவது தலைமுடிதான். தலைமுடி தலையின் உட்புற உறுப்புக்களுக்கும் பாதுகாப்பாக அமைகிறது. தலைமுடியைப் பாதுகாப்பது என்பது எல்லோருக்கும் சற்றுச் சிக்கலான பிரச்சனைதான்.

தலை வாரும்போது அழுத்திச் சீவக் கூடாது. அப்படிச் செய்தால் முடி உதிரும். தலைக்குத் தேய்த்துக் குளித்தவுடன் ஈரத் தலையுடன் சீவக்கூடாது. மிக நெருக்கமான பற்களையுடைய சீப்பை உபயோகிக்கக் கூடாது. தலைக்குச் சாயம் (டை) பூசுவோர் வெவ்வேறு தயாரிப்பு சாயங்களை மாற்றி மாற்றிப் பூசி வந்தால் தலைமுடியின் நுனி வெடித்து முடி உதிர்ந்து போகும் வாய்ப்பு ஏற்படும்.



அடிக்கடி 'ஹெயார் ஸ்டைலை' மாற்றுவதற்காக நீண்ட முடியைச் சுருட்டவோ, அல்லது சுருண்ட முடியைப் பரட்டையாக்கவோ கூடாது.

மருதோன்றி இலை, கரிசலாங்கண்ணிக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை ஆகியவற்றை ஒவ்வொன்றிலும் 50 கிராம் எடுத்துச் சாறு பிழிந்து அந்தச் சாற்றுடன் 400 கிராம் நல்லெண்ணையைக் கலந்து, காய்ச்சி வடிகட்டி, போத்தலில் அடைத்து வைத்துத் தினமும் தலையில் தேய்த்து வாரவேண்டும். இவ்வாறு செய்தால் முடி உதிர்வு நிற்பதுடன் நன்றாக வளரவும் செய்யும்.

இன்னொரு முறையும் இருக்கிறது. கஸ்தூரி மஞ்சள், கோரைக்கிழங்கு, கிச்சிலிக் கிழங்கு, வெட்டிவேர், விளாமிச்சை வேர் ஆகியவை நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். அவற்றில் ஒவ்வொன்றிலும் 20 கிராம் எடுத்து அத்துடன் 10 கிராம் மகிழம் பூவையும் சேர்த்துப் பொடி செய்து அரைத்து சுத்தமான நல்லெண்ணெயுடன் கலந்து சிறிது தண்ணீர் விட்டுக் காய்ச்சி ஆறிய பின் வடிகட்டி அதைத் தினமும் தலையில் தேய்க்கலாம்.

# பசி இருந்தாலும் புசிக்க முடியவில்லையா?

## உடனே கடைப் பிடிக்க ஒருயோசனை

'நன்றாக இருந்த உடம்பு திடீரென்று மெலிய ஆரம்பித்துவிட்டது. நல்ல பசி இருக்கிறது. ஆனால் சாப்பிடமுடியவில்லை,' என்பது பலரது கவலைகளுள் ஒன்று.

உடம்பு ஏன் மெலிந்து போகின்றது என்பதனை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

***சாப்பாட்டில் விருப்பம் இல்லாததால்.**
***ஏதாவது உடம்புக் கோளாறுகளால்**
***வயிற்றில் பூச்சி இருப்பதால்.**

பசி இருந்தும் சாப்பாட்டைக் கண்டாலே வெறுப்பாக இருக்கும். வாயில் எதைப் போட்டாலும் ருசி இருக்காது. இப்படியே பல நாட்கள் பசி மந்தமாக இருந்தால் உடம்பு இளைத்துப் போகும். இப்படி இருந்தால் காலையில் எழுந்ததும் இஞ்சிச் சாறு குடிக்க வேண்டும்.



**இஞ்சிச்சாறு செய்முறை:**

**இஞ்சி**- ஒரு சிறிய துண்டு
**மல்லி**- ஒரு தேக்கரண்டி
**எலுமிச்சம்பழம்**- பாதி
**சீனி அல்லது தேன்**-சிறிதளவு

இஞ்சித்துண்டைச் சுத்தம் செய்து மல்லியுடன் வைத்து நன்றாக அரைத்து காய்ச்சி ஆறியவெந்நீர் கலந்து சக்கையை வடிகட்டி விடவேண்டும். அதில் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து தேன் அல்லது சீனி கலந்து வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும்.

ஒரு மணிநேரத்தில் வயிறு 'கப கப'வென்று பசிக்கும். எது சாப்பிட்டாலும் ருசியாக இருக்கும்.

உடம்புக் கோளாறுதான் காரணம் என்றால் மருத்துவரிடம் காட்ட வேண்டும்.

வயிற்றில் பூச்சி இருந்தால் மருத்துவரின் ஆலோசனையுடன் பூச்சி மருந்து குடிக்க வேண்டும். இதனால் சாப்பாட்டில் விருப்பம் ஏற்படும். இளைத்த உடம்பு பெருக்கும்.

தினமும் ஏதாவது ஒரு வகையில் எலுமிச்சம்பழத்தைச் சாப்பிட்டு வந்தால் ஜீரணக் கோளாறுகள் எதுவும் வராது.

# நாய் வளர்ப்பது எப்படி?

நாய் வளர்க்க ஆசை இருந்தாலும், சொந்தமாகப் பெரிய வீடோ அல்லது வீட்டருகே காலியாகப் பெரிய இடமோ வைத்திருப்பவர்கள் நாய் வளர்த்தால் ஆரோக்கியமானதாக இருக்கும்.

நாயின் அருகில் சென்று கொஞ்ச, குழந்தைகளை அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் சில தொற்று வியாதிகள், தோல் சம்பந்தமான நோய்கள் குழந்தைகளைத் தாக்கும் அபாயம் உள்ளது.



நாய்க்கு எனத் தனியாகச் சாப்பிடும் தட்டு, பாத்திரம் எனத் தனித்தனியாக ஒதுக்க வேண்டும். செல்லமாக வளர்க்கின்றோம் என்று கூறிக்கொண்டு நாம் சாப்பிடும் தட்டிலே நாய்க்கு உணவு ஊட்டுவது, நாம் படுக்கும் படுக்கையில் நாயை உட்கார அனுமதிப்பது போன்றவை நமது ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.

மாதாமாதம் கால்நடை வைத்தியரிடம் கொண்டு சென்று நாயைக் காண்பித்து அதற்கென ஊசி மருந்துகளைக் கொடுப்பது நல்லது. ஏனெனில் நாய்க்கு வெறிபிடிப்பதை முன்கூட்டியே அறிந்து அதனைத் தவிர்க்கலாம். வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் நாய் வளர்ப்பது நல்லது. ஏனெனில் அவர்களால்தான் நாய் கொழு, கொழு என வளர அதிக விலை கொடுத்துப் பல வகையான உணவுகளை வாங்கிப் போட முடியும். நடுத்தரக் குடும்பங்களைக் கடனாளியாக ஆக்கிவிடும்.

## வார இறுதி நாள்

# உங்களுக்கு வசீகரமான நாள்!

அழகில்லாதவர்கள் என்று இந்த உலகத்தில் எவரும் இல்லை. அழகாகத் தோற்றமளிக்கத் தெரியாதவர்கள் தான் இந்த உலகத்தில் அதிகமாக இருக்கிறார்கள். முதலில் "நாம் அழகாக இல்லை; தோற்றப் பொலிவாக இல்லை" என்று கருதும் தாழ்வு மனப்பான்மையைத் தவிர்த்து விடுங்கள்.

எப்போது டென்ஷன் டென்ஷன் என்று குழம்பிக் கொண்டிராமல் தியானம் செய்யப் பழகுங்கள். இது உடலுக்கும், மனத்திற்கும் நன்மையளிக்கக்கூடியது.



வாரம் ஒரு முறையாவது மனதிற்குப் பிடித்த நண்பர்களுடன் மனம்விட்டுப் பேசினால் மனப்புழுக்கம் குறையும். சுமை குறைந்து நிம்மதி ஏற்படும்.

விடுமுறை நாளில் வாரம் ஒருமுறையாவது தன் தோற்றப் பொலிவைக் கவனித்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஞாயிற்றுக் கிழமையைத் தேர்ந்தெடுத்து கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்திச் செய்யலாம்:

காலை எழுந்ததும், ஆற அமர தேனீர் குடித்துவிட்டு செய்தித்தாள் படித்து விட்டு, ஒரு மணிநேரம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். (தோட்டத்தைச் சுத்தம் செய்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், துணி துவைத்தல் கூட உடற்பயிற்சிகள்தான்)

பிறகு இரண்டு துண்டு பாண் சாப்பிட்டு விட்டு, ஒரு கப் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத் தேக்கரண்டி தேன்விட்டு அருந்த வேண்டும். சுமாரான, மெலிதான உடை அணிந்து கொள்ள வேண்டும். கை, கால்விரல் நகங்களைச் சுத்தப்படுத்தி விட்டு தாங்கக்கூடிய சுடுநீரிலே கை கால்களை வைத்திருத்தல் வேண்டும். பின்னர் கை, கால்களை வெளியே எடுத்துத் துடைக்க வேண்டும்.

அடுத்து உடல், தலைமுடி முழுவதும் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றைத் தடவி, ஒரு மணிநேரம் ஊறிய பின், வீட்டில் தயாரிக்கப்பட்ட சீகைக்காய் அல்லது தரமான ஷம்பூ கொண்டு தலையை அலசிக்குளிக்க வேண்டும். பின்னர் காய்கறிகளைக் கூடுதலாகவும், சோற்றைக் குறைவாகவும் சாப்பிட வேண்டும்.

நான்கு மணிக்கு சற்று உடற்பயிற்ச்சி செய்வது நன்மை பயக்கும். பின்னர் அடுத்த வாரத்திற்கான வேலைகளைக் குறித்துக் கொள்ள வேண்டும். உடைகளை எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

இப்போது இரண்டு, மூன்று பிஸ்கெட், ஒரு கப் பால் குடிக்க வேண்டும். கூடவே நண்பர்களுடன் உரையாடுதல் அல்லது தொலைக்காட்சி பார்த்தல், புத்தகங்கள் படித்தல் போன்றவற்றை அவரவர் விருப்பத்திற்கேற்ப மேற்கொள்ளலாம்.

பிடித்த இசையைக் கேட்டபடியே வேலைகளைச் செய்வது அலாதியானது. அதற்குப் பிறகு உலாவச் செல்ல வேண்டும். 20 நிமிடம் தியானம் செய்ய வேண்டும். இரவில் இரண்டு துண்டு பாண், ஒருகப் கொழுப்பில்லாத பால் அருந்தி விட்டுப் படுக்கச் செல்லவேண்டும்.

இப்படி ஒரு ஞாயிற்றுக்கிழமையைச் செலவிட்டுப் பாருங்கள். இதனால் உங்கள் மனமும், உடலும் எவ்வளவு புத்துணர்ச்சியோடு செயற்படுகிறது தெரியுமா? பின்பு அடிக்கடி ஞாயிறு வராதா என்று ஏங்க ஆரம்பித்து விடுவீர்கள்.

வாழ்க்கை வாழ்வதற்கே!

# லேடீஸ் ஸ்பெஷல்

# கண்ணுக்கு கண் விட்டமின் 'டி'

இப்போது பெரும்பாலானோர் மிக இளம் வயதிலேயே கண்ணாடி போட்டுக் கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டார்கள். இவர்களுக்கு நல்ல கண் பார்வைக்குத் தேவையான அளவு விட்டமின் 'டி' கிடைக்கவில்லை என்பதும் ஒரு காரணம்.

இந்தக் குறையை நாம் மிக எளிதாக நீக்கிவிடலாம். பாலர் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரையுள்ள பிள்ளைகள், ஒரு நாளில் பாடசாலையில் பாதி நேரத்தையும், ரீ.வி. பார்ப்பதில் மீதி நேரத்தையும் செலவிடுகிறார்கள். அதனால் கண்கள் பலவீனமடைகின்றன. சரியான பயிற்சியும், தேவையான விட்டமின் சத்தும் தான் கண்களுக்குப் புத்துயிர் தந்து, பார்வையைத் தெளிவாக்குகின்றன.



காலையில் எழுந்ததும், சூரியனின் முன் நின்று நேராகச் சூரியனைப் பார்க்க வேண்டும். ஒரு நிமிஷம் பார்த்தால் போதும். கண்களைக் கீழிலிருந்து இடப்புறம் கொண்டு சென்று பின்பு மேல் நோக்கிப் பார்த்து மீண்டும் வலப்புறம் கொண்டு வரவேண்டும். விழிகளை மட்டும் சுழற்ற வேண்டும். முகத்தைத் திருப்பக்கூடாது. நடனம் ஆடுபவர்கள் விழிகளைச் சுழற்றுவது போல சுழற்றுங்கள்.

தினமும் இதுபோல பத்துப் பதினைந்து தடவைகள் பயிற்சி செய்தால் கண்களுக்கு நல்லது.

வெகுநேரம் படித்துக் கொண்டிருந்தால் இடையிடையே வெளியே வந்து பசுமையான மரம், செடி, கொடிகளைப் பார்ப்பதும் கண்களுக்கு ஒய்வாகும்.

# அதிஷ்டசாலிகளில் ஒருவர்



முரசின்பட்டுச்சேலைப் பரிசுத்திட்டத்தில் பங்கு பெற்றும் வாசகிகளின் எண்ணிக்கையும், ஆர்வமும் மலைப்பூட்டுகிறது. கூடை கூடையாகப் பரிசுக் குப்பன்கள் வந்து குவிகின்றன.

தனது எட்டுமாதக் குழந்தையின் பெயரில் பரிசுக் கூப்பனை நிரப்பி அனுப்பினார் திருமதி தாமரைச் செல்வி பிரபாதரன்- அதிஷ்டம் அடித்தது. செல்லக் குழந்தையுடனும் திருமதி தாமரைச் செல்வி பிரபாதரன். (வத்தளை)

# சமைப்போம் சுவைப்போம்

**தொகுத்துத் தருவது சுகந்தினி**

## படூரா

**தேவையானவை:**

உருளைக்கிழங்கு-500 கிராம்
மாவு-750கிராம்
மாஜரின்-2 மேசைக்கரண்டி
ஓமம்-2 தேக்கரண்டி
புளித்த தயிர்-1 கப்
உப்பு-அளவாக
எண்ணெய்-பொரிப்பதற்கு

**செய்முறை:**

உருளைக்கிழங்கை வேக வைத்துத் தோல் நீக்கி நன்றாகப் பிசைந்து கொள்ள வேண்டும். மாவைச் சலித்தெடுத்து அதில் மாஜரின், ஓமம், தயிர், உப்பு ஆகியவைகளைச் சேர்த்து உருளைக் கிழங்கையும் சேர்த்து கலந்து பிசைந்து ஒரு ஈரத்துணியில் வைத்துச் சுற்றி வைக்க வேண்டும்.

பின்னர் மூன்று மணி நேரம் கழித்து எடுத்துத் திரும்பவும் பிசைந்து கொஞ்சம் கனமான பூரிகளாக இட்டு, எண்ணெயைக் கொதிக்க வைத்து, அதில் போட்டுப் பொரித்து எடுக்க வேண்டும். இதுதான் படூரா.

# வறண்டதா முகம்?

முகம் வறண்டு, தோல் சொர சொரப்பாகி இருக்கிறதா?

வியர்வை வெளிவரும் போது, அதிலுள்ள நீர் ஆவியாகி விடுகிறது. இதனால் வியர்வையில் உள்ள உப்புக்கள் முகத்தின் மேற்பகுதித் தோலின்மீது படிந்துவிடுகின்றது. அடிக்கடி முகத்தைக் கழுவாவிட்டால் முகம் சொர சொரப்பாகி விடும்.

தோலின் இயற்கைச் சுரப்பியான எண்ணெய்ப் பசை மேற்தோலுக்கு வராதபடி இந்த வியர்வை உப்புக்கள் அடைத்து விடும். இந்த துளைகள் சுத்தமாக இருப்பதற்கு ஆவி பிடிக்க வேண்டும்.



வாயகன்ற பாத்திரத்தில் தண்ணீரை நன்றாகக் கொதிக்க விட்டால் ஆவி வரும். அந்த ஆவி முகத்தில் படும்படியாக முத்தைச் சற்றுத் தூரத்தில் வைத்துக் கொண்டு காட்ட வேண்டும். தோலில் உள்ள துளைகளை அடைத்திருக்கும் அழுக்குகள் விலகும்.

ஒரு சில நிமிடங்கள் இதுபோலச் செய்து வந்தால் முகத்தில் சொரசொரப்பு இருக்காது, பருக்கள் வராது, கரும்புள்ளிகள் தோன்றாது.

ஆவி பிடித்த பிறகு, சற்று நேரம் கழித்து, குளிர்ந்த நீரால் லேசாக சவர்க்காரம் போட்டு முதக்கைக் கழுவி விடவும், கிறீம், பவுடர் இவற்றிற்குப் பதிலாக, துளி பாலேட்டை முகத்தில் தடவிக் கொண்டு ஐந்து நிமிடங்களின் பின் முகத்தைக் கழுவினால் முகம் பளபளப்பாக இருக்கும்.

# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** AU

பெயர்:.......................

முகவரி:.......................

...............................

கையொப்பம்:.......................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-12-1996**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## ஹல்கரனோயா வாசகிக்கு அதிஷ்டம்!

| | |
|---|---|
| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான். | **செ. நிர்மலாதேவி** |
| | செல்வகந்தை, புருக்சைட், ஹல்கரனோயா. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# நீ நிராப்பிய என் உயிர் கோப்பை

எது கொண்டுதான்
விமர்சிக்கப் பட்டாலும்
நமக்குள்–
நீண்டு கொண்டிருக்கும்
உறவு,
காதலன்றி வேறொன்றாய்–
படுவதாயில்லை எனக்கு!
***
விதிதானிதுவென்று–
அவலங்களை
கட்டியழும் வாழ்க்கை;
அசிங்கப் படுத்துவதாயிடும்–
உறவை!
***
புரண்டு போயினும் காதலை,
நமக்கான சக்தி கொண்டு
உயிரின்–
கடைசிச் சொட்டு வரை
நிமிர்த்திப் பார்ப்பதுதான்
வெற்றியென்பேன் கண்மணி!
***
சொல்லாமல் கொள்ளாமல்
விழியுடைத்து வரும்–
கண்ணீராய்..
உன் சிறையுடைக்கும்
என் காதல்;
அப்போ–
என் எழுது கோலாய் நீயும்
நிமிர்ந்து நிற்கலாம்!
***
தரிசனமில்லாத–
தரித்திரப் பொழுதுகளிது–
சுடுகிறதா உனக்கும்?
***
வருவேன்!
இதுதான் விதியெனினும்
திருத்தியெழுதலாம் என்கிற
தீர்மானங்களோடும்,
உன் இருட்டை விரட்ட
சில தீப் பந்தங்களோடும்
வருவேன்!
***
இருட்டடித்துக் கிடக்கும்–
அமாவாசையெனினும்
நிலவை வானம்–
தொலைத்து விட்டதாய்
அர்த்தமல்ல அறி!
புதியதொரு நிலா
அங்கு–
சினைப்படுதல் அறிவாயா?
***
வருவேன்...!
அப்போ?
தூர நின்றாவது சிரி!
என்னொடு மட்டும்–
ஒரு
வெட்கம் கெட்ட
ரோசா மாதிரி!!!

ஜ.லியஸ் மஃறூக்-அட்டாளைச்சேனை.

# பூமியின் புலம்பல்

புதைத்தது இறந்து
புதிதாக முளைக்க
பூமி எனும் பெயருடன்
வாழ வந்ததும் பொய்யாகி,
தென்றல் தவழ்ந்து,
தேனருவி அசைந்து
சிந்தை குளிர்வித்தும்
மனிதன்! மந்தையாகி......
★
பூவும் பிஞ்சும்
காயாகி கனிந்து
சாறாகி பிழிந்து
சதை வளர்க்கும் பேயாகி,
ஓயாத போரும்
உதவாத குரோதமும்
நாளாக, நாளாக
நாற்ற மெடுத்து ஆறாகி,
இரத்தமும் கண்ணீரும்
வற்றாது பெருக
கல்லறைகளை
சொத்தாக்கி
கனக்க வைத்துவிட்டான்
மனிதன்!
★
எரிவாயும் அணுகுண்டும்
அரித்துவிட்ட இதயம்
அகழியாகிப் போனது;
அறுவைச் சிகிச்சையிலும்
பயனில்லை!
ஆயுள் இன்னும்
சில காலமே;
சந்தோசம் பிடிபடவில்லை.
★
கேட்கவில்லை; என்
ஆத்மாவின் ராகங்கள்
உனக்கு!
★
குருதி ஈரம் சொட்ட,
சதை சிதறி ஒட்ட,
மீதம் உள்ள உயிர்கள்
பிணக் கூடுகளாக நிற்கையில்
தென்றல் சுடுகிறது,
தேனருவி கரிக்கிறது,
சங்கீத குழலோசை
சாரமற்று கேட்கிறது.
★
மண்ணைக் கீறி
எழுந்த விதை
இரத்த வாடையுடன்
பூக்களையும்
காய்களையும்,
சிலுப்பிக் கொண்டு
நிற்பது தெரிகிறது!
தாங்கி சுமந்து
தாலாட்டுவது
தணல் மேல்
இருப்பது போல
தகிக்கிறது!
★
சாம்பர் படர்ந்த
தீக்குழம்பு உள்ளே
வெடித்துக் கொப்பளிக்க
குடைச்சல் அரிப்பு
நம நமத்து நிமிண்டுகிறது;
நாளம் வெடிக்கும் வேளை
பார்த்து
நான் அழிந்து போய்விட்டால்
இல்லையொரு சுமை எனக்கு!
★

ஜெயமணி.

# இரகசியக் காதல்

இரத்தம் கசியும்
பூவைப் போலவும்
சிறகு எரியும்
பறவை போலவும்
காதல் சிறையில்
கருகியவன் நான்!
**
காதல் பிரிவு வரைக்கும்
நான்
இரகசியக் கனவுகளின்
இராச்சியத்தை ஆண்டு
வந்தவன்!
**
எனது நிம்மதியைத் திருடிய
காதல்–பிறகு
தூக்கத்தையும்
திருடிவிட்டது.
**
அந்த காதல்
உன் ஏட்டில்
எழுதப்பட்ட தன்று;
எனது ஏட்டில்
எழுதப்பட்டது!
**
அவள் இதயத்திற்குள்
ஒரு புயலைப் போல்
போனவன்,
தென்றலாய் மெலிந்து
திரும்பினேன்.
**
அவள்
மனசுக்குள்
வரவேற்புப் பெயர்கள்
வாசிக்கப்பட்டன;
என் பெயரைத் தவிர...!
**
என் உதடுகள்
சிரிப்பை உதறிவிட்டன.
**
மார்கழியில் போட்ட
கோலங்கள் மாதிரி–
என் காதலும்!
**

கே. ஆர்.அஜ்வத்-
பள்ளிக்குடியிருப்பு.







↑ அய்.. யாரு இந்தக் குட்டிப் பெண்? 'தூறல் நின்னு போச்சு' படத்தில் அறிமுகமாகி பிரபல மடைந்த சுலக்சனாதான் அந்தக் குட்டிப் பெண்.

↑ நடிப்புலக இமயம் சிவாஜியின் இளமையான கொழு கொழுத் தோற்றம். ஓயாத நடிப்பின் மத்தியில் சிறு ஓய்வு.



# அந்தநாள் ஞாபகம்

→ இயக்குநர் இமயம் பாலச்சந்தர் நாகேஷுக்கு காட்சியை விளக்குகிறார். ஆரம்பகாலத்தில் பாலச்சந்தரின் நாடகங்களில் நடித்தார் நாகேஷ். அப்போது 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது. இருவரும் இளமை; இன்றுவரை அசத்துகிறார்கள்.

↓ இவர்களிடம் பிரபலமான ஒருவரின் முகச் சாயல் தெரிகிறதா? தெரியும்தான்! இருவரும் ரஜினியின் பிள்ளைகள்– ஐஸ்வர்யா, சவுந்தர்யா!



# துப்பாக்கி யுகம்

**பிரம்மன்:**
நண்பா!
எனக்கு,
ஓய்வேயில்லை.
உனக்கு?

**யமன்:**
தோழா!
என் தொழிலை,
துப்பாக்கிகளிடம்,
ஒப்படைத்து விட்டேன்.

**சூரியகந்த புதைகுழி:**
என்னால்,
இந்நாள்,
வெற்றி பெற்றவர்கள்,
உண்டு!
உன்னால்?

**செம்மணிப் புதைகுழி:**
ஓ அப்படியா?
என்னால்,
பின்னால்,
வெற்றி பெறுபவர்கள்
உண்டு

**வெண்கட்டி:**
நான் கறுப்பை
வெறுப்பதில்லை;
நித்தமும் முத்தமிடுகின்றேன்.
நீ?

**துப்பாக்கி ரவை:**
நான் சிவப்பை
மறுப்பதில்லை;
அன்றாடம் அதனால்தான்,
அபிஷேகம்
எனக்கு!

**இறைவன்:**
மனிதா?
இது என்ன
யுகம்?

**மனிதன்:**
இறைவா!
இதை என்னிடம்
கேட்க வேண்டாம்;
துப்பாக்கிகளிடம்
கேளுங்கள்!

-துறையூர் யூப்பிற்றர் கோவன்-

# தேன் கிண்ணம்

# கவலைகள் களைந்தோம்.....!

நாம்
நிறுத்தி விட்டோம்...!
யுத்தத்தையல்ல–
அஞ்சுவதை!
••
நாம்
அணைத்துக் கொண்டோம்..!
சமாதானத்தையல்ல–
நம்பிக்கையை!
••
நாம்
சிந்திக்கின்றோம்..!
சுகவாழ்வையல்ல–
நிஜவாழ்வை!
••
யுத்தம்...
சமாதானம்...
சுகவாழ்வு..
இவை–
அலுத்துப்போன
அடுக்குமொழிகள்.
••
யுத்தத்திற்கு
அஞ்சுவது..,
சமாதானத்திற்காய்
வேண்டுவது.....
சுகவாழ்வுக்காய்
யாசிப்பது..
இனி இருக்காது.
••
என் மனச்சாட்சியோடு மட்டும்
ஒப்பந்தம்
செய்துகொண்டேன்;
இனி எதற்கும்–
கவலைப்படுவதில்லையென்று..!
••
நான்
இறக்கும் வரைக்கும்.
மனச்சாட்சியோடு
வாழ்வேன்..
••
யுத்தம்...
சமாதானம்..
சுகவாழ்வு...
இவை--
அலுத்துப் போன
அடுக்குமொழிகள்.

ஆர்.சாந்தசீலன்-
பொரளை-03.

# இந்த வாரம் உங்கள் பலன்

(15.12.96 தொடக்கம் 21.12.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழிலில் பிரச்சனை, மனக்கவலை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- அந்நியரால் தொல்லை, கௌரவக் குறைவு. | பி.ப. | 12 | மணி |
| **செவ்வாய்**- எதிர்பார்த்த நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், மனக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- இனசன நன்மை, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1**

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நட்பு, காரியசித்தி. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- அந்நியர் சகவாசம், மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், வீண் தொல்லை குறையும். | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- மன மகிழ்ச்சி, செலவு அதிகம். | பி.ப. | 3 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- செலவு மிகுதி, ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. | 4 | மணி |
| **திங்கள்**- மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- காரியானுகூலம், பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- பலவித பேறு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| **வெள்ளி**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- வீண் குறை கேட்டல், அந்நியர் உதவி. | மு.ப. | 9 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4**

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, பலவித பேறு. | மு.ப. | 9 | மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- காரியானுகூலம், கௌரவம். | பகல் | 12 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- காரியசித்தி, கௌரவம். | மு.ப. | 10 | மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- புதிய முயற்சி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பி.ப. | 1 | மணி |
| **புதன்**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **வியாழன்**- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, செலவுமிகுதி. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், பயனற்ற செயல். | பி.ப. | 1 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4**

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், வெள்ளி. |
| தனு | - வியாழன், புதன். |
| கும்பம் | - சனி. |
| மீனம் | - கேது. |
| சிம்மம் | - செவ்வாய். |
| கன்னி | - இராகு. |

★ சந்திரன்-மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, இனசன நன்மை. | பி.ப. | 3 | மணி |
| **திங்கள்**- வீண் மனஸ்தாபம், கௌரவம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| **புதன்**- வெளியிட வாசம், செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 11 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **சனி**- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7**

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- பயனுள்ள செயல், உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பி.ப. | 1 | மணி |
| **புதன்** - தொழில் மந்தம், உயர்ச்சி தடை. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- அந்நியர் பகை, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- காரியத்தடை, பயனற்ற செயல். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3**

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- சுபகாரிய மகிழ்ச்சி, செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |
| **திங்கள்**- மறைமுக எதிர்ப்பு, தொழில் மந்தம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- கௌரவம், உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| **வியாழன்**- வீண் குறை கேட்டல், காரியத்தடை. | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- இனசன மகிழ்ச்சி, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| **சனி**- தொழில் மந்தம், செலவு அதிகம். | மு.ப. | 9 | மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-6**

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- உயர்ந்த நிலை, காரியசித்தி. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, காரிய சித்தி. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, உயர்ச்சி. | மு.ப. | 9 | மணி |
| **வியாழன்**- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் | 12 | மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், தொழில் மேன்மை. | பி.ப. | 2 | மணி |
| **சனி**- ஆடம்பரச் செலவு, கௌரவம். | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- வீண் முயற்சி, உறவினர் பகை. | பி.ப. | 2 | மணி |
| **செவ்வாய்**- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் | 12 | மணி |
| **புதன்**- மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. | 3 | மணி |
| **வியாழன்**- தொழில் நஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| **வெள்ளி**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| **சனி**- தொழில் விருத்தி, பண வரவு. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் மந்தம், காரியத்தடை. | பி.ப. | 1 | மணி |
| **திங்கள்**- வீண் குறை கேட்டல், மனக் கஷ்டம். | பகல் | 12 | மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, எதிர்பார்த்த நன்மை. | பி.ப. | 2 | மணி |
| **புதன்**- கடன் தொல்லை, மனக் கலக்கம். | பி.ப. | 12 | மணி |
| **வியாழன்**- உறவினர் உதவி, காரியானுகூலம். | பி.ப. | 3 | மணி |
| **வெள்ளி**- தொழில் மந்தம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**


## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும் , அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, செலவு அதிகம். | மு.ப. | 10 | மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, கடன் படல். | மு.ப. | 10 | மணி |
| **புதன்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. | 9 | மணி |
| **வியாழன்**- எதிர்பார்த்த நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| **வெள்ளி**- தொழிலில் பிரச்சினை, கௌரவக் குறைவு. | பகல் | 12 | மணி |
| **சனி**- பயனுள்ள செயல், செலவு அதிகம். | பி.ப. | 2 | மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1**





## வையம் வாழ்த்த வேண்டும்

அணிலைப் போலே ஆடி ஓட வேண்டும்.
அயர்ந்து விடாமல் பாடி மகிழ வேண்டும்.
கனியைப் போலே குணங்கள் கொள்ள வேண்டும்.
கசப்பை யூட்டும் குணங்கள் தள்ள வேண்டும்.

பனையைப்போல பயன்கள் அளிக்க வேண்டும்.
பண்புகள் பலவும் சிறந்தே ஒளிர வேண்டும்.
தினையைப் போலே உருவம் சிறிதே எனினும்
சின்ன உளிபோல் கலைகள் படைக்க வேண்டும்.

ஆக்க வழியில் அறிவைச் செலுத்த வேண்டும்.
அணுகுண்டதனின் கருவைச் சிதைக்க வேண்டும்.
வாக்கும் செயலும் வலிவாய் திகழ வேண்டும்.
வையம் வியந்தே உன்னை வாழ்த்த வேண்டும்.

அன்பைச் சொரிந்தே ஒருமை வளர்க்க வேண்டும்.
அகிலம் முழுதும் ஒன்றாய் இணைய வேண்டும்.
வம்பும் வழக்கும் அழிந்தே ஒழிய வேண்டும்.
மண்ணுயிர் யாவும் மகிழ்ந்தே வாழ வேண்டும்.

வி. இளந்தமிழன்

மரத்தினை நட்டவன் தண்ணீர்-நன்கு
வார்த்தே ஓங்கிடச் செய்வான்:
சிரத்தை யுடையது தெய்வம்-இங்கு
சேர்ந்த உணவெல்லை யில்லை.

-சுப்பிரமணிய பாரதியார்.

## கல்வியின் மதிப்பு

### பாப்பா முரசு சிறுகதை



ஒரு சமயம் பீர்பால் பக்கத்து நாட்டில் இருக்கும் தனது நண்பரைப் பார்க்கப் புறப்பட்டார்.

தனது நாட்டு எல்லையைத் தாண்டி, அடுத்த நாடு ஒன்றின் தெரு வழியாக நடந்து சென்றார் பீர்பால். நீண்ட தூரம் நடந்து வந்ததனால் மிகவும் களைப் படைந்த பீர்பால், கண்முன் தென்பட்ட ஒரு மாளிகையின் திண்ணையில் அமர்ந்தார். களைப்பு மிகுதியால் தூங்கியும் போனார்.

அந்த வீட்டின் சொந்தக்காரன் மிகப் பெரிய செல்வந்தன். ஆனால் அவன் மிகப் பெரிய கஞ்சன்.

வீட்டின் உள்ளே இருந்து வெளியே வந்த செல்வந்தன், திண்ணையில் படுத்திருந்த பீர்பாலைப் பார்த்தான். அவருடைய தோற்றத்தைக் கண்டு அவர் ஒரு பெரிய கல்விமானாக இருக்க வேண்டும் என்று புரிந்துகொண்டான் செல்வந்தன்.

களைப்போடு சோர்ந்து படுத்திருக்கும் பீர்பாலைக் கண்டதும் அவர் வறுமையில் வாடுவதாக செல்வந்தன் நினைத்தான்.

அவரைத் தனது மகனுக்குக் கல்வி போதிக்க ஏற்பாடு செய்தால் அவருக்கு குறைந்த ஊதியத்தைக் கொடுக்கலாம். வறுமையின் காரணமாக அவர், கொடுக்கும் குறைந்த ஊதியத்தை வாங்கிக் கொள்வார் என்று திட்டமிட்டான் செல்வந்தன்.

அவன், தூங்கிக் கொண்டிருந்த பீர்பாலை எழுப்பி,

"ஐயா! தங்களைப் பார்த்தால் பெரிய கல்விமானைப் போல் இருக்கின்றீர்கள். தாங்கள் எனது மகனுக்குக் கல்வி போதிக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"உமது மகனுக்கு நான் கல்வி போதிக்கத் தயார். ஆனால் எனக்கு எவ்வளவு ஊதியம் தருவீர்?" என்று கேட்டார் பீர்பால்.

"உமக்கு எனது வீட்டில் ஒரு வேளை சாப்பாடு போட்டு மாதம் பத்து காசுகள் தருகிறேன்" என்றான் செல்வந்தன்.

இதைக் கேட்ட பீர்பாலுக்குக் கோபம் வந்தது.

அப்போது ஒரு பிச்சைக்காரன் அந்தத் தெரு வழியே போய்க் கொண்டிருந்தான். பீர்பால் அவனைக் கூப்பிட்டார்.

பிச்சைக்காரன் அருகில் வந்ததும்,

"ஐயா! உமக்கு சாப்பாடு இல்லாமல் மாதம் எவ்வளவு வருமானம் கிடைக்கும்?" என்று கேட்டார் பீர்பால்.

"எஜமானே! எனக்கு ஒரு மாதத்தில் நூறு காசுகளுக்குக் குறையாமல் கிடைக்கும்" என்றான் பிச்சைக்காரன்.

பீர்பால் செல்வந்தனை நோக்கி,

"ஐயா! உங்கள் மகனுக்கு நான் கல்வி போதித்தால் பிற்காலத்தில் எங்காவது ஆசிரியர் பணிபுரிந்து மாதம் பத்துக் காசுகள் தான் சம்பாதிக்க முடியும். ஆனால் இந்தப் பிச்சைக்காரனோ மாதம் நூறு காசுகளுக்குக் குறையாமல் சம்பாதிக்கிறான். எனவே ஆசிரியராக இருப்பதைவிட பிச்சைக்காரனாக இருப்பது அதிக வருமானத்தைத் தரும்.

ஆகவே தங்கள் மகனைப் பிச்சைக்காரன் ஆக்கிவிடுங்கள். வீணாக அவனுக்குக் கல்வி போதித்து, குறைந்த வருமானத்தைச் சம்பாதித்து அவன் வாழ்க்கையைக் கெடுக்காதீர்கள்" என்றார்.

பீர்பால் சொன்னதைக் கேட்ட செல்வந்தன் வெட்கித் தலைகுனிந்தான்.

## வாரம் ஒரு நாடு

### சுவீடன்



தலைநகர்-ஸ்டொக்ஹோம்
பரப்பு-4,49,793 சதுர கிலோமீட்டர்
மக்கள் தொகை- 88 இலட்சம்
மொழி- சுவீடிஷ்
எழுத்தறிவு- 99%
சமயம்- கிறிஸ்தவம்
நாணயம்- குரோனர்
தனிநபர் வருமானம்- 27,500 டொலர்

**அமைவிடம்:**

ஐரோப்பாக்கண்டத்தில் உள்ள நான்காவது பெரிய நாடு. நோர்வேக்கும் ஃபின்லாந்திற்கும் இடையே சுவீடன் அமைந்துள்ளது.


**வரலாறு:**

1809ல் மன்னராட்சி ஏற்பட்டது. 1905 வரை நோர்வே சுவீடனின் ஒரு பாகமாக இருந்தது. 1917முதல் பாராளுமன்ற ஜனநாயகம். மன்னரே நாட்டின் தலைவர். 349 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றம் உள்ளது.

**பொருளாதாரம்:**

மிகுந்த இயற்கைச் செல்வமுடையது. அடர்ந்த காடுகள், நீர்வளம் இதன் சிறப்பு. இரும்புத்தாது ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலோகங்கள், இயந்திரப் பொருட்கள், காகிதத்தயாரிப்பு தொழில்கள் மிக்க வளர்ச்சியடைந்துள்ளன. நாட்டின் மொத்தப் பரப்பில் 54% காடுகளே.

## மூளைகளின் எடைகள்



மனித மூளைக்கும் ஊர்ந்து போகும் ஊர்வனவற்றின் மூளைக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. 13 தொன் எடைக்கு அதிகமாக உள்ள ஸ்டிகோகோர்ஸ் என்ற முதலை போன்ற ஒரு பிராணியின் மூளையின் எடை 2 1/2 அவுன்ஸ். அதாவது 71 கிராம். இதன் உடல் எடைக்கும் மூளைக்கும் உள்ள விகிதம் 1: 2,50,000 மடங்கு.

ஆனால் மனித மூளையின் எடையோ 3 இறாத்தல் ஆகும். அதாவது 1.4கிலோ. மனித எடைக்கும் மூளையின் எடைக்கும் உள்ள விகிதம் 1:50 ஆகும்.

ஒருநாய், ஒரு மனிதக்குரங்கு, ஒரு மனிதன் ஆகிய மூவரின் உடல் எடை ஒன்றாக இருந்தாலும் மூளையின் எடை மாறுபடுகிறது. நாயின் மூளை 1/2 இறாத்தல் (225 கிராம்), மனிதக் குரங்கின் மூளை 1 இறாத்தல் (450கிராம்), மனிதனின் மூளை 3 இறாத்தல் (1.4கிலோ).

இப்போது புரிகிறதா? மனிதன் ஏன் அறிவுள்ளவனாக இருக்கிறான் என்று!

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.12.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 171
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 169

பரிசுக்குரியவர்:
கே. பிரதாப்,
டோலவத்த ரோட், மாத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி. நவராஜ், சென் ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன். | செல்வி ⁚பாத்திமா ⁚பய்ஹா ⁚பாரீஸ், மொலத்த பிட்டிய வீதி, மாத்தளை. |
| சாந்தலோஜினி தவராசா, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13. | வி. கௌரிசங்கர், மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| செல்வி எஸ். சத்திய கலா, நு/டயகம சிங்கள பாடசாலை, டயகம. | இ. ஜெனிட்டா, இந்து மகா வித்தியாலயம், பாண்டிருப்பு-01. |
| ஐ. அஸ்மி அஹமட், மின்ஹாத் ம.வி.,யோனகபுர, திக்குவல்லை. | செல்வி எஸ்.எம். சியாதா, ப/ தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| கே.எம். சாஹீர், முள்ளிப்பொத்தானை. | சூ. செந்தூரன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |

## அறிவோம் மனதில் பதிவோம்




ஆசியாவிலேயே மிகப் பெரிய சிறைச்சாலை இந்தியாவில் உள்ள திஹார் சிறைச்சாலை. ஆனால் உலகத்திலேயே மிகப் பெரிய சிறைச்சாலை எது தெரியுமா? ரஷ்யாவில் உள்ள கர்கோவ் சிறைச்சாலை. இந்தச் சிறைச்சாலையில் ஒரே நேரத்தில் 40 ஆயிரம் கைதிகளை அடைக்கலாம்.

***




தாய்வான் நாட்டில் சுகாதாரத் திணைக்களத்துறைக்கு செத்த எலியைக் கொண்டு போய் யார் கொடுத்தாலும் ஒரு அதிர்ஷ்டலாபச் சீட்டை இலவசமாகக் கொடுக்கின்றனர். செத்த எலியால் வரும் பிளேக் நோயைத் தடுக்கவே இந்த ஏற்பாடு.

***



அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் வசிப்பவர் விக்டோரியா ஹெர்பேர்டா. இவர் இரண்டு பன்றிகளைச் செல்லப்பிராணியாக வளர்த்து, அவற்றிற்கு நீந்தக் கற்றுக் கொடுத்தார். அந்தப் பன்றிகளுள் ஒன்று, ஏரியில் தவறி விழுந்த சிறுவன் ஒருவனைக் காப்பாற்றியது. அதற்காக இந்தப் பன்றிக்கு ஒரு விருதும் வழங்கப்பட்டது.

## கிரேட் ஸ்பிங்ஸ்



★ **கிரேட் ஸ்பிங்ஸ் என்றால் என்ன?**
கிரேட் ஸ்பிங்ஸ் என்பது மனித முகமும், சிங்க உடலும் போன்று இருக்கும் ஒரு பெரிய சிலைக்குப் பெயர்.

★ **இது எப்படி உருவாக்கப்பட்டது?**
20 மீட்டர் உயரமும் 70 மீட்டர் நீளமும் உடைய இது கற்பாறைகளைக் குடைந்து செதுக்கப்பட்டது.

★ **இந்த ஸ்பிங்ஸ் எங்கே அமைந்துள்ளது?**
எகிப்து நாட்டின் தலைநகரான கெய்ரோவின் வட பகுதியில் உள்ள கெய்சா பீட பூமியில் இது அமைந்துள்ளது.

★ **இது எதற்காக உருவாக்கப்பட்டது?**
எகிப்தில் இருக்கும் கல்லறைகளை எதிரிகளிடமிருந்து இந்த ஸ்பிங்ஸ் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில் பண்டைய எகிப்தியர்கள் இதை உருவாக்கினர்.

★ **இந்த ஸ்பிங்ஸிற்கு எத்தனை வயது?**
படத்தில் இருக்கும் கிரேட் ஸ்பிங்ஸின் வயது 5000 வருடங்கள் ஆகும்.

## விடுகதைகளும் விடைகளும்

1. வளைவான் நெளிவான்
வயிறு கலங்க வைப்பான்.
அவன் யார்?
• பாம்பு • பம்பரம்

2. அள்ள முடியும், கிள்ள முடியாது?
அது என்ன?
• நெருப்பு • தண்ணீர்

3. மேலும், கீழும் கல்லுக் கோட்டை
நடுவில் இருப்பான் செல்லப்பிள்ளை.
அவன் யார்?
• நாக்கு • இதயம்

4. காட்டில் பிறப்பான்
வீட்டில் சாவான்.
அவன் யார்?
• விறகு • பானை

5. நாடெல்லாம் சுற்றிவரும்
நாட்டுக்குள் வராது
அது என்ன?
• கப்பல் • ஆறு

**விடைகள்**

1.பாம்பு 2.தண்ணீர் 3.இதயம் 4.விறகு 5.கப்பல்

தொகுப்பு: ஏ.அகல்யா.

## ஒருவரிச் செய்திகள்

★ உலகிலேயே பெண் எழுத்தாளர்கள் அதிகமாக உள்ளநாடு ரஷ்யா.

★ லட்சத்தீவுகளில் உள்ள மொத்தத் தீவுகளின் எண்ணிக்கை 27.

★ மனித இதயத்தின் நீளம் ஐந்து அங்குலம்.


★ மனித எலும்புகளின் எண்ணிக்கை 206.

★ சீன நெடுஞ்சுவரின் நீளம் 3219 கிலோமீட்டர்.

★ ஒட்டகத்தின் ஆயுட்காலம் நாற்பது வருடம்.

★ நோபல் பரிசு அதிகம் வாங்கிய நாடு அமெரிக்கா.

★ பெட்ரோலியத்தைத் தூய்மைப்படுத்த கந்தக அமிலம் பயன்படுகிறது.




## நாவல் உலகின் நவீன எழுத்து வேந்தன்

**-சுஜாதா-**

**இதுவரை**

அவர்கள் இளம் காதலர்கள்– ஆனந்த்–மல்லிகா.
இருவரும் சந்தோஷமாக இருக்க தனியான மலைப்பகுதிக்குச் சென்றனர். அங்கே புதர் ஒன்றுக்குள் ஒரு பிணம் கிடக்கிறது. ஆனந்த் பொலிசாருக்கு அறிவிக்கிறான். பொலிசார் வருகின்றனர். அது ஓர் ஆண் பிணம். கொல்லப்பட்டவர் ஷர்மா என்று கண்டறிந்து அவரது வீட்டுக்குச்சென்று அவர் மனைவியிடம் விசாரிக்கிறார்கள். மனைவி பெயர் அனிதா. ஷர்மாவின் இரண்டாவது மனைவி. கொலையான ஷர்மாவின் முதல் மனைவியின் மகள் மோனிக்கா. சட்டத்தரணி கணேஷின் உதவியை நாடுகிறாள் மோனிக்கா.

அனிதாவை விசாரிக்கச் செல்கிறான் கணேஷ்.

அனிதா கவர்ச்சியாக இருக்கிறாள். இளமையாக இருக்கிறாள். அனிதாதான் தனது தந்தை ஷர்மாவின் கொலைக்குக் காரணம் என்று சந்தேகிக்கிறாள் மோனிகா. கணேஷ் அனிதாவிடம் மென்மையாக கேள்விகளைத் தொடுக்கிறான். **இனி...**

அனிதா மௌனமாக இருந்தாள். வெளியே பார்த்தாள்.

கணேஷ் அவளைச் சற்று நேரம் கவனித்துப் பார்க்கச் சமயம் கிடைத்தது. அவளை விதவிதமான இயல்புகளில் நினைத்துப் பார்த்தான். ஒரு வீட்டின் ராணியாக, ஒரு வயதானவரின் படுக்கை அறையில், ஒரு கிராமத்தில் ஏழைப் பெண்ணாக, ஒரு ரெயில் நிலையத்தில் அனாதையாக, ஒரு ராஜகுமாரியாக, ஒரு சினிமா நட்சத்திரமாக, ஓர் இளம் விதவையாக...

இளம் விதவை! அல்ல, அல்ல. எதிரே நீல ஸாரியும் வாளிப்பான உடலுமாக நிற்கிறாளே இவளா விதவை? நான் முப்பத்திரண்டு, இவள் இருபத்தொன்பது.

கணேஷ் இப்பொழுது அவளைத் தன்னருகில் நிற்கிற மாதிரி நினைத்தான். மறுபடியும் பொட்டிட்டு ஜொலித்துக் கொண்டு என்னருகே புன் சிரிக்கிறாள்... மிக அருகே வருகிறாள்....

"என்ன யோசிக்கிறீர்கள்?" என்றாள் அனிதா.

"ஒன்றுமில்லை."

"டீ சாப்பிடுகிறீர்களா?"

"வேண்டாம்." கதவு திறந்திருந்தது. கதவைப் பார்த்தான்.

கடைசியில் சொல்லிவிட்டான்: "உண்மையாகவே உங்களை வயதான ஒருவரின் மனைவியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை."

"நான் அவரை மணந்ததற்குக் காரணம் சொல்லட்டுமா?"

"இஷ்டமிருந்தால்."

"நம்பமாட்டீர்கள்."

"முயலுகிறேன்."

"எனக்குப் பதினெட்டு வயதிருக்கும்போது நானும் கண்களில் கனவுடன்தான் மிதந்தேன். டாக்டருக்குப் படிக்க மிக விரும்பினேன். முடியவில்லை. என் அப்பா ஒரு சாதாரண கிளார்க். என்னைச் சிரமப்பட்டுப் படிக்க வைத்தார். ஹோம் ஸைன்ஸில் பி.ஏ.படித்தேன். என் அப்பாவுக்கு உதவியாக இருக்க வேண்டி வேலை தேடினேன். இங்கே டில்லியில் தான் வேலை கிடைத்தது– ஏர் ஃபோர்ஸ் ஸ்டேஷனில் ஸிவிலியன் கிளார்க்காக. என் வேலை கிடைத்ததற்குக் காரணம் என் தோற்றம்தான். தெரியும். நான் வேலை பார்க்கச் சென்ற இடம் எனக்குச் சரிப்பட்டு வரவில்லை. கார்ப்போரலிலிருந்து விங் கமாண்டர் வரை என் மேல் ஈடுபாடு காட்டினார்கள். நான் பொதுவாகவே அடக்கமானவள். அதிகம் பேச மாட்டேன். அந்த வேலையை நான் விட்டுவிட்டேன். அதன் மூலம் எனக்கு ஒரு நிலையான சினேகிதம் ஏற்பட்டது. அது ஃப்ளைட் லெஃப்டினண்ட் ராஜா! ராஜா நிஜமாகவே என் அரசன். அவனைப் போன்ற வாலிபனை நான் இனிச் சந்திக்க முடியாது. பணிவும் அன்பும் மிக முக்கியமான மனிதத் தன்மையும் நிறைந்த இளைஞன். என்னுடன் பேசினான். சிரித்தான். என்னை ஆட்கொண்டான். கடிதம் எழுதினான். கதைகள் சொன்னான். அவனுக்கு ஆக்ராவுக்கு மாற்றலாகியது. என்னை உடனே மணம் புரிந்து கொள்ள ஆக்ராவுக்கு கூப்பிட்டான். என் அப்பாவுக்கு அப்போது உடல் சரியில்லாமல் இருந்தது. ஒரு வாரத்தில் திரும்பி வருகிறேன் என்று சொல்லிச் சென்றவன் வரவில்லை. அங்கே ஒரு விமான விபத்தில் இறந்து போனான்..."

கணேஷ் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவள் சற்று நேரம் கழித்து, "நீங்கள் உமர்கய்யாம் படித்திருக்கிறீர்களா?" என்றாள்.

"ஒரு சில பகுதிகள் படித்திருக்கிறேன்."

"இந்த வரிகளை என்னால் மறக்க முடியாது. 'ராஜா இறந்து போய் இரத்தம் சிந்தின இடத்தில் ரோஜா மிகச் சிவப்பாய்ப் பூக்குமென்று எண்ணுகிறேன். என் ராஜா எவ்வளவு சிவப்பாகப் பூத்தான்– என் மனம் என்னும் யுத்தகளத்தில்'!"

"பிறகு?"

"ராஜாவுக்குப் பின் நான் கல்யாணம் செய்து கொள்ள விரும்பவில்லை. டைப் அடித்தேன். ரிஸப்ஷனில் வேலை செய்தேன். எல்லா இடத்திலும் என் அழகு என்னைத் தொந்தரவு செய்தது! வருபவர்களைப் பார்த்துச் சிரிப்பதற்காக ஓர் ஓட்டலில் எனக்கு முன்னூறு ரூபாய் தந்தார்கள். எப்பொழுதும் போல் வந்த அவரைப் பார்த்துச் சிரித்தேன். வந்தவர் ஷர்மா. ஓட்டலின் முதலாளி. அந்தக் கிழட்டு ராஜகுமாரன் கண்டெடுத்த சிண்ட்ரெல்லா நான்! அவரது புயல் போன்ற தாக்குதலை என்னால் சமாளிக்க முடியவில்லை. மலர்கள் அனுப்பினார். சில்க் ஸாரிகள். சினிமா டிக்கெட்கள். என்னைத் தன்னறைக்கு வரவழைத்துக் கண்களில் நீர் மல்கக் கெஞ்சியிருக்கிறார்... அவருக்கு வேண்டியதெல்லாம் என் அன்பும் பராமரிப்பும்தானாம். இந்தக் கல்யாணம் என்னை எந்த வகையிலும் கட்டுப்படுத்தாதாம். 'எழுதிக் கொடுக்கிறேன், என்னை ஒருமுறை பரிசோதித்துப் பார். உன் சுதந்திரம் எப்படியும் பறிபோகாது. என்னைப் பிடிக்கவில்லை என்றால் மறுநாளே நீ ஃப்ரீ!' என்றார். வார்த்தைகள்! வார்த்தைகள் தங்கம், முத்து... சம்மதித்தேன். அவ்வளவுதான் அதற்கப்புறம் என் கதை திரும்பிவிட்டது."

சில நிமிடங்கள் மௌனமாயிருந்தாள். பின்பு–

"நான் கூண்டில் அடைபட்டேன். இரவு, பகல், நடுப்பகல், மாலை எப்பொழுதும் நான் தேவைப்பட்டபோது அவருக்கு வேண்டும். என்னை மற்றொரு ஆண் ஏறிட்டுப்பார்க்கக்கூடாது. நான் நிமிரக்கூடாது. நிமிர்ந்தால் எத்தனை கேள்விகள்; சபதங்கள் செய்து என்னை ஏமாற்றி அடைத்துவிட்டார் மனிதர்; வீட்டை விட்டுத் தனியா நான் கிளம்பமுடியாது. கூட மீனாட்சி வரவேண்டும். வேளைக்கு சாப்பிடவேண்டும். உறங்க வேண்டும். சினிமா அவருடன்தான் போக வேண்டும். என் வரிசையில் யாராவது உட்கார்ந்து விடுவார்களே என்று அந்த வரிசையையே ரிஸர்வ் செய்துவிடுவார். என்மேல் தூசி படக்கூடாது. நான் மூக்கைச் சிணுங்கினால் டாக்டர் வந்துவிடுவார். லேடி டாக்டர். நான் குளிக்கச் சென்றால் வெளியே டவலுடன் காத்திருப்பார் போர்த்தி அழைத்துச் செல்வதற்கு. நான் அருகிலேயே 24 மணி நேரமும் இருக்க வேண்டும். வெளியூர் சென்றால் அவர் பிஸினஸ் முடிந்து வரும் வரைக்கும் நான் ஏர்கண்டிஷண்ட் அறையிலேயே காத்திருக்க வேண்டும். அது ஒரு வினோதமான சித்திரவதை மிஸ்டர் கணேஷ்.. எனக்கு அவர் சொத்தின் மேல் ஆசையா! இப்பொழுது சொல்லுங்கள்."

"வினோதமான மனிதர்தான்." என்றான் கணேஷ்.

"அவர் மனிதரில்லை."

கணேஷுக்கு மோனிக்கா சொன்ன வாக்கியங்கள் சட்டென்று ஞாபகம் வந்தது. 'என் அப்பாவின் கழுத்தில் ஒரு சிறிய சங்கிலி போட்டுத் தன் படுக்கை அறையில் கட்டி வைத்திருந்தாள்....' யார் யாரைக் கட்டியிருந்தார்கள்!

"என் வாழ்க்கை எப்படிச் செல்ல வேண்டியது, எங்கே வந்து முடிந்திருக்கிறது பாருங்கள்" என்றாள் அனிதா.

"இன்னும் முடிந்துவிடவில்லை மிஸஸ் ஷர் அனிதா..."

"முடிந்துவிட்டது. முடிந்தது எப்பொழுது? அந்த மாலை. என் ராஜா ஆக்ராவில் இறந்த மாலை. எனக்குத் தகவல் தெரிந்த அந்த மாலை, என் அப்பா உள்ளே படுத்திருக்கிறார். நான் கதவைத் திறக்கிறேன். யூனி ஃபார்மில் ஓர் ஏர்ஃபோர்ஸ் இளைஞன் நிற்கிறான். 'உங்கள் பெயர் அனிதாவா?' என்கிறான். ஆம் என்கிறேன். 'ப்ஃளைட் லெஃப்டினெண்ட் ராஜா இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னார். அவர் ஒரு ட்ரான்ஸ்போர்ட் பிளேனில் விபத்துக்குள்ளாகி, மிக மோசமாக அடிபட்டுச் சில மணி நேரம் உயிருடன் இருந்தபோது உங்கள் பெயரைச் சொன்னார். ஒரு கடிதம் எழுதினார். உங்களிடம் இதைத் தரச் சொன்னார்' என்கிறான். அவன் தந்தது ஓர் எவர்சில்வர் சங்கிலி. ராஜா அணிந்திருந்த சங்கிலி... எழுதி இருந்தது இரண்டே இரண்டு வார்த்தை– 'அனிதா, மறக்காதே!' மறக்க முடியுமா? சொல்லுங்கள் மறக்க முடியுமா..? மறக்க முடியுமா...?"

அனிதா அப்படியே சரிந்தாள். கீழே உட்கார்ந்து விம்மி விம்மி அழுதாள்.

கணேஷுக்கு. என்ன செய்வது என்று புரியவில்லை. ஒரு பிரம்மச்சாரிக்குத் துளியும் பழக்கமில்லாத சூழ்நிலை. அழுகிற ஒரு பெண்ணை எப்படி ஆற்றுவது?

கணேஷ் அவள் அருகில் சென்று குனிந்தான். "அனிதா, என்ன இது! நீங்கள் குழந்தை இல்லை, இப்படி அழக்கூடாது..."

"அவர் சொத்துக்கு ஆசைப்பட்டேன் என்கிறார்களே! நான் பட்ட அவச் சொல் போதாதா! போதாதா!"

"உங்களை ஒருவரும் அப்படிச் சொல்லவில்லை. அது நீங்களாகக் கற்பித்துக் கொள்வது. எழுந்திருங்கள்..."

அவள் எழுந்திருக்கவில்லை: அப்படியே தரையில் சாய்ந்தாள். அவள் கழுத்தில் எவர்சில்வர் சங்கிலி ஒன்று தென்பட்டது. அவள் உடை சரியாக இல்லை.

மயக்கமுற்று விட்டாளா என்ன?

அவள் கண்களின் நீர் நேர்க் கோடாகக் காதுவரை வழிந்தது. அவளது மிக அழகான உதடுகள் திறந்து அவள் பற்களின் வெண்மையும் ஈறுகளின் ரோஜா நிறமும் தெரிந்தன. அவள் பெரிதாக மூச்சு விடவே, அவள் ரவிக்கைப் பிடிப்பு விட்டுவிடும் போலிருந்தது...

கணேஷ் அவளை அப்படியே ஏந்தித் தூக்கினான். தூக்கிப் படுக்கையில் வைக்கப்போகும் சமயம் மோனிக்கா உள்ளே வந்தாள்.

"வாட் ஹாப்பன்ட்? நான் குறுக்கிட்டு விட்டேனா?" என்றாள்.

"ஷட் அப்! அனிதா மயக்கமாக இருக்கிறாள்."

"அப்படியா! பாஸ்கர்! பாஸ்கர்!.."

"மோனிக்கா, ப்ளீஸ், அந்த ஜன்னலைத் திற. ஃப்ரிஜிலிருந்து குளிர்ந்த நீர் எடுத்து வா!"

"மீனாட்சி! மீனாட்சி!" என்று கூப்பிட்டாள் மோனிக்கா.

கீழேயிருந்து மீனாட்சி, "என்னம்மா?" என்றாள்.

"குளிர்ந்த தண்ணீர் எடுத்து வா. அம்மா மயக்கமாக இருக்கிறார்கள், சீக்கிரம்!" என்றாள். மேலும், "கணேஷ், ஒய் நாட் யூ ட்ரை ஆர்ட்டிபிஃஷில் ரெஸ்பிரேஷன்?" என்றாள்.

கணேஷ் முதல் தடவையாக மோனிக்காவை வெறுத்தான்.

அவசர அவசரமாகப் பாஸ்கர் வந்தான். அனிதா படுத்திருப்பதைப் பார்த்தான். கணேஷை வெறுப்புடன் பார்த்தான். உடனே டாக்டருக்கு டெலிபோன் செய்தான். மீனாட்சி வந்து அனிதாவின் உடம்பைத் தடவிக் கொடுத்தாள்.

கணேஷ் அந்த அறையை விட்டு வெளியில் வந்தான். உடன் மோனிக்காவும் சென்றாள். கணேஷ் மௌனமாகப் படியிறங்கினான். எந்தப் பெண்ணை நம்புவது? எந்தப் பெண் பொய் சொல்லுகிறாள்? அரிது, மிக அரிது. எந்தப் பெண்ணும் சுத்தமாகப் பொய் சொல்வதில்லை. நிஜமும் சொல்வதில்லை. இரண்டையும் கலக்கிறார்கள். கலப்பு சதவிகிதத்தில்தான் வித்தியாசம். எதையுமே முழுவதும் நம்பாதே!

❦❦❦

அனிதாவின் அந்தரங்கமான மெலிதான பவுடர் வாசனை கணேஷின் மேல் பரவியிருந்தது. அவளைத் தூக்குவது எவ்வளவு சுலபமாக இருந்தது. எவ்வளவு சம்மதமான கனம்.....

"என்ன சொன்னாய் மோனிக்கா?"

"இங்கேயே அவள் மயக்கம் தெளியும் வரை இருக்கப்போகிறாயா? இல்லை, புறப்பட்டு விடுவாயா?"

"புறப்படுகிறேன்."

"நீ இப்பொழுது யார் கட்சி?"

"இரண்டு பேருமே இப்பொழுது ஒரே கட்சியில் இருக்கிறீர்கள். அது உன் அப்பாவை வெறுக்கும் கட்சி?"

"அனிதா என்னைப் பற்றி என்ன கேட்டாள்?"

"மோனி என்னைப் பற்றி என்ன கேட்டாள் என்று கேட்டாள். நீங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் கடித்துச் சாப்பிட விரும்புகிறீர்கள் என்றேன். நான் அந்த உயிலை அப்புறம் பார்க்கிறேன்."

"இரு, இப்பொழுதே காட்டச் சொல்கிறேன் பாஸ்கர்."

"இல்லை மோனிக்கா. நான் கோர்ட்டுக்குப்போக வேண்டும். நிச்சயம் நாளை வருகிறேன்."

"பார்த்தாயா, உன் அபிப்பிராயம் மாறிவிட்டது."

"எனக்கு ஒரு அபிப்பிராயமும் இதுவரை ஏற்படவில்லை."

"நான் கொண்டு விடுகிறேன்."

காரில் அவள் சாலையில் கவனத்துடன் பேசினாள். "கணேஷ், உன் உதவி எனக்குத் தேவையாக இருக்கிறது. நான்தான் உன்னை முதலில் வந்து கேட்டேன். இதை மறக்காதே."

'அனிதா மறக்காதே' என்று எழுதிவிட்டுச் செத்துப் போன ராஜாவின் ஞாபகம் வந்தது கணேஷுக்கு.

"மோனிக்கா, நீ உமர்கய்யாம் படித்திருக்கிறாயா?"

"இல்லை."

"அனிதா படித்திருக்கிறாள்."

"டோண்ட் டெல் மி. அவள் உன்னுடன் இத்தனை நேரம் உமர்கய்யாமா பேசினாள்?"

"அவள் தன்னைப் பற்றி சில விவரங்கள் சொன்னாள். உன் அப்பாவை மணந்ததற்குக் காரணம் சொன்னாள்."

"என்ன காரணமாம்? ப்யூர் லவ்?"

"இந்த மாதிரி ஸினிக்கலாகப் பேசுபவர்களுக்கு எதுவும் சொல்லிப் பிரயோஜனமில்லை."

"எனக்கு அனிதாவின் சுய சரித்திரம் தேவை இல்லை. அவள் மிக கவர்ச்சிகரமான பெண். ஒப்புக்கொள்கிறேன். துக்கம் வெட்கம் அறியாது என்கிற சாக்கில் தன் உடம்பை அதிகம் காண்பிக்கிறாள். உங்கள் கண்கள் அப்படியே அவளை விழுங்குகின்றன. அவள் ஒரு....." அந்த வார்த்தையில் அதிர்ந்து போனான். அதுவும் ஒரு பெண் உபயோகிக்கிறாள்!

கணேஷ் சொன்னான். "லுக். அவளைப்பற்றி நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள். என் சொந்த அபிப்பிராயத்தின்படி நீ அவளைப்பற்றி நினைப்பதில் பெரும்பகுதி தப்பு. வெறுப்பின் காரணமாக உன் தராதரம் கலைந்திருக்கிறது. அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. ஆனால் இந்தமாதிரி வார்த்தைகளை இனி உபயோகிக்காதே. நியாயமில்லை. நாகரிகமில்லை."

"உன்னை அவள் நன்றாக மயக்கியிருக்கிறாள். நீயும் எல்லோரையும்போல் அவள் வலையில் விழுந்துவிட்டாய்."

"காரை நிறுத்து. நான் இறங்கிக் கொள்கிறேன்."

"கம் ஆன் லவர் பாய். இதற்கெல்லாம் கோபித்துக் கொள்கிறாயே!"

"நிறுத்தப் போகிறாயா இல்லையா?"

"நிறுத்தமாட்டேன்.."

கணேஷ் இக்னிஷனை அணைத்து சாவியைப் பிடுங்கினான். இன்ஜின் அணைந்து கார் நின்றது. கதவைத் திறந்து இறங்கிக் கொண்டான். சாவியை உள்ளே எறிந்தான் நடந்தான்.

அவள் அவனுடனேயே மெதுவாகக் கார் ஓட்டினாள். "கணேஷ், ஸாரி!" என்றாள்.

"முதலில் உன் ஸாரியைச் சரிப்படுத்திக் கொள்..... டாக்ஸி!"

கணேஷ் அன்றிரவு டைரியில் எழுதினான்.


"மோனிக்கா 22(மன வயது 14) அனிதா 28 எவ்வளவு மா–! இரண்டு மணி நேரத்தில் எவ்வளவு சுய சரித்திரங்கள். பெரியவர் எப்படி இறந்தார்? அந்த இன்ஸ்பெக்டரைச் சந்திக்க வேண்டும். எங்கோ ஒரு தப்பு அந்தக் குடும்பத்தில் அந்தச் சூழ்நிலையில் இருக்கிறது. யாரிடம்? எங்கே? பட்சி சொல்கிறது. தப்பு இருக்கிறது."

அவன் மேலே எழுத யோசித்துக் கொண்டிருந்தபோது அவன் டெலிபோன் மணியடித்தது. ஒரு வாக்கியத்தை எழுதி அடித்துவிட்டு எடுத்தான். "கணேஷ்!" என்றான்.


"கணேஷ்! கணேஷ்! அனிதா பேசுகிறேன். உடனே வாருங்கள். ப்ளீஸ்! ப்ளீஸ்!" அவள் குரலில் அவ்வளவு பயம் தொனித்தது.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: எம். விஸ்வநாதன்,
வயது: 19
முகவரி: பூனாகலை 1வது பிரிவு, பூனாகலை போஸ்ட், பண்டாரவளை.
பொழுது போக்கு: பத்திரிகை, சினிமா.




பெயர்: எஸ். சந்திரன்.
வயது: 25
முகவரி: MARIABERG-7, 9400. RORSCHACH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.




பெயர்: சி. ஞானப்பிரியா.
வயது: 17
முகவரி: 30/1, ஸ்ரீ தர்மபால வீதி, கல்கிசை.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எல். பாறூக்.
வயது: 20
முகவரி: 108, பஸார் வீதி, குரு நாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: எம். பாஹிம்.
வயது: 25
முகவரி: P.O.BOX-50, SALALAH-211, OMAN.
பொழுது போக்கு: கிரிக்கெட், பேனா நட்பு.



பெயர்: பாத்திமா பர்ஸானா.
வயது: 22
முகவரி: 420 1/3, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-12
பொழுதுபோக்கு: ரீ.வி., வானொலி.

பெயர்: எஸ். ஜஃபர்.
வயது: 15
முகவரி: பன்சாலை வீதி, பிறைந்துரைச் சேனை, வாழைச்சேனை-05.
பொழுதுபோக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: எம். முனாப்டீன்.
வயது: 23
முகவரி: 205, கஹட்டபிட்டிய, கம்பளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: சி.கரிகாலன்
வயது: 14
முகவரி: 61, விகாரை வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: ஜெ. சதீஸ்குமார்.
வயது: 19
முகவரி: 285 ஏ, காலிவீதி, வெள்ளவத்தை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

பெயர்: எஸ். சிவகுமார்.
வயது: 21
முகவரி: AM.JOSTEN HOE 29/6. 47441 MOERS GERMANY.
பொழுது போக்கு: சினிமா, பத்திரிகை.

பெயர்: ஏ. முகமது பாயிஸ்.
வயது: 17
முகவரி: 1155/10, முள்ளிப்பொத்தானை, கந்தளாய்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

## இதுவரை

செக்கோஸ்லாவாக்கிய நாட்டின் போராளிகளின் தலைவர் ஜூலிஸ் பூசிக். ஜெர்மன் படைகளின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடியவர்.
ஜெர்மன் இரகசியப் பொலிசாரால் அவர் கைதுசெய்யப்படுகிறார்.
தான் ஜூலிஸ் பூசிக் அல்ல என்கிறார்.
அவரது மனைவியும் கைதாகிறார்.
பூசிக் சித்திரவதை செய்யப்படுகிறார்.
அவர் இறந்துவிட்டதாக சிறையில் உள்ள மனைவிக்கு தவறான தகவல் கிடைக்கிறது.
பின்னர் அது வதந்தி என்று அறிகிறாள்.
அவளை மட்டும் போலந்துக்கு கடினவேலைகள் செய்யும் தண்டனைக்காக அழைத்துப் போகிறார்கள்.

இனி...

# ஜூலிஸ் பூசிக் 07 தூக்கு மேடைக் குறிப்பு

**ஹிட்லரின் கொடூர சிறைக்குள் இருந்து இரகசியமாக எழுதப்பட்டு சிறைக் காவலாளி ஒருவரின் உதவியுடன் வெளியே கடத்தப்பட்ட குறிப்புகள் இவை! ஹிட்லரின் ஆதிக்கம் வீழ்ந்த பின்னர் வெளியாகிய இக் குறிப்புகளுக்கு பல நாடுகளில் தடை விதிக்கப்பட்டது**



## மே 22, 1943

கையொப்பம்-முத்திரை இரண்டும் ஆயிற்று. விசாரணை நடத்திய நீதிபதி நேற்றோடு என் வாழ்க்கையை ஒருவாறு தீர்த்துக் கட்டினார்.

நான் எதிர்பார்த்ததைவிட வேகமாக வழக்கு நடைபெறுகிறது. அவர்கள் ஏனோ அவசரப்படுகிறார்கள்போல் தோன்றுகிறது.

நீதிமன்றத்தில் நிசப்தம் குடிகொண்டிருந்தது. இரகசியப் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில் பயங்கரம் குடிகொண்டிருந்தபோதும், அங்கு ஜீவன் இருப்பதாகத் தோன்றியது.

பயங்கரம் வாழ்க்கையின் ஒரு பகுதி என்பதால் அங்கு உணர்ச்சி கரை புரண்டது. போராடியவர்களின் உணர்ச்சி வெள்ளம் ஒருபுறம், மனித வேட்டையாடும் மிருகங்களின் உணர்ச்சி மறுபுறம் என்று அங்கு உணர்ச்சி வெள்ளம் பாய்ந்தது.

ஆனால் இங்கு விசாரணை நீதிபதியின் தர்பாரில் உத்தியோகம் சம்பந்தப்பட்ட காரியங்களைத் தவிர வேறு எதுவும் இல்லை.

நீதிபதியின் அங்கியில் ஒரு சிலுவை தொங்கியது. அந்தச் சிலுவை கொள்கைப் பற்றைக் குறிப்பது. ஆனால் நீதிபதியின் உள்ளத்தில் அது கிடையாது.

இவன் நல்லவனுமல்ல, கெட்டவனுமல்ல. இவன் நகைப்பதுமில்லை, குரைப்பதுமில்லை. இவன் ஒரு உத்தியோகக் காரியத்தை மட்டுமே செய்கிறான்.

என்மீது மொத்தம் ஆறு குற்றச்சாட்டுக்கள். தேசத்துரோகம், ஜெர்மன் பாராளுமன்றத்துக்கு எதிராகச் சதி செய்தது, ஆயுதமேந்திய எழுச்சிக்குத் தயார் செய்தது என்பவை அவற்றில் சில. முழுக் குற்றச்சாட்டும் எனக்குத் தெரியாது.

என் உயிருக்காகவும், என் தோழர்களின் உயிர்களுக்காகவும் கடந்த பதின்மூன்று மாதங்களாக நான் புத்திசாலித்தனமாகவும், உணர்ச்சியுடனும் சிறைக்குள் இவர்களை எதிர்த்துப் போராடி வருகிறேன்.

கபடச் சூழ்ச்சிகளோடு தம் கையில் கொலை வாளினையும் அவர்கள் வைத்திருப்பதால் நான் தோற்றுவிட்டேன்.

இப்போது காத்திருக்க வேண்டிய காலம் ஆரம்பமாகிறது. குற்றப்பத்திரிகை தயாராகும்வரை இரண்டு அல்லது மூன்று வாரங்கள் காத்திருக்க வேண்டும்.

பின்னர் பெர்லினுக்குப் பயணம். அங்கும் விசாரணை நடைபெறும். அதற்காக அங்கு நூறுநாட்கள் காத்திருக்க வேண்டும். அதன் பின்னர் தண்டனை.

கடைசியாக தூக்குமேடையில் தொங்க முன்னர் நூறுநாட்கள் கழிக்க வேண்டும்.

இதுதான் நான் எதிர்பார்க்கும் எதிர்காலம்.

நான்கு அல்லது ஐந்துமாத கால வாழ்வு. இந்த இடைக்காலத்தில் எத்தனையோ சம்பவங்கள் நிகழலாம். எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிடலாம். ஆனால் நிச்சயமில்லை.

வெளியில் விரைவாக நிகழும் சம்பவங்கள், எங்களை விடுவிப்பதற்குப் பதில், எங்கள் முடிவை விரைவுபடுத்தக் கூடும்.

இது யுத்தத்துக்கும், நம்பிக்கைக்கும் இடையே நடக்கும் ஓர் ஓட்டப் பந்தயம்.

ஒருவிதமான மரணத்திற்கும், இன்னொரு விதமான மரணத்திற்கும் இடையே நடைபெறும் ஓட்டப் பந்தயம்.

எது முதலில் வரும்? என்னுடைய சாவா? அல்லது பாசிசத்தின் சாவா?

இது என்னை மட்டும் பொறுத்த தனிப்பிரச்சனையா? இல்லை. இல்லவேயில்லை.

இந்தக் கேள்வி ஆயிரக்கணக்கான கைதிகளால், பல்லாயிரக்கணக்கான படையினரால் கேட்கப்படுகிறது. இது உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான பொது மக்களாலும் கேட்கப்படுகிறது.

இன்னும் சில மாதங்கள்தான் பாக்கி. விரைவில் அது வாரக்கணக்காக இருக்கும். ஆனால் அவைதான் கொடூரமான நாட்கள்.

யுத்தத்தின் கடைசி நாளில், கடைசி விநாடியில், கடைசித் தோட்டாவினால் இதயத்தில் சுடப்பட்டு விழுகின்ற கடைசி வீரனாக இருப்பது எத்தகைய துக்ககரமான விஷயம் என்று நான் பல தடவை கற்பனை செய்து பார்த்ததுண்டு.

ஆனால் யாராவது ஒருவன் அந்தக் கடைசி வீரனாக இருக்கத்தான் வேண்டும். அந்தக் கடைசி வீரனாக இருக்க எனக்கு வாய்ப்புக் கிட்டுமானால், இந்த வினாடியே நான் புறப்படுவேன்.

இந்த பான்கிராப்ட்ஸ் சிறைச்சாலையில் இன்னும் சில நாட்கள்தான் எனக்கு இடமுண்டு. ஆதலால் நான் விரும்பிய முறையில் இந்தக் குறிப்புக்களை எழுதமுடியாமல் போகலாம்.

இருக்கிற அவகாசத்தைப் பயன்படுத்திக் கொள்ள விஷயத்தை வளர்க்காமல் சுருக்கமாகக் கூறவேண்டும்.

சரித்திரத்தைவிட நபர்கள்மீது அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்கள்தான் மிக முக்கியமானவர்கள்.

ஜிலினிக் தம்பதியைப் பற்றி கூறிவிட்டு நிறுத்திவிட்டேன் அல்லவா?

அவர்கள் மிக சாதாரணமானவர்கள். சாதாரண காலத்தில் அவர்களை வீரர்களாகக் கண்டிருக்க முடியாது.

கைதுசெய்யப்பட்டபோது தலைக்கு மேல் கைகளை உயர்த்தி ஒருவர் பக்கத்தில் ஒருவராக அவர்கள் நின்றனர்.

அவர்களுடைய வீட்டை ஐந்து நிமிடங்களில் ஜெர்மன் பொலிஸ் படை நாசமாக்கியது. அக் காட்சியைக் கண்டபோது அவள் கண்கள் கலங்கின. சிறிது பயந்தன.

பின்னர் அவள் மெதுவாகத் தலையைத் திருப்பி தன் கணவனிடம் கேட்டாள்:

"ஜோ, இப்போது நடப்பது என்ன?"

அவன் எப்போதுமே அதிகமாகப் பேசுபவன் அல்ல. அவனுக்கு வார்த்தைகளைத் தேடிப்பிடிக்க வேண்டியிருக்கும். பேச்சு படபடப்பை உண்டாக்கும். ஒன்றும் புரியாமல் திணறுவான். இப்போது அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

அவன் நிதானமாக, சிரமம் இல்லாமல் பதில் சொன்னான்:

"சாவதற்காக இங்கிருந்து போகப் போகிறோம் மேரி."

அவள் விம்மவில்லை. நடுங்கவுமில்லை. துப்பாக்கிகள் தன் எதிரே குறிபார்த்து இருக்கும்போதே, தலைக்கு மேலிருந்த வலது கையை கீழே இறக்கி அவனுடைய கையைப் பற்றினாள்.

அவள் அப்படிச் செய்ததும் ஜெர்மனியப் பொலிஸ்காரன் அவர்கள் இருவரது முகத்திலும் அறைந்தான்.

அவள் கன்னத்தைத் தடவிக்கொண்டே ஜெர்மனியர்களை மேலும் கீழும் பரிகாசமாகப் பார்த்தபடி சொன்னாள்:

"எவ்வளவு அழகான வாலிபர்கள்!" தொனியை இன்னும் உயர்த்தி, "எவ்வளவு அழகான வாலிபர்கள்? எவ்வளவு மோசமான மிருங்கள்!"

அவள் மதிப்பிட்டது சரிதான். அவள் நினைவு இழக்கும்வரை அடித்து வதைத்தனர். எவ்வளவுதான் அடித்தபோதும் அவள் வாயிலிருந்து ஒன்றையும் கறக்க முடியவில்லை. அப்போதும்சரி, அதற்குப் பிறகும் சரி ஒரு விஷயத்தையும் அவர்களுக்கு அவள் சொல்லவில்லை.

நான் விசாரணைக்கு லாயக்கில்லாமல் மரண அவஸ்த்தைப் பட்டுக்கொண்டு என் அறையில் கிடந்தபோது அவர்களுக்கு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது.

ஆனால் அந்தச் சமயத்தில் அவர்கள் எதையும் சொல்லிவிடவில்லை என்பது மட்டும் எனக்கு நிச்சயம் தெரியும்.

நான் சொல்கிறபடி செய்வதற்காக அவர்கள் என் வார்த்தையை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

மணிக்கட்டையும், கணுக்காலையும் சேர்த்து கட்டிப்போட்டு அவனை-ஜோவை-அவர்கள் பலமுறை அடித்தனர்.

ஆனால் நான் அவ்விடத்துக்குப் போகும் வரையில், நான் கண்ஜாடை காட்டும் வரையில் அவனாக எதையும் பேசவே இல்லை.

எதையெதை ஒப்புக்கொள்ளலாமோ அதை எல்லாம் ஒப்புக்கொள்ளுமாறு நான் ஜாடை காட்டுவேன்.

கைதாக முன்னரே அவனது மனைவி மேரியை எனக்குத் தெரியும். ரோஷக்காரி; இளகிய மனமுடையவள்.

பொலிஸ் காவலில் இருந்தபோது ஒரு நாள்கூட அவள் கண்ணீர் சிந்தவில்லை.

ஒருநாள் அவர்கள் இருவரையும் தனித் தனியே வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்களுக்கு என்ன கதி நேர்ந்ததென்று அறிய நான் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின.

இரகசிய பொலிஸ் பிடியில் சிக்கிய பிறகு திடீரென்று யாரும் மறைவது சர்வ சாதாரணம்.

அப்படி மறைகிறவர்களை பரவிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான கல்லறைகளில் தான் தேடவேண்டும்.

ஓ! அந்தப் பயங்கரமான விதைகளில் இருந்து ஒருநாள் எத்தகைய பயிர் தழைக்கும்!

அவளுடைய கடைசிச் செய்தி இதுதான்:

"தலைவரே! வெளியில் உள்ளவர்களிடம் எனக்காக வருந்த வேண்டாம் என்று சொல்லுங்கள்! என் கதியைக் கண்டு கலக்கமடைந்து யாரும் அஞ்சி நடுங்கக்கூடாது என்றும் கூறுங்கள்! நான் என் கடமையைச் செய்தேன். அதே முறையில் திருப்தியுடன் சாவேன்!"

### விசூஸ்ஷில் தம்பதி

இவர்கள் ஜிலினிக் தம்பதி வாழ்ந்த அதேகட்டடத்தில், அடுத்த பகுதியில் வாழ்ந்தனர். இவர்களும் ஜோசப்-மேரி என்று அழைக்கப்பட்டனர்.

ஜோசப்பைவிட அவள் எட்டுவயது மூத்தவள். அவள் ஒரு நேர்சாக பணியாற்றினாள். இருவரும் ஆஸ்பத்திரியில்தான் முதன் முதலாக சந்தித்துக் கொண்டனர்.

எனக்குப் பின்னர்தான் அவன் கைது செய்யப்பட்டான்.

முதல் தடவை அவனைப் பார்த்தபோது எனக்குத் திகீரென்றது.

அவன் மட்டும் வாயைத் திறந்து உண்மைகளைக் கக்கிவிட்டால் எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படும்? ஆனால் அவன் பேசவில்லை.

தன் நண்பன் ஒருவனிடம் சில துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக் கொண்டிருந்தபோது அவன் கைதானான்.

அவனை அடித்து, நம் மத்திய கமிட்டியின் கடைசி உறுப்பினரைப் பற்றிய விபரங்களைக் கறக்க முயற்சித்தார்கள்.

கடைசியாக அவனை என் அறையில் தள்ளிவிட்டார்கள்.

அமர்ந்துகொள்ள முடியாமல் திண்டாடினான். அவனை ஆவலுடனும், ஊக்கத்துடனும் நான் நோக்கினேன்.

அவன் உடனடியாக கலக்கமின்றிச் சொன்னான்:

"நான் மறுக்கும்போது, என் முதுகில் எவ்வளவுதான் அடித்தாலும், அவர்களால் ஒன்றையும் பெறமுடியாது!"

அந்தத் தம்பதியினரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஒருவரை ஒருவர் ஆழமாக நேசித்தனர். ஒருநாள் பிரிந்தாலும்கூட தாங்க முடியாமல் வேதனைப்பட்டனர்.

இப்போது பிரிக்கப்பட்டுவிட்டனர். தனிமை சாவைவிட மும்மடங்கு மோசமானது.

(தொடர்ந்து வரும்)

# நாம் பிறந்த மண்

ஜெயமணி



"கடைசி போர்ட். இரண்டு பேருக்கு இடமுண்டாம். நீங்கள் முதலில் போங்கோ. நானும் தம்பியும் நாளைக்கு வாறம்."

தந்தை வந்து சொன்னபோது அவளும், அம்மாவும் முடியாது என்று தான் சொன்னார்கள். "அப்பா! எதுவானாலும் நாங்களும்கூட இருந்து கூடவே போவோம். யாருக்கு எங்கே என்ன நிகழுமோ? வேண்டாம் நாளைக்கே போவோம்."

அப்பா இணங்கவில்லை. பிடியாக நின்றார். "பயப்படாமல் போங்கோ. நாளை முதல் போர்ட்டுக்கு ரிக்கட் தந்திருக்கிறார்கள். கிடைக்கிற சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாங்கள் ஆம்பிளையள். நீங்கள் முதலில் போங்கோ சொல்லுறதை கேளுங்கோ."

அடுத்த நாள் கடலேரி உட்பட யாழ்நகர் பூராவும் படையினர் வசமாயிற்று. அன்றிலிருந்து ஆரம்பித்த அம்மாவின் நோய் வருவதும் போவதுமாக இருந்தது. பின் என்ன நினைத்துக்கொண்டதோ நிரந்தரமாகக் குடிகொண்டுவிட்டது. கையில் பணம் இல்லை. யாருடைய உதவியும் இல்லை. கேட்கவும் கூடாது. எல்லோருமே அகதிகளாகி, தொலைந்து போன வாழ்க்கையைத் தேடி ஓடிக் கொண்டிருப்பவர்கள்.

அங்கே இங்கே என்று அலைந்து நிவாரணத்தோடு வாழ்க்கையை ஓட்ட முடியுமாவெனப் பார்த்துக் களைத்துப் போனாள். கடைசியில் அந்தக் கிராமத்து வாத்தியார் உதவ முன்வந்தார்.

பழம்பெருமை பாராட்ட பாரம்பரியமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோமா என்ன?

வன்னிப்பிரதேசம். வாத்தியார் வளவில் நிறையத் தென்னை மரங்கள். வேலையும், நிறைய. ஓலை இழைச்சு, தேங்காய்நார் உரிச்சு, புல் வெட்டி, மந்து கொத்தி பாடாய்ப்படவேண்டியிருந்தது. தருவதை வைத்து அம்மாவின் மருந்து மாத்திரைகளுக்குச் செலவழிக்க முடிந்தது. ப ்க்கு- உண்ண முடிந்தது. பலத்துக்கு..? அம்மாவுக்கு அது அவசியமாக இருந்தது. அவள் அதற்குமேல் என்ன செய்வாள்? சீக்காளியாகிவிட்ட தேவியின் அம்மா நாளுக்கு நாள் பெலவீனப்பட்டுக்கொண்டிருந்தாள். அப்பாவும் தம்பியும் என்ன ஆனார்களோ என்ற கவலை மேலும் வியாதியை தீவிரப் படுத்திக்கொண்டிருப்பது தேவியை பயம் கொள்ளவைத்தது. யாரிடம் முறையிடுவது?

அம்மாவின் இலேசான இருமல் சத்தம் சிந்தனையைக் கலைக்கிறது. அன்னையிடம் குனிகிறாள். "குளிருது சூடாக தண்ணி குடும்மா" என்றாள் அவள்.

இரண்டு நாட்களாக அம்மாவை அழைத்து வந்து மருந்தெடுக்கமுடியாமல் திரும்ப அழைத்துப் போனாள். அவளது தனிமை நிலையைப் பார்த்த பெரியவர் ஒருவர் "தங்கைச்சி போய் வந்து நீ மருந்தெடுக்க மாட்டாய். இரவு இங்கேயே தங்கு. வெள்ளணை முதலாவதாக எடுக்கலாம். நாங்கள் கூட அப்பிடித்தான்." என்றார்

"என்ன வெட்ட வெளியிலேயா? பாவம் அம்மா."

"பாவம்தான். வேறை ஒண்ணும் செய்ய ஏலாது. அந்த மரத்துக்குக் கீழே இராப் பொழுது தங்கிக்கொள். விடிஞ்சதும் மருந்து எடுத்து அனுப்ப நாங்களாச்சு."

சுற்றிப் பார்க்கிறாள். இனித்தாங்காது என்பவர்கள், உள்ள கந்தல்களால் மூடி குறண்டிப் போய்க்கிடப்பது தெரிகிறது. அவளும் அம்மாவை படுக்க வைத்தாள்.

முக்கி முணங்கி புரண்டவர்கள் ஒருவர் இருவராக எழுந்து உட்கார்ந்துகொள்வதும் வரட்டு வரட்டென்று தலையைச் சொறிந்துவிட்டு மறுபடியும் இழுத்துப் போர்த்திய வண்ணம், முட்டும் இருமலில் ஊறும் எச்சிலை காறி உமிழ்ந்துவிட்டு மீண்டும் வெட்டவெளியில் போட்டிருந்த தென்னங் கீற்றில் தலையைச்சாய்த்துக்கொள்வதும் மனசைக் கசக்கியது.

தேவி திரும்பி தேநீர்க் கடையைப் பார்த்தாள். தீ கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது. அதனைத்தொடர்ந்து பையன் தகரப்பேணிகளைக் கழுவி அடுக்கும் சத்தம் கேட்டது. வாத்தியார் சம்சாரம் தந்த பழைய சுடுதண்ணீர்ப்போத்தலுடன் டீக் கடையை நாடிப்போனாள். திரும்பிய போது அன்றைய நோயாளிகள் நீண்ட நெடுங் கோடொன்றைப்போட முயல்வது தெரிந்தது.

அம்மாவை எழுப்பினாள். அவளால் முடியவில்லை. சுடுநீர் கலந்து முகத்தை கழுவியவள் அம்மாவின்தோளில் நைந்து போய்க்கிடந்த தாவணியாலேயே துடைத்து தலையைக்கோதி முடிபோட்டாள். ஆயாசத்துடன் சொருகும் குழிவிழுந்த கண்களை வலுக்கட்டாயமாகத் திறந்து தேவியைப்பார்த்தாள். சொல்லத்துடிப்பது புரிகிறது. "அப்பா.. த.தம்பி இ..இன்னும் ஆ..ஆ..நீ..நீ. தனிச்சு.." முடியாது மூச்சு வாங்குகிறது. களைப்புப்போல நினைத்தவள் தேநீரை குவளையில் நிரப்பி குடிக்கவைக்க, பாதி வழிந்து புடவையை நனைத்தது. வெறும் வயிறு. எத்தனை தடவைதான் தேயிலைச் சாற்றை ஒப்புக்கொள்ளும்? திருப்பி அனுப்பியது.

சொருகுண்டு கிடந்த சேலையை நீவி சரிசெய்து அம்மாவைப் படுக்க வைத்தாள். சுட்டு விரலால் மணலைத்தொட்டு பற்களைத் தேய்த்தவள் கடைப்பையனிடம் தண்ணீர் வாங்கி முகத்தைக் கழுவிக்கொண்டு டொக்டரின் வரவை எதிர்பார்க்கத்தொடங்கினாள்.

நேரம் மணி எட்டைத்தொட்டது. அந்த சின்ன மாதா கோவில் கதவு திறக்கிறது. மேஜை நாற்காலிகள், மருந்துப்புட்டிகளை இருவர்கொண்டு வைத்துவிட்டு எட்டிப் பார்த்தார்கள். நம்பர் தந்தார்கள். தேவிக்கு முதல் நம்பர்.

ஆசுவாசம்தேடும் பெருமூச்சு பிறந்தது அவளிடம்.

சில நிமிசங்களில் ரெட்குரோஸ் மூலம் பணியாற்றும் அந்த வெளிநாட்டு டொக்டர் வந்தமர்க்கிறார். உதவிக்கு உள்நாட்டில் வைத்தியத்துறைக்கு படித்த மாணவர்கள் சிலர்.

தேவி தன் நிலையை சுருக்கமாகவும், உருக்கமாகவும்-தனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில்கூற தாயின் இயலாமையைப் புரிந்து கொண்ட டொக்டர் அவசரமாக மரத்தடிக்கு வந்தார். பின்னே வந்தவள் அன்னைக்குள்ள நோய்களைக் கூற முயன்றாள்.

பரிசோதிக்கக் குனிந்த டொக்டர் இறுகிய முகத்துடன் எழுந்து கொண்டார். அவளை இரங்கலாகப் பார்த்து "வெரி ஸொாரி மேடம்.. யுவர் மதர் இஸ் டெட்," என்கிறார்! இதைத்தான் எங்களால் சொல்லமுடியும் என்பதுபோல் இறங்கிப் போன அவர் குரல் ஒலிக்கிறது.

இத்தனைநாள் பட்டபாடு, பசி, களைப்பு, தூக்கமின்மை, தனிமை எல்லாம் ஒன்று திரண்டு அமுக்கினாற் போன்ற ஒரு தொய்வு. சோர்ந்து மடிந்து அப்படியே அன்னையின் மார்பில் சாய்ந்தாள். சத்தம்போட்டு அழுவதற்கும் சக்தியற்றுப்போன தேவியின் உணர்வுகள் இதுநாள்வரை தேக்கி வைத்திருந்த ஊற்றுப் பெருக்கென உடைப்பெடுத்து கண்கள் வழியே வழிந்து உட்குழிந்த அன்னை வயிற்றினூடாக மண்ணில் சொட்டி ஈரமாக்கியது.

# நிமிர்வு

**"இந்தப் பிள்ளை உங்கள் வீட்டுக்கு மருமகளாக வர நீங்கள் கொடுத்து வைத்திருக்கணும் இராசேந்திரம்!"**

ஷைலஜா – யாழ்



பாடசாலை இடைவேளைக்கான மணி ஒலித்து ஓய்ந்தது. மாண வர்களின் ஆரவாரம் மழை இரைச்சலைப் போல எழும்பியது. ரஞ்சினி பதினொராம் ஆண்டு வகுப்பறையிலிருந்து வெளியே வர, சக ஆசிரியை தேவியும் பக்கத்து வகுப்பி லிருந்து வெளியே வந்தாள். இருவருமாக ஆசிரியர் ஓய்வு அறைக்குள் புகுந்தனர். இருவரும் அந்தப்பாடசாலைக்கு ஒரே நாளில் நியமனம் பெற்று வந்தவர்கள். அதனால் மற்ற ஆசிரிய, ஆசிரியைகளைவிட இரு வருக்குள்ளும் நெருக்கம் அதிகம். தங்களது குடும்ப விடயங்களைக்கூட ஒருவருக்கொரு வர் பரிமாறிக்கொள்ளும் அளவுக்கு அவர் களுக்கிடையில் நல்ல நட்பு நிலவியது.

தேவிக்கு கடந்த ஆண்டுதான் கல்யாண மாகியிருந்தது. ஆனால் ரஞ்சினிக்கு வரன் தேடும் படலம் தொடர்ந்து கொண்டிருந்தது. சீதனம் கேட்குமளவுக்குக் கொடுக்கக்கூடிய அளவு வைத்திராதபடியால், வரன் தேடும் படலத்துக்கு இன்னும் முற்றுப்புள்ளி விழ வில்லை.

"ரஞ்சினி, என்ன கொஞ்ச நாளாவே நீ நல்லா இல்லை" என்று தேவி தொடங்கினாள்.

"அப்படி ஒன்றுமில்லையே" என்ற ரஞ்சினி யிடம் "நீ இல்லையென்று மறைத்தாலும் உன்னுடைய முகம் காட்டிக் கொடுக்குதே. ரஞ்சினி" என்றாள் தேவி.

"நீ எதைப்பற்றி யோசிக்கிறாய் என்று எனக்குத்தெரியும்," தொடர்ந்தாள் தேவி.

"என்ன தெரியும்!"

"கடைசியாய் வந்த வரன், இடையிலை சீதனத்தாலை குழம்பினதைப்பற்றித்தானே யோசிக்கிறாய்? இதுகளைப்பற்றி பெரிதாகக் கவலைப்படாதை ரஞ்சினி. கல்யாண வயதிலை, எல்லாப் பெண்களும் சந்திக்க வேண்டிய விடயங்கள் தான் இவை," என்று பெருமூச்சுடன் நிறுத்தினாள் தேவி.

தேவி சொல்வதில் உண்மையிருந்தாலும் விட்டுக் கொடுக்காதவளாக "அதுக்காக நான் ஒரு நாளும் கவலைப்படமாட்டன்," என்றாள் ரஞ்சனி.

"ஆ ரஞ்சனி சொல்ல மறந்திட்டன். உன்னைக் கடைசியாய் பெண்பார்க்க வந்து வேண்டாமென்று சொன்ன இராசேந்திர மாக்கள், வெள்ளிக்கிழமை எங்கடை ஊர் சரோவையும் பெண்கேட்டு வந்தவையாம். ஆனால் அங்கேயும் சீதனம் காணாது என்று அந்தச் சம்பந்தத்தையும் வேண்டா மென்று சொல்லிவிட்டார்களாம்."

விரக்திச் சிரிப்புடன் "எவ்வளவு சீதனம் கேட்டவையாம்" என்றாள் ரஞ்சினி.

"அது தெரியவில்லை. ஆனால் சரோ வீட்டார் இரண்டுலட்சம் காசும், பத்து பவுண் நகையும் தரலாம் என்று சொன்ன வையாம்."

தேவியின் பேச்சில் குறுக்கிட்ட ரஞ்சினி "அப்பா இரண்டரை லட்சம் காசும் 10 பவுண் நகையும் தரலாமென்று சொன்ன தற்கு, அதுவே போதாது என்று சொன்ன வையள். இரண்டு லட்சத்துக்கு எப்படி ஓம் சொல்லுவினம்?" எரிச்சலுடன் சொன்னாள் ரஞ்சினி.

அவர்களின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி யாக அடுத்தபாடத்துக்கான மணி அடித்தது. அன்று மிகுதி பாடங்களை எடுப்பதற்கு ரஞ்சினிக்கு மனசே இல்லை, கடமையைச் செய்யவேண்டும் என்பதற்காக பாடம் நடத்திக் கொண்டிருந்தாள். எப்போது பாடசாலை முடியும் என்ற மனம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

மனசு சந்தோசமாக இருக்கும்போது நேரம் வேகமாகப் போவது போலவும் மனசு சோர்வாக இருக்கும்போது நேரமும் ஊர்ந்து செல்வது போலவும் இருக்கும். இன்று ரஞ்சினிக்கும் மனசு சோர்வாக இருந்தது. நேரமும் நத்தை வேகத்தைவிட மெதுவாகவே நகர்ந்தது.

பாடசாலை முடிவதற்கான மணி ஒலிக்க, ரஞ்சினியின் மனதிலிருந்த சோர்வும் ஒருபகுதி குறைந்தது. மாணவர்களுக்குப் போட்டியாக, ரஞ்சினியும் சைக்கிளை எடுத்துக் கொண்டு வேகமாக வீட்டை நோக்கி ஓடத்தொடங்கினாள்.

'பெண்ணாகப் பிறந்ததனால் மனதில் எவ்வளவு வேதனைகள். என்போன்ற உத்தி யோகம் பார்க்கின்ற, ஓரளவு வசதியான பெண்களுக்கே கல்யாண வயதில் இவ்வளவு வேதனைகள் என்றால், வேலையற்ற ஏழைக் குடும்பங்களின் பெண்கள் நிலை என்ன வாகும்?' என வீதி முழுவதும் பெண்கள் சமுதாயம் படும் அவலங்களே ரஞ்சினியின் மனத்திரையில் தோன்றிக் கொண்டிருந்தன.

ஜாதகப் பொருத்தம் இல்லாமலும் மனப்பொருத்தம் இல்லாமலும் கல்யாணங் கள் தடைப்படுவது நியாயம். ஆனால் சீதனப் பொருத்தம் இல்லமல் கல்யாணங் கள் தடைப்படுவதைத்தான் ரஞ்சினியால் ஜீரணிக்க முடியாதிருக்கின்றது.

ரஞ்சினிக்கு வந்த மூன்று சம்பந்தங்களும் சீதனப் பொருத்தமில்லாமல்தான் தடைப் பட்டுப்போயின. ஜாதக, மனப் பொருத்தங் களுக்கு மேலாக சீதனப்பொருத்தம் காரண மாக கல்யாணங்கள் தடைப்படுவதனால், இந்தச் சமுதாயத்தின் மீது ரஞ்சினிக்கு பலத்த வெறுப்பு ஏற்பட்டுவிட்டது.

வீதியில் வாகனப்போக்குவரத்துக்களைக் கூடக் கவனியாது, ரஞ்சினி சிந்தனையில் சுழன்று கொண்டு சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தாள். சைக்கிள் வீட்டு வாச லில் வந்து நின்றது. பாடசாலையால் போனதும் சாப்பிட்டுவிட்டு நல்லதூக்கம் போடவேண்டும் என்ற ரஞ்சினியின் எண்ணத் திற்கு இடையூறு வந்ததுபோல, வீட்டுக்கு யாரோ வந்திருப்பதை வாசலிலேயே, வீட்டில் நிலவிய ஆரவாரங்கள் காட்டிக் கொடுத்தன.

'இந்த மத்தியான வேளை யார் வந்திருப் பார்கள்?' என்ற சிந்தனையுடன் உள்ளே சென்றாள்.

முன்பு தனது மகனுக்குப் பெண்கேட்டு வந்த இராசேந்திரமும், தரகர் தணிகாசலமும் தான் அங்கு இருந்தவர்கள். ஆனால் ஏற்க னவே ரஞ்சினியின் அப்பா சொன்ன சீதனம் போதாதென்று, இந்தச் சம்பந்தம் வேண்டாம் எனப் போனவர்கள், இன்று வந்திருக்கின்ற னர். ஏன் வந்திருக்கிறார்கள்?

ரஞ்சினி களைப்புத்தீர கட்டிலில் படுத்திருந்தாள். "என்ன பிள்ளை, வீட்டுக்கு ஆட்கள் நல்ல காரியமா வந்திருக்கினம். நீ இங்கை வந்து படுத்திருக்கிறாய்? எழும்பிக் கால் முகத்தைக் கழுவிவிட்டு வந்து, அவை குடிக்கிறதுக்கு ஏதாவது கொண்டுவந்து குடு," என்ற அம்மாவிடம் 'என்ன நல்ல காரியம்' என்று ரஞ்சினி கேட்க நினைப்பதற் குள் குசினிக்குள் நுழைந்துவிட்டாள்.

முகங்கழுவி தலைவாரிக் கொண்டு வந்த ரஞ்சினி, அம்மா தயாரித்து வைத்த குளிர்பானத்தை அங்கிருந்தவர்களுக்கு பரி மாறினாள். "இந்தப்பிள்ளை உங்க வீட்டுக்கு மருமகளா வர நீங்கள் கொடுத்து வைச்சிருக்க வேணும் இராசேந்திரம்," என்ற தணிகாசலத் தின் பேச்சிலிருந்து அம்மா சொல்லிய நல்லகாரியம் என்ன என்பது ரஞ்சினிக்குப் புரிந்துவிட்டது.

மீண்டும் தனது அறைக்குள் புகுந்து கொண்ட ரஞ்சினி, அவர்களது உரையாட லைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தடைப் பட்டுப்போன கல்யாணம் மீண்டும் அதே சீதனத்துக்கு கை கூடியுள்ளதே என்ற சந்தோசத்தில் அம்மாவும் அப்பாவும் இருப் பதை அவர்களின் பேச்சிலிருந்து ரஞ்சினி உணர்ந்து கொண்டாள். கல்யாணத்தை எப் படிச் செய்வது என்பது பற்றி அவர்கள் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்களின் சம்பாஷணை ரஞ்சினிக்கு ஏனோ மகிழ்ச்சியைத்தரவில்லை.

"அம்மா! இங்கை ஒருக்கா வாங்கோ வன்," என சைகையால் தாயை தனது அறைக்குள் ரஞ்சினி அழைத்தாள். மகளுக்கு நல்ல வாழ்க்கை அமையப்போற மகிழ்ச்சியில் இருக்கும் அம்மா ரஞ்சினியிடம் வந்தாள்.

"கல்யாணத்தைப்பற்றிக் கதைக்கிறியள்; யாருக்கும்மா கல்யாணம்?" மகளின் இந்த வினா அம்மாவுக்கு ஆச்சரியத்தைக் கொடுத் தது. "வேறை யாருக்கு? உன்ரை கல்யாணத் தைப்பற்றித்தான்!"

"எனக்கிந்த கல்யாணத்திலை விருப்ப மில்லையம்மா" என்ற ரஞ்சினியின் பதில் அம்மாவை மட்டுமல்ல வெளியிலிருந்தவர் களையும் அதிர வைத்தது.

"என்ன பிள்ளை சொல்லுறாய்?. நீ ஓமெண்டு சொன்ன படியாலதானே நாங்கள் கல்யாண ஏற்பாடு செய்ய வெளிக்கிட்டனாங் கள்; இப்ப என்ன ஒரு குண்டைத்தூக்கிப் போடுகிறாய்?" மகளின் பதிலுக்கான காரணம் விளங்காத அம்மா கேட்டாள். இருவரது சம்பாஷணை வெளியிலிருந்தவர்களுக்கும் தெளிவாகக் கேட்டது.

"அப்ப நான் ஓமெண்டு சொன்னனான் தான். ஆனால் இந்தச் சம்பந்தம் எனக்கு வேண்டாம்." உறுதியாகச் சொன்னாள் ரஞ்சினி. "ஏன் பிள்ளை அப்பிடிச் சொல்லு கிறாய்?" என்றாள் அம்மா.

ரஞ்சினி நிதானமாகச் சொல்லத் தொடங் கினாள். "அம்மா, இவை முதல் என்னைப் பெண்கேட்டு வந்தினம். நீங்கள் கொடுக்கிற சீதனம் போதாது என்று வேறை இடத்திலை சம்பந்தம் செய்ய வெளிக்கிட்டினம். இவை போன இடங்களிலை எங்களைவிட குறைய சீதனம் வந்தபடியாலைதான் திரும்ப எங்க ளட்டை வந்திருக்கினம். வேறு எங்காவது நல்ல சீதனம் கிடைச்சிருந்தால் எங்களைத் தேடி திரும்ப வந்திருக்கமாட்டினம்." மகளின் பேச்சை அமைதியாக கேட்டுக்கொண்டிருந் தாள் அம்மா.

"என்னிலை ஏதாவது குறைகண்டு முதலிலை வேண்டாமென்று போய், திரும்ப என்னை அந்தக் குறையுடன் ஏற்றிருந்தால் நான் சந்தோசப்பட்டிருப்பன். ஆனால் இவை எங்கடை சீதனத்திலைதான் குறைகண்டு போனவை. பெண்ணைப்பார்க்காம பொன்னை மட்டுமே முக்கியமாகப் பார்க்கிற அந்த வீட்டுக்கு நான் வாழ்க்கைப்பட விரும்ப வில்லை."

ரஞ்சினியின் உறுதியான பதிலில் மாற்றமிருக்காது என்பது எல்லோருக்கும் விளங்கியது.

# உயிர் உறவுகள்

**"நீ யாழ்ப்பாணம் போய்த்தான் ஆகணுமா கவி? நித்தமும் செவிதழுவும் வடக்கின் அவலங்களைக்கேட்டு நான் நிம்மதியா வாழேலுமா கவி?"**



ஆத்மராஜா ரூத் சந்திரிக்கா

மௌன இறுக்கத்தில் நேரம் கரைந் தது. எல்லா முகங்களிலும் சோகப்படிவு. எல்லா இதயங்களிலும் வேதனைச்சுமை. திருமலைத் துறைமுகம் வடபுலப்பயணிகள் கூட்டத்தால் ஜே ஜே என்றிருந்தது. பிரிவுத்துயர் அனல் மூச்சுக் களாய் வெளிப்பட்டன. இன்னும் ஒரேயொரு மணிநேர அவகாசம் இருந்தது. கவிதாஞ் சலியை இமைவெட்டாமல் பார்த்துக் கொண் டேயிருந்தான் ராகுல்.

சந்திப்புக்கள் எத்தனை வினோத மானவை, வசீகரமானவை. ஓர் இலக்கிய அமர்வில் மலர்ந்த சந் திப்பு மொழியி யலும் கலையிலும் பரிவர்த்தனை செய்யப் பட்டன.

அறிவியலும் அரசி யலும் விமர்சிக்கப் பட்டன. நாளாக ஆக கவிதாஞ்சலி மீது கொண்ட ஈடுபாடு வேர் விட்டு, விழுதுவிட்டு விருட்ச மாகி வியாபித்தது. ஆன்மா வில் உறவுச்சுவடு பதிந்த காலமிருந்து இந்த நிமிடம் வரைக்கும் சந்திப்பின் அவஸ்தையை அனுபவித்துக் கொண்டி ருக்கிறான்.

"இனியொரு சந்திப்பு கவிதாஞ்சலி மாதிரி வருமா? இணையாகவருபவள் கவிதாஞ்சலியாகவே இருப்பாளா.....?' ஆழ்மனதில் வலியுணர்ந்தான் ராகுல்.

"ராகுல் வாழ்க்கைங்கிறது சதுரங்க ஆட்டம்தான்-இறைவனோட சொக்கட்டான் விளையாட்டுத்தான். நான் போகவே வேணும் கிற நியதியை நான்கூடத் துயரந்து, விழிநீர் சொரிந்து, வருந்தித்தான் ஜீரணிச்சிட்டன் என்கிறதப் புரிஞ்சுக்கணும் ராகுல்-அன்னிய தேசப்பயணம்போல கப்பற்பயணம்- சே... என்ன நடக்குமென்றே தெரியாத வாழ்க்கை என்ன செய்றது? நியமனம் அங்கு கிடைச் சிற்றே ராகுல்!"

"இதயமெங்கிறது எனக்கு இரத்தமும் சதையுமாத்தான் படைக்கப்பட்டிருக்கு கவி; உன்போல இரும்பால இல்ல."

"ஓ....நோ..யதார்த்த ஜீரணிப்புகள்ல தான் நான் வன்மையாக்கப்பட்டன் ராகுல், இது காலங்களால் அறிவாத உண்மை ராகுல்."

"பிரியப் போகும்நேரம் நெருங்கிற்றே வருது கவி...கிழக்கே நிரந்தரமா சொன் னியே- வடக்கே தஞ்சமா ஆகணுமா? ப்ளீஸ்...போகாமல் விடு- சவால்களை சமுதங்களாக்கிக் காட்டலாம்." கவிதாஞ்சலி புன்னகைத்தாள். சோகம் குமிரிட, ஏதோ கூற வாயெடுத்தான் ராகுல்:

'நீ யாழ்ப்பாணம் போகத்தான் வேணுமா கவி..? நித்தமும் செவிதழுவுகின்ற வடக்கின் அவலங்களைக் கேட்டிட்டு நான் நிம்மதியா வாழேலுமா-கவி? ப்ளீஸ் போகாதை.'

"சரித்திரங்களே சோகத்தில் முடிவுரை யாகிச்சு ராகுல். கயஸ் பாலை நிலத்திலை பைத்தியமாய் அலையறதில யாருக்குத் திருப்தி? இராமன் சரயூ ஆழ்ந்ததுக்கு யார் ஆசைப்பட்டா? அதுபோல கவிதாஞ்சலிகூட வடபுலத்து சாம்பல் மேட்டில ஒரு பிடிச்சாம்பலாகலாம். சில வேளை தப்பி வாழ்ந்து சாதனை படைக்கலாம். டேக் இற் ஈஸி ராகுல்."

"மரண வாக்குமூலம் கொடுக்க ஆரம்பிச் கிறியா கவி...? வாயில் நல்லதே வராதா?"

"நோ-வேதனைகளை ஜீரணிச்சு வாழ்க்கைப் போக்கைப் புரியும்போது வருத்தம் குறைஞ்சிடும் ராகுல். சோகத்தை ஏற்கத் திராணியில்லாமல் சோகமாய்ச் சிரித்தாள். நிமிடங்கள் துடித்து மறைந்தன. "ஒவ்வொருவருக்கும் ஒருபாரம் பரியம், தாயக மண், ஊர், உறவு, கொள்கை எதிர்பார்ப்பு, குடும்ப அழுத்தம்- என் மண்ணிலே நான் வாழுவேன் என் கிற வாக்குறுதியை மீற முடியாத அவஸ்தை கவி எனக்கு- நான் என்ன செய்யிட்டும்?"

"எங்கிருந்தாலும் வாழ்க...மகளே!" சோகம் மறைத்துச் சிரித்தான்.

வடபுலக் கப்பல் வங்கக்கடலில் புள்ளி யாகி பூச்சியமாகிப் போனது. தனித்து நின்றான் ராகுல்-இதயத்தில் வெறுமை சம்மணமிட்டமர்ந்தது.

***

வேகமாக ஒரு மாதம் ஓடிற்று.

வெறுமையிலே வாழ்க்கை கசந்தது. பேரிடியாய் செவிப்பறையைப் பிளந்தது. அந்த ஒப்பற்ற ஓவியம் கனலிலிட்டுக் கருக்கப்பட்டதாம்....சாம்பல் திடலிலே ஒரு பிடிச்சாம்பலாய் உருமாறியதாய்.... அழகான நினைவஞ்சலியில் கவிதாஞ்சலி ஒரு பௌர்ணமியாய்ப் புன்னகைத்தாள்.

எரிகணை மழையில் தோய்ந்து போன அவலத்தை நினைக்கத் திராணியற்று.... கிழக்கின் ஜீவிதத்தோடே அவன் பிரதியை மனதில் பதித்துக்கொண்டான்.

"சரித்திரங்களே சோகத்தில் முடிவுரை யாகிச்சு...கயஸ் பாலை நிலத்தில பைத்திய மாய் அலையுறதில யாருக்கு திருப்தி ராகுல்...?" அவள் இறுதிவார்த்தைகள் அவனுள் வலியெழுப்பின.

இராமகாதையைப் பட்டாபிஷேகத்தோடு நிறுத்தி, சந்தோஷமான முடிவை ஆக்கிவிட்டது போல என் வாழ்க்கையை கிழக்கின் ஜீவிதத் தோடு நிறுத்திக்கணும்- சந்தோஷமான உணர்வு வரும் ராகுல்!" விழிபொங்கப் பார்த்தான். மங்கலாய்ப் பல கவிதாஞ்சலிச் சிரிப்புக் கள் விழிவெட்டாமல் பிம்பங்களைத் தேக்கி வைத்தான்.

"வர்றேன் ராகுல்" விடைபெற்றாள்.

"இருபது வருட ஜீவியப்பிணைப்பை அறுத்துக்கொண்டு, மூலவேரை அவனுள் பதித்துவிட்டு, தொப்புள் கொடியறுந்த விழும் சிசுபோல வடபுலம் நோக்கிய யாத்திரை ஆரம்பமானது.

இருபது வருஷம் சேமித்த கிழக்கின் நினைவுகளைப் பத்திரப்படுத்திக்கொள்வேன் ராகுல். பாசியாய் படிஞ்சிருக்கும் நினைவுகள் பசுமைபெறும் சுகானுபவத்தால் எஞ்சிய காலம் கழிஞ்சிடும்."

"இனி நாம் சந்திப்போமா கவி?"

# நரகம்

கரீமா ராஹில்

**ஒரு மரத்தின் கீழே அமர்ந்து கொண்டார்கள். உதவிக்கு இன்னும் இரண்டு பெண்கள் வந்தார்கள்.**



"இடவ வெளிக்கிடவேணும்.... அவங்களும் அறிவிச்சிப் போட்டினம்.... எங்க போட்டு....இம்....ம்..."

ராஜரத்தினம் மூச்சிரைக்கக் கூறினார். அவரின் இதயம் சோகத்துள் வெந்தது. மனம் நொந்தது.

"அடப்பாவமே....! என்ன பாவத்த.... உந்த மனுசங்கள்.... செய்தாங்கள்.... நாங்களும் எவ்விடம் போட்டு சீவனம் செய்யிறது...?" பார்வதியும் தன் ஏக்கத்தையும் சோகத்தையும் போர் செய்யும் தாகத்தையும் வெளிப்படுத்தினாள். உள்ளக்கிடக்கை வார்த்தைகளால் மொழிபெயர்த்தாள். அவ ளின் இதயம் வேர்த்தது. இன்னல்கள் தொடராகக் கோர்த்துக் கிடந்தன.

அரைவாசி ஆயுளைக் கடந்த நரை வயதிலும் ராஜரத்தினத்துக்கும் பார்வதிக்கும் ஏற்பட்ட நிலையால் நிலை குலைந்தனர்.

தன்னுடைய மகள் செல்லம் பிரசவத் திற்குக் காத்திருக்கும் வேளை. ஒரு பூ இன்னொரு பூவைப் பிரசவிக்கக் காத்திருக் கும் நிலை.

"எல்லோரும் வெளிக்கிட்டு போயக்கிட்டி ருக்கினம். எந்த சாமான்கள் எடுக்கிறது...? எத விடுறது....?" பார்வதி தடுமாறினாள். இடம் மாறச் சொன்னதனால் தடம் புரண்டாள்.

"படுக்க, சாப்பாட்டுச் சாமான்கள் எடுத்தால் போதும்....." தேவையானவற்றை- சுமக்கக்கூடியவற்றை எடுத்துக் கொண்டார் கள்.

மாலை மூன்று மணி. வெயிலும் கடுமை யாக எரித்தது. எச்சரித்தது.

"புள்ள...செல்லம்....நடக்க ஏலுமே...?"

"ஓமம்....மா...."

அவர்கள் புறப்படும் போதுகூட்டங்கூட்ட மாகச் சனங்கள் சென்று கொண்டிருந்தார் கள். சைக்கிள், மாட்டுவண்டி வசதியுள்ள வர்கள் அதிகமான பொருட்களுடன் சென்று கொண்டிருந்தார்கள்.

அகதிகள் அந்தஸ்தோடு அவர்களின் பாதங்கள் இருசுமைகளோடு நகர்ந்து கொண்டிருந்தன. நரகம் இதுதான் என்பது போல வேதனைகளைச் சுமந்து கொண்டு சென்றார்கள். சாதிப்பாகுபாட்டுக்குள் புகுந்து கொண்டு சாதியின் பெயரைச் சொல்லி சொல்லி தங்களுக்குத் தேவையானவற்றைச் சாதித்தவர்கள் எல்லோரும் இப்போது எந்தப் பாகுபாடுமின்றிக் கூட்டத்தோடு கோவிந்தா.

இப்போது எல்லோரும் மனிதர்கள். அகதிகள். ஏற்றத்தாழ்வு சமப்பட்டது போல உணர்வு. ராஜரத்தினம் அந்த இன்னலுக்குள் ளும் இந்த மனிதர்களை நினைத்து நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டார்.

எத்தனை மைல்கள் கடந்து சென் றிருப்பார்கள் என்பது அவர்களுக்கே தெரியாது.

"அம்...மா...ம்...மாமா...ம்...அம்...மா...

ஐயோ...கட..வு..ளே..." செல்லம் வலிதாங்கா மல் அழுதாள்.

"என்ன....புள்ள செய்றது....? உந்த நேரத்துல தான் தைரியமா இருக்க வேணும்...."

"அம் ...மா.... வயி.... வயி.... று.... நோகுதும்....மா....ம்...."

இரவு ஏழுமணி இருக்கும். அரைச் சந்திரன் மழை மேகங்களை ஊடுருவி சிறிதாய் வெளிச்சத்தை உமிழ்ந்து கொண்டி ருந்தது. சின்னச் சின்ன பற்றைகள் முட் பற்றைகள். ஆங்காங்கே பெரிதும் சிறிதுமான மரங்கள். ஒரு மரத்துக்குக் கீழே அமர்ந்து கொண்டார்கள்.

உதவிக்கு இன்னும் இரண்டு பெண்கள் வந்தார்கள். ராஜரத்தினம் மகளின் நிலை யினையும் இந்த மக்களின் நிலையினையும் நினைத்துக் கண்ணீர் வடித்தார். ஒதுக்குப் புறமாக இருக்கும் பற்றைகள் சூழ்ந்திருக்கும் ஒரு மரத்தின் கீழே களைப்பால் அமர்ந்து கொண்டார்.

வானம் முழங்கியது. ஆங்காங்கே மின்னல் காற்றுபலமாக வீசிக்கொண்டிருந்தது.

செல்லம் பிரசவ வேதனை தாங்க முடியாமல் அழுது கொண்டிருப்பது அவரின் காதுகளில் ஈட்டியாகக் குத்திக் கொண்டிருந்தது. அவரின் உள்ளம் வேதனை தாங்க முடியாமல் அழுது கொண்டிருந்தது. இடி முழக்கம் மின்னல் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது. மேகம் அறுந்து பூமியில் விழுவது போல் மழை. எல்லோரும் நனைந் தார்கள். எல்லாம் நனைந்தன. இயற்கைகூட அவர்களுக்குத் துரோகம் இழைத்துக் கொண்டிருந்தது.

"உங்களைத்தான்...."

பார்வதி குரல் கொடுத்தாள்...

"........"

"குழந்த இறந்துதான் பொறந்திருக்கு....."

செல்லம் மயக்க நிலையில் கிடந்தாள். பார்வதி அவரிடம் வந்தாள்.

பாம்பு கடித்து இறந்து கிடந்தார் ராஜரத்தினம்....



# இலக்கிய நயம்

## முடியாத இரண்டு

**தருவது ரசிகன்**

"நிலவைச் சலவை செய்தால்
எப்படியிருக்கும்?"
வினா விரிந்தது
வில்லவன் உதடுகளிலிருந்து.

விடை சொல்லவில்லை.
விழிப்புருவம் மட்டும் உயர்த்தினாள்!

"நின் முகம் போல் இருக்கும்.
நிலவில் ஒரு மறுவிருக்கும்-உன்
அழகு முகத்தில் அதுவும் இல்லை!"
வசிய வார்த்தைகளால்
வருடிப்பார்த்தான் இதயத்தை!
மசிவதாய்த் தெரியவில்லை அவள்!

"முள்ளில்லாத ரோஜா
எங்கிருக்கிறது தெரியுமா?"
அதற்கும் பதில் இல்லை.

விடையை வில்லவனே
விரித்தான்.
"முத்துப்பல் ஒளியில்-நீ
முறுவல் சிந்துவாயே அதுதான்!"
அவள் அசைவதாய்த் தெரியவில்லை.

"கிளிக்குக் கிடைக்காத
கொவ்வை-ஒரு காளைக்காக
காத்திருக்கிறது!
அது எதுவென்று சொல்லவா?"
முறைப்புத் தெரிந்தது முகத்தில்!

"சாயம் பூசாமலேயே
மாயம் காட்டும் உன் இதழ்தான் அது!"
விழிகளால் அவனை விழுங்கினாள்
இதழ்களில் மட்டும் மௌனம் ஏந்தினாள்!

"எந்த வாதத்துக்கும்
உண்டு மருந்து-ஒரு
வாதத்துக்கு மட்டும் இல்லை மருந்து!
அந்தவாதம் பிடிவாதம்!"
சினந்து நோக்கினாள் தேவி.

"ஆமாம், ஆமாம் பிடிவாதம்
ஆனது பிரிந்து பலமாதம்
அதனால் வந்தது பிடிவாதம்!"
தேன் இதழில் தீயின் சூடு!

"தொட்டால்தான் சுடும்
தீயின் வெப்பம்;
தொடாமலேயே சுடும்
என் தேவியின் இதழ்கள்!"

"சுடும்தான், சுடும்தான்
மறந்தால் சுடும்தான்!"

"உயிரே! உயிரே! என் உயிரே!
மழையே பயிரை மறந்தாலும்
மறவேன் உனையே ஒருநாளும்!"

"குறித்த நாளில் வந்தீரோ?
பொய்க்கும் மழைபோல் ஆனீரே!
உறைக்குள் சிக்கிய வாள்போல
எங்கே ஒளிந்து கிடந்தீரோ?"

"உறைக்குள்தானே வாள் இருக்கும்
உரிய நேரத்தில் கையில் வரும்
அதுபோல் நானும் வந்துவிட்டேன்.
வாள்போல் என்னைக் கையிலெடு!"

"வாள்போல் மிரட்ட வந்தீரோ?
மான்போல் மிரள்பவள் நானல்ல!"

"காண்போர் மிரள்வர் உனைக் கண்டு
கண்போல் இரண்டு வேல் உண்டு.
மண்மேல் போரில் வென்றோரும்
பெண்போர் விழிமுன் தோற்றிடுவர்!"

"பாடம் எங்கே பயின்று வந்தீர்?
பசப்பு மொழிகள் எங்கு கற்றீர்?"

"பயின்றது பாதியில் விட்டுப் போனேன்
பயிலலாம் மீதியும் என்று வந்தேன்!"

"பள்ளிக்கூடம் இங்கில்லை
சொல்லித்தரவும் ஆளில்லை!"

"புள்ளிமயில் நீ இங்கிருக்க
பள்ளிக்கூடம் எனக்கெதற்கு?
கள்ளி உனக்கு நான் இருக்க
சொல்லித்தரவும் ஆள் எதற்கு?"

நாணம் அவள்முகம் நாடி வந்தது
நாலில் ஒரு குணம் நான்தான் என்றது.

"வெட்கம் கூட
செவ் வெளிச்சம் தந்தது.
பக்கம் வா என்று
செங் கன்னம் அழைக்குது!"

சொன்னவன் நகர்ந்து
கன்னத்தைக் கிள்ளினான்.
'என்னவள்' என்ற துணிச்சலில்
அன்னவள் மேனியைக் கரத்தால் அள்ளினான்.

கண்களை மூடினாள். கண்களை மூடினாள்.
கனியிதழ் துடிக்க கண்களை மூடினாள்.
கொத்தும் கிளியென காளை மாறினான்
கொவ்வைக் கனிகளில் பசியும் ஆறினான்.

செவிகளைத் திருகி சிணுங்கினாள்
கரங்களை விரித்து அவனை வாங்கினாள்.
ஈருடல் கலந்தன இன்னுயிர் மகிழ்ந்தது.
இருவரில் ஒருவர் மாயமாய் போனாரோ?

முகம் இரண்டு ஒன்றானது
கால் நான்கு இரண்டானது
மார்பு இரண்டும் ஒன்றானது.
உடல் இரண்டு ஒன்றானது.
கை இரண்டு காணாமல் போனது
காற்றுக்கும் வழி இல்லையென்றானது.

'உனக்குள் நான், எனக்குள் நீ'
ஒருவருக்குள் ஒருவர் காணாமல் போயினர்.

பாலுக்குள் தேன் கலந்தது
மனசுக்குள் சுகம் சுரந்தது!

"எண்ணெய் உள்ளவரை விளக்கெரியும்
ஆசை உள்ளவரை காமம் எரியும்
பருவம் உள்ளவரை மோகம் தொடரும்
பருவம் கடந்த பின்னும் நினைவு மலரும்!"
வில்லவன் தத்துவம் பேசினான்.

பேசும் நேரமா அது?-"போதும்
உங்கள் தத்துவம்!"
சித்திரம் சிணுங்கியது.

"பொறுமை இல்லையோ?
பொறுத்தது போதுமோ?"

வரைந்த ஓவியத்தை
பாதியில் நிறுத்திவிட்டு
கேள்வியா கேட்பது?

என்ன செய்வது இப்போது
அவன் முறை!
வரம் கேட்டுக் கெஞ்சியவன்
வரம் கிடைத்ததும்
தன் பலம் பரிசோதித்தான்.

பயிர் மழைக்கு ஏங்கும்போது
வானம் வேடிக்கை காட்டியது.

பொறுமை இல்லை-கரம்
நீட்டி கழுத்தை வளைத்தாள்.
உதடுகள் பேச தடையிதுவென்று
இதழ்களால் சிறைப் பிடித்தாள்.

மதுவில் விழுந்தது வாலிப வண்டு.
மந்தியானது மனமென்னும் குரங்கு
பொறுமையைச் சோதிக்கும்
நாடகம் மறந்து
சந்தன மயிலிடம் சரணடைந்தான்.

சரணும் சமரும் ஒரே களத்தில்
திரைகளும் இல்லை. தடைகளும் இல்லை.
தொடர்ந்தது பாடம், விரிந்தது விளக்கம்.
மறந்தது உலகம். மலர்ந்தது சொர்க்கம்!

மறுநாள் பொழுது விடிந்தது நன்றாய்.
குறுவாள் நகையோடு தோழி வந்தாள்.

"பட்டினி போடுவேன்
பிரிந்தவர் வரட்டும் பாரடி
பட்டினி போடுவேன்!"
தோழிக்கு நேற்றுச் சொன்ன வார்த்தைகள்
நேற்றிரவோடு பறந்து போன வார்த்தைகள்!

நழுவப் பார்த்தாள். தோழி மறித்தாள்.
"தழுவிய பூங்கொடி சபதம் என்னாச்சு?"

"நான் என்னடி செய்வேன்?
ஆசையை எனக்குள்
ஆழமாய் மறைக்க
ஆயிரம்தான் முயன்றேன்!
உள்ளே மறைத்தாலும்-பொல்லாத ஆசை
உள்ளங்கை நெல்லிக்கனியாக
வெளிப்பட்டு விடுகிறதே!"

"தெரியாமலோ சொன்னார்
திருவள்ளுவர்?"

"என்னடி சொன்னார்
அந்தத் தாடிக் கிழவர்?"

"ஆசையும்-தும்மலும்
ஒன்றென்று சொன்னார்.
இரண்டையும்
மறைத்துத் தடுக்கவே முடியாது!
இரண்டும் நம்
சொற்படி கேளாது!"

**"மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போல் தோன்றி விடும்!"**

அதிகாரம்-126, குறள்-1253

---

## ஸ்போர்ட்ஸ்

### முதல் டெஸ்ட் ~10 விக்கெட்



அறிமுகமாகிய முதல் டெஸ்ட் போட்டியிலேயே 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய முதலாவது பாகிஸ்தானிய வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார் 20 வயதான முகமட்சாஹிட்.

தற்போது பாகிஸ்தானில் நியூஸிலாந்து அணி சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு வருகிறது. ராவல்பிண்டியில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் முகமட் சாஹிட் நியூஸிலாந்திற்கெதிராக இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

படத்தில்-10 விக்கெட்டுக்களை வீழ்த்திய களிப்பில் முகமட் சாஹிட்.

### எட்பேர்க்கும் ஒதுங்குகிறார்

ஆர்ஜென்டினாவின் டென்னிஸ் வீராங்கனை காப்பிரியலா சாபாடினியைத் தொடர்ந்து சுவீடன் நாட்டின் டென்னிஸ் வீரர் ஸ்ரெபான் எட்பேர்க்கும் டென்னிஸிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இந்த மாதம் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் ஃபிரான்ஸ் குழுவினருடன் விளையாடிய போட்டி, எட்பேர்க் விளையாடிய இறுதிப்போட்டியாகும்.

சுவீடனின் பெருமைக்குரிய டென்னிஸ் வீரரான ஜோன் பேர்க்கிற்கு அடுத்ததாக எட்பேர்க்கும் டென்னிஸில் பல சாதனைகள் படைத்தார்.

1983ம் ஆண்டு ஜூனியர் கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெற்ற எட்பேர்க் தொடர்ந்து 13 ஆண்டுகளில் 41 பட்டங்களை வென்றுள்ளார். இவற்றில் இரண்டு விம்பிள்டன், இரண்டு அமெரிக்க ஓப்பன், இரண்டு அவுஸ்திரேலிய ஓப்பன் ஆகிய ஆறு கிராண்ட் ஸ்லாம் பட்டங்களும் அடங்கும்.



இதைத் தவிர 1990-91 ஆண்டில் உலகின் முதல் நிலை வீரராகத் திகழ்ந்துள்ளார். அத்துடன் கடந்த 10 ஆண்டுகளாக உலகின் முதல் வீரர்களில் ஒருவராக விளங்கியுள்ளார்.

### குத்தில் செத்தார் வீரர்

இத்தாலி நாட்டைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரரான ஃபேப்ரிஸியோ டி சியாரா கடந்த மாதம் 16ம் திகதி குத்துச்சண்டைப் போட்டியின்போது பலத்த காயமடைந்து மரணமானார்.

25 வயதான ஃபேப்ரிஸியோ மிடில் வெயிட் பிரிவில் வின்சென்ஸோ இம்பார்டோவுடன் போட்டியிட்டார். கடைசி ரவுண்டில் இவரது தலையில் பலமான குத்துக்களை இறக்கினார் வின்சென்ஸோ. இதனால் நிலைகுலைந்து விழுந்தார். பின்னர் கோமா நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இரண்டு முறை இவருக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. சிகிச்சை பலனளிக்காததால் இவர் மரணமடைந்தார்.

குத்துச் சண்டைப் போட்டியொன்றின் போது உயிரிழக்கும் ஏழாவது வீரர் ஃபேப்ரிஸியோ.

---

## சிந்தியா பதில்கள்

★ உள்ளூராட்சித் தேர்தல் வடக்கில் நடத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது பற்றி என்ன நினைக்கிறீர்?

வி. சபேசன், வவுனியா.

*அந்த அறிவிப்பில்கூட ஒரு கஞ்சத்தனம் தெரிகிறது கவனித்தீர்களா? மாகாணசபைத் தேர்தலை நடத்தப்போவதாக அறிவித்திருந்தால்கூட, அதிகாரத்தை பகிர்ந்து கொடுக்க அவசரப்படுவதாக நினைத்திருக்கலாம். அதிகாரமே இல்லாத சபைகளுக்கு தேர்தல் நடத்தி ஆரவாரம் செய்யத்தானே ஆசைப்படுகிறார்கள்?*

❀❀❀

★ டியர் சிந்தியா! தொலைக்காட்சி தமிழ் அறிவிப்பாளர்கள் தடுமாறிப்போகிறார்களே! என்ன காரணம்?

தே. டில்சாட், மட்டக்குளிய.

*கொலை செய்யும்போது கொஞ்சம் தடுமாற்றம் இருக்கத்தானே செய்யும்?*

❀❀❀

★ இம்ரான்கான் பாகிஸ்தான் பிரதமரானால்?

எம். நிசார், மருதமுனை.

*பாகிஸ்தான் அரசியல்வாதிகள் பலர் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓட வேண்டியதுதான். "ஊழல் செய்த அரசியல்வாதிகளை தூக்கில் போடுவேன்!" என்று ஒரு பந்தை வீசியிருக்கிறார் இம்ரான்கான்.*

❀❀❀

★ இந்தியன் தாத்தா- சண்முகி மாமி- ஒப்பிடுக?

ஜெ. யூட் கிலேரியன், மட்டக்களப்பு.

*தாத்தா-கத்தியை வீசி சதக் சதக்.*
*மாமி-புத்தியை வீசி களுக் களுக்!*

❀❀❀

★ முயற்சி செய்யாமல் இருந்துகொண்டு அடுத்தவரின் உயர்ச்சியைப் பற்றி நினைத்து புலம்புபவர்கள் பற்றி?

கே. செல்வராணி, ஹட்டன்.

*"ஆமையிடம் முயல் ஏன் தோற்றது?"*
*"முயலாமை!"*
*இதுகூட தெரியாமல் இருக்கிறார்களே! என்ன செய்வது?*

❀❀❀

★ 'கத்தியில்லாமல், இரத்தமில்லாமல் யுத்தம் ஒன்று வருகுது' என்றொரு பாடல் இருக்கிறதல்லவா? அது எப்படி சாத்தியம்?

எஸ். புவனேஸ்வரன், மாத்தளை.

*அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் தீவிரமாக நடந்துகொண்டிருந்தது. அப்போது ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் தன் அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடல் ஒன்று நடத்தினார்.*

*"எதிரிகளை எதிரிகளாகப் பார்க்காதீர்கள். அன்புடன் பழகி நண்பர்களாகப் பழகுங்கள்." என்று சொன்னார்.*

*ஒரு பெண் அதிகாரி கோபமாகக் குறுக்கிட்டாள்.*

*"நீங்கள் சொல்வது கோழைத்தனம். எதிரிகளிடம் பணிந்து போகச் சொல்லாதீர்கள். எதிரிகளை அழிக்க வழி சொல்லுங்கள்!" என்றாள் அந்த அதிகாரி.*

*ஆபிரகாம் லிங்கன் பதிலுக்குக் கோபப்படாமல் சிரித்துக்கொண்டே சொன்னார்:*

*"எதிரிகளை அழிக்கத்தானே நான் வழி சொல்லுகிறேன். அவர்களை நீங்கள் நண்பர்களாக்கிய மறுவிநாடியே எதிரிகள் அழிந்து போவார்கள்!"*

❀❀❀

★தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் செல்வாக்கு எப்படி இருக்கிறது?

எஸ்.என். இமாம், மருதானை.

*கைது செய்யப்பட்டதுதான் நியாயம் என்று நினைத்து இரத்தத்தின் இரத்தங்கள் அமைதியாக இருக்கும் அளவுக்கு! ஆக மொத்தம் 20 பஸ்களுக்குத்தான் கல்லெறிந்திருக்கிறார்கள். குறைந்தது 200 பஸ்களாவது பதம்பார்க்கப்பட்டிருந்தால் தான் அரசியலில் ஒரு மதிப்பு வருமுங்க.*

❀❀❀

★ மூட நம்பிக்கைகள் நமக்கு மட்டும்தான் சொந்தமா?

ஆ. வரதராஜன், திருக்கோணமலை.

*அப்படியெல்லாம் பெருமைப்பட்டு உரிமைகோர முடியாது.*

*ஜப்பானியர்கள் விஞ்ஞான தொழில் நுட்பத்தில் வெளுத்து வாங்கும் கில்லாடிகள். அந்த ஜப்பானியர்கள் கூட 4,9 ஆகிய எண்களை ராசியில்லாத எண்களாக ஒதுக்கி வைத்திருக்கிறார்கள்.*

*ஜப்பானிய மொழி உச்சரிப்பில் எண் 4- சாவு என்பது போன்ற ஒலியையும், எண் 9- துன்பம் என்பது போன்ற ஒலியையும் கொடுக்கிறதாம். ஜப்பானில் உள்ள விடுதிகளில் 4,9 எண்களில் அறைகளே கிடையாது.*

*உலகில் பலநாட்டு மக்கள் எண் 13ஐ ராசியில்லாத எண் என்று ஒதுக்கிவைத்திருக்கிறார்களாம்.*

❀❀❀

★உலகில் அழகான பெண் யார்?

செல்வி சி. ஊர்மிளா கலஹா.

*அன்னை தெரேசா. அன்பே அழகு!*

❀❀❀

★ பெண்கள் புகழ்ச்சிக்கு மயங்கிவிடுவார்கள் என்பது சரியா சிந்தியா!

மா. பகீரதன், மட்டக்களப்பு.

*அப்படியா சங்கதி? இந்தக் கதையைக் கொஞ்சம் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்:*

*ஒரு பஸ் தரிப்பிடம்.*

*அங்கே ஒரு அழகான பெண். அவளிடமிருந்து கம கம சென்ற் வாசனை. அப்போது ஒரு ஆசாமி அவள் அருகே வந்து அசடு வழிந்தான்.*

*"என்ன மிஸ்டர் வேணும்?" என்று கேட்டாள் அவள்.*

*ஆசாமி பயந்துவிட்டான்.*

*"நீங்கள் போட்டிருக்கிற சென்ற் பிரமாதமான வாசனை அடிக்குதே, எங்கே வாங்கினீர்கள்?" என்று கேட்டான்.*

*"எதற்காகக் கேட்கிறீர்கள்?" என்று கேட்டாள் அந்தப் பெண்.*

*"இல்லை- என் தங்கச்சிக்கு வாங்கிக் கொடுக்கலாமென்றுதான்" என்றான் அந்த ஆசாமி.*

*"அப்படியெல்லாம் சென்ரை உங்கள் தங்கச்சிக்கு வாங்கிக் கொடுக்காதீர்கள்."*

*"ஏன்?" என்று விடாமல் கேட்டான் ஆசாமி.*

*அந்தப் பெண் அதற்கு என்னபதில் சொன்னாள் தெரியுமா?*

*"சென்ற் பற்றி விசாரிக்கிற சாட்டில் கண்ட கண்ட நாய்களெல்லாம் அவளிடம் வந்து பேசி வழிந்து கொண்டு நிற்பார்கள்!" என்றாள்.*

❀❀❀

★ இந்திய அணியில் இடம்பெற்ற சோமசுந்தர் எந்த மாநிலத்துக்காரர்?

பெ. சுதாகரன், கண்டி.

*கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர்.*

❀❀❀

★தீபாவளி வெளியீடுகளான தமிழ் திரைப் படங்களில் எது நூறாவது நாளை எட்டிப் பிடிக்கும்?

எஸ். அரசகுமார், கல்முனை-02.

*சுலபமாக நூறாவது நாளைக் கடந்து செல்லப்போவது- அவ்வை சண்முகி.*




*'இந்தியன்' பட வசூலையே மாமி விழுங்கி ஏப்பம் விடப்போகிறார். அலெக்சாண்டர், சேனாதிபதி, நேதாஜி, கல்கி ஆகியபடங்கள் அடுத்த நிலையில் இருக்கின்றன.*

❀❀❀

★ உலகக் குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் தோல்வி அடைந்துவிட்டாரே?

எ.யூட் கொறேரா பாலையூற்று.

*யானைக்கும் அடி சறுக்கும். ஆனால் ஒன்று, யானையை வென்றது பூனையல்ல; மற்றொரு யானை தான்!*

❀❀❀

★ சிந்தியா! அதர்மம் ஒழியாதா?

செல்வி கல்யாணி பரமானந்தம், மாகோ.

*ஒழிந்தால் தர்மத்தின் பெறுமதி தெரியாதே!*

# இராமாயணம் அங்கம் 61

## கலக்கமடைந்த இலங்காதேவி

இராமபிரானுடைய எதிரியாகக் கருதப்படும் இலங்காபுரிவேந்தனின் நாட்டின் அழகினைக் கண்டு, இராமதூதனான அனுமன் திகைப்படைந்து போனார். தித்திப்பான பண்டங்களை சிறிதளவு உண்டதும் தெவிட்டத் தொடங்கிவிடும். ஆனால், இலங்கையில் காணக் கிடைப்பவையெல்லாம் எவ்வளவுதான் அனுபவித்தாலும் தெவிட்டாதென அனுமனுக்குப்பட்டது.

கோட்டை வாயில் மூலமாக முறைப்படி நுழையாமல் மதில்மேல் தாவி உள்ளே குதித்த ஆஞ்சநேயரின் வழியை மறைத்தாற்போல் பெண்ணொருத்தி நிற்பதைக் கண்டதும் அவர் சற்றுத் துணுக்குற்றார். பிரம்மச்சாரி விரதம் மேற்கொண்ட அனுமன் எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பாராதவர். தன்முன் நின்ற பெண் எத்தகைய நோக்கத்துடன் வந்து நிற்கிறாள் என்பதை அனுமனால் அறிய முடியவில்லை. இருப்பினும் அப்பெண் மிகுந்த கோபத்துடன்தான் வந்திருக்கிறாள் என்பதை அவருடைய உணர்வு புலப்படுத்தியது. தலை கவிழ்ந்து நின்ற ஆஞ்சநேயரை நோக்கி அப்பெண், "ஏ குரங்கே! முறைப்படி முன் வாயிலால் நகரின் உட்புகாமல் திருடனைப்போல் மதில் மேலேறிக் குதிக்கிறாயே! நீ யார்? எதற்காக திருட்டுத்தனமாக் உள் நுழைந்தாய்? உன்னை ஏவியவர்கள் யார்?" என்று கேள்வி மேல் கேள்விகளைத் தொடுத்தாள்.

தன்னை எவரும் காணாமல் இருக்க வேண்டும் என்று நினைத்து இரவு வேளையில் நகருள் நுழைந்தும் ஒரு பெண்ணிடம் அகப்பட்டுக் கொண்டோமே என்று ஆஞ்சநேயர் ஒரு கணம் மனம் வருந்தினார். அவருடைய மன வருத்தம் கோபமாக மாறியது. ஒரே தாக்காகத் தாக்கி அவளைக் கொன்று போடலாமா என்று நினைத்தார். நொடிப் பொழுதில் தான் மேற்கொண்ட காரியத்தை-தனது கோபத்தினால் கெடுத்து விடலாகாது என்று எண்ணியதும் சினத்தை அடக்கி அமைதியாக, "இந்த நகரின் அழகினையும் வற்றாத வளங்களையும் கேள்விப்பட்டு நேராகப் பார்த்துவிட்டுப்போகவே வந்தேன் அம்மணி," என்று மிகப் பணிவாகக் கூறினார். இருப்பினும் அப்பெண்ணின் போக்கில்

**இராஜகுமாரன்**

எவ்வித மாற்றத்தையும் ஆஞ்சநேயரால் காண முடியவில்லை.

### பெண்ணுருவில் தேவதை

"உன்னைப் போன்றவர்கள் வந்து வேடிக்கை பார்த்துவிட்டுச் செல்வதற்காக அமைக்கப்பட்ட நகரம் இதுவல்ல. உனக்கு இங்கு அனுமதி தரப்படமாட்டாது. மறு வார்த்தை எதுவும் பேசாமல் உடனடியாக இங்கிருந்து ஓடித்தப்பி விடு! இல்லையேல் உன்னைப்பொடியாக்கிப் பொசுக்கி விடுவேன்," என்று கர்ஜித்தாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் அனுமன் வாய்விட்டுச் சிரித்தார். 'ஒரு பெண் என்னைக் கொல்லப் போவதாகக் கூறுகிறாளே!' என்று அவர் ஏளனமாகச் சிரித்தமையினால் அவளுக்கு மேலும் கோபம் அதிகரித்தது. தான் இவ்வளவு தூரம் எச்சரித்தும் இந்தச் சின்னஞ்சிறிய உருவம் சிறிதளவாவது அச்சப்படாமல் தன்முன் நின்ற வண்ணம் வாதாடுகிறதே என்று கருதியவள் 'இது சாதாரண குரங்கல்ல; யாரோ எதிரியின் ஏவலால் இங்கு வந்திருக்கிறது. இதனைச் சும்மா விட்டுவிடலாகாது' என்று சிந்தித்து தனது திரிசூலத்தை எடுத்து ஆஞ்சநேயனை நோக்கி வீசியது.

அனுமன் தனது வலக்கரத்தால் அந்தச் சூலத்தைப் பிடித்துப் பொடிப் பொடியாக உடைத்தெறிந்தார். அப்போதுதான் அந்தப் பெண் உருவத்தை நிமிர்ந்து பார்த்தார். அது ஒரு தேவதை என்பதை உணர்ந்தார். அதன் பார்வை எட்டுத் திக்குகளையும் ஒரே நேரத்தில் பார்க்கத்தக்கதாக அமைந்திருந்தது. எட்டுக்கைகளைக் கொண்டதாகக் காணப்பட்டது. அதன் மூச்சில் அனல் தெறித்தது. சந்தனக் குழம்பை உடலெங்கும் பூசியிருந்தமையினால் சந்தனத்தின் நறுமணம் எங்கும் பரவியிருந்தது. கைகளில் பலவகையான ஆயுதங்களையும் தாங்கியிருந்தது அத்தேவதை.

ஆஞ்சநேயர் அஞ்சாநெஞ்சம் படைத்தவர். அதேபோல் அடங்காத கோபம்



கொள்ளும் சுபாவமுடையவர். அநீதிகளைக் கண்டால் தாங்கமாட்டார். அதேநேரத்தில் அல்லல்படும் எவருடைய அல்லலையும் தீர்த்து வைக்க உடனோடிச் சென்று உதவும் தன்மையுடையவர். தன் எதிரே நின்ற தேவதை எடுத்த எடுப்பிலேயே ஆயுதத்தைப் பிரயோகித்தமையினால் அவருடைய ஆத்திரம் அதிகரித்தது. தனது ஆத்திரத்தை ஒரு பெண்ணிடம் எவ்வாறு காண்பிப்பது என்று கடுமையாக யோசித்தார். தேவதை மறுபடியும் தன்னைத் தாக்குவதற்கு எத்தனிப்பதற்கிடையில் செயலில் இறங்க வேண்டும் என்று அவர் மனம் எச்சரித்தது. உடனடியாக அப்பெண்ணின் கைகளிலிருந்த ஆயுதங்களை ஒரே மூச்சில் பறித்து முறித்தெறிந்தார். இதனால் வெகுண்டெழுந்த அப்பெண் தன் இருகைகளாலும் அனுமனின் மார்பில் ஓங்கிக் குத்தியது.

தனது மார்பில் பூக்கள் விழுந்தது போன்ற உணர்வே ஆஞ்சநேயருக்கு அப்பொழுது ஏற்பட்டது. இருப்பினும், நிலைமை மேலும் வலுப்பெறுவதற்கிடையில் தன்னுடைய வலக்கரத்தினால் அந்தத் தேவதையின் தோளில் தட்டினார். அந்த அழுத்தத்தையே தாங்க முடியாமல் அந்தத் தேவதை மண்ணில் புரண்டது. அவளுடைய வாயிலிருந்தும் மூக்கு மற்றும் காதுகளிலிருந்தும் இரத்தம் பெருக்கெடுத்தோடியது. அப்போதுதான் அப்பெண் தேவதை, ஏற்கனவே பிரம்மதேவன் கூறியிருந்த வார்த்தைகளை நினைக்கலானாள். பிரம்மதேவனின் கடாட்சம் பெற்றவளான அப்பெண் ஒருகணம், ஒரு சாதாரண குரங்கின் தாக்கத்தினையே தன்னால் தாங்கிக் கொள்ளாமல் போய்விட்டதே என்று வருந்தினாள். ஆனால் உடனடியாகத் தன் நிலை உணர்ந்தவளாக, கூப்பிய கைகளுடன் எழுந்தாள்.

### நெருங்கி வரும் அழிவு

"ஐயனே! பிரம்மதேவனின் ஆணைப்படி பல்லாண்டு காலமாக இலங்காபுரியின் காவல்தேவதையாக இருந்து வருகிறேன். எனது பெயர் இலங்காமாதேவி. இன்றுவரை இந்நகருக்குள் அத்துமீறி எந்த ஜீவனும் பிரவேசித்ததில்லை. தாங்கள் இங்கு எப்படியோ நுழைந்துவிட்டீர்கள். இனிமேல் இந்த நகரில் இருக்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையாது. இலங்காபுரியை எவ்வளவு காலம் நான் பாதுகாக்க வேண்டும் என்று பிரம்மதேவனிடம் நான் அன்றே கேட்டேன். அதற்குப் பதிலளித்த அவர், "என்று நீ ஒரு சிறு குரங்கினால் இம்சைப்படுத்தப்படுகிறாயோ, அன்றே இந்நாட்டின் அழிவு நெருங்கிவிட்டதென்பதை அறிவாய். அப்போதே நீ அந்நாட்டை விட்டு நீங்கி விடலாம்," என்று கூறினார். இன்று தங்களால் எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது. இந்நாடு நகரங்கள் யாவும் ஈடிணையற்ற எழிலும் குன்றாத வளங்களும் கொண்டவை. எவ்வாறிருப்பினும் 'ஆக்கப்பட்டவையெல்லாம் என்றோ ஒருநாள் அழிந்தேதீரும்' என்ற நியதிப்படி இந்தப் பிரமாண்டமான நகரம் விரைவில் அழியப்போகிறது என்பது உறுதியாகி விட்டது. எல்லா வளங்களும் பெற்றுத் திகழ்ந்த நகரம், அகங்காரம் அரசோச்சும் இடமாக மாறிவிட்டது. தீமைகள் ஒழிந்து அறம் நிலைநாட்டப்படவேண்டிய காலம் வந்து விட்டது! வானர உருவில் வந்த வீரனே! இனி எத்தடையுமின்றி இந்நகர் புகுந்து உன் பணியைத் தொடரலாம்."

இவ்வாறு கூறிய இலங்கைமாதேவி மறைந்ததும் ஆஞ்சநேயர், மக்கள் கூட்டம் குறைந்திருந்த நகர வீதிகளில், எவரும் தன்னைக் கண்டு விடாமல் பவனி வரலானார். சீதாப் பிராட்டியார் எங்கே இருப்பார் என்பதை அறிய அவருடைய பார்வை பல இடங்களையும் தொட்டு வந்தது.. மிகப்பெரிய பூங்காவின் மத்தியில் பிரமாண்டமானதொரு மாளிகையைக் கண்டார். அவ்விடத்தில்தான் சீதை சிறை வைக்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணி அங்குசென்று பார்த்ததில், மண்டபத்தினுள்ளே மங்கலான ஒளியில் ஒரு இராட்சத உருவம் படுத்திருப்பதைக் கண்டார். அவ்வுருவத்தை அண்மித்துப் பார்த்ததில் அது கும்பகர்ணனின் உருவம் என்று கண்டு கொண்டார். மிகப்பலமான குறட்டை ஒலிதான் அம்மண்டபத்தைத் தாண்டியும் வெளியேறிக் கொண்டிருந்தது.

### இந்திரசித்தனின் மாளிகை

அடுத்த மாளிகையில் விபீடணர் படுத்திருந்தார். அதனை அடுத்த மாளிகை இலங்கேஸ்வரன் மகன் இந்திரசித்தனுக்குரியது. அவன் உறக்கத்திலிருந்தபோதும் அவன் பேரழகும் பெரு வீரமும் பெற்றவன் என்பதனை அனுமன் பார்த்து அறிந்து கொண்டார். அவ்விடம் விட்டகன்ற ஆஞ்சநேயர் பொழுது புலர்வதற்கு முன்னர் எப்படியாவது சீதாப்பிராட்டியார் சிறை வைக்கப்பட்டுள்ள இடத்தைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று மேலும் சுறுசுறுப்பாக இயங்கினார்.

இவ்வாறு பல இடங்களையும் பார்த்துக் கொண்டு வரும்போது மற்றுமோர் அழகிய சோலையைக் கண்டார். சோலையின் நடுவே வானுயர வளர்ந்த மாளிகை ஒன்றினையும் கண்டார். மெதுவாக நடந்து சோலையை அணுகியதும் அச்சோலையைச் சுற்றிவர மிக அகலமான அகழி ஒன்றிருப்பதைக் கண்டார். அவ்வகழியிலுள்ள நீர் மிக மிக வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. நீர் சுழித்த வண்ணம் ஓடியமையினால் அதனுள் கால் வைத்தால் உடனடியாக நீரின் வேகத்தால் வெகுதூரம் இழுத்துச் செல்லப்பட்டுவிட நேரிடும். ஆழமும் அதிகமாக இருக்கும் என்று அனுமன் எண்ணினார். ஆகவே இக்கரையிலிருந்த ஒரு மரத்தின் மீது தாவி ஏறி, அக்கரையிலுள்ள பெரு மரமொன்றைப் பிடித்துக் கீழே இறங்கினார்.

நடுநாயகமாக விளங்கிய மாளிகைக்குச் செல்வதற்கு முன்னே பல சிறு சிறு மாளிகைகளை உடைய பல தெருக்கள் ஒன்றன்பின் ஒன்றாகத் தென்பட்டன. அந்த நள்ளிரவிலும் அந்த இல்லங்களில் ஆடல் பாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதையும் ஆஞ்சநேயர் கண்டார். தெருக்களில் அரக்க வீரர்கள் ஆயுதங்களுடன் கண் காணித்து வந்து கொண்டிருந்தனர். பாடல் ஒலி வந்து கொண்டிருந்த ஒரு சிறு மாளிகையின் சாளரத்தினூடாகத் தன் பார்வையைச் செலுத்திய ஆஞ்சநேயர் ஏதோ தகாத-தனக்குதவாத-செயலில் ஈடுபட்டு விட்டதாகக் கருதி தலையைப் பின் இழுத்துக் கொண்டார். சந்தன மணம், அகிற்புகையின் மணம் மற்றும் இரவு வேளைகளில் மலர்ந்து மணம்பரப்பும் மல்லிகை போன்ற மலர்களின் வாசம் அத்தனையும் சேர்ந்து ஆஞ்சநேயரின் நாசிக்குள் புகுந்தது. வீதிகளில் காவலுக்கு நின்ற ஆண்வீரர்களைத் தவிர மாளிகைகளில் எதிலும் ஆண்கள் இல்லை. அத்தனை மாளிகைகளிலும் இள மங்கையரே நிரம்பியிருந்தனர்.

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 59

**சரியானவிடை:-** 1. மைநாக பர்வதம், 2. நாகமாது-சரசை, 3. நிழல்பிடி பூதம்.

1. பே. மஞ்சுளா, வெரல்லப் பத்தன, மடுல்சீமை.
2. ஏ. தமிழ் விழாசினி, கல்கந்தை வத்தை, தலவாக்கலை.
3. வோ. கிரிதரன், ராஜன் ஸ்ரோர்ஸ், கூமாங்குளம் வவுனியா.
எம்.வி. மதி, என்.சி. ரோட், திருகோணமலை.
5. செல்வி பி. நிஷா, செல்வாநகர், ஆரையம்பதி-03.

**போட்டி இல. 61** கேள்வி:- **இலங்கா தேவியை இலங்கைக்கு அனுப்பியவர் யார்?**

டிசம்பர். 21 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
**இராமாயணப் போட்டி – இல.61, தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

**மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வந்தால் என்னாகும்? இதோ ஒரு கற்பனை மத்தியஸ்தம்!**

**காதிலை பூ கந்தசாமி**

கோட் சூட்டுடன் வெள்ளைக்காரர் ஒருவர் கம்பீரமாக நடந்து வருகிறார். அவர்தான் மத்தியஸ்தம் செய்ய வந்தவர் என்பது அவரது தோரணையில் இருந்தே தெரிகிறது.

**அம்மையார்:** ஹலோ ஜென்டில்மன் ஹௌ ஆ யூ?

**மத்தியஸ்தர்:** ஃபைன். ஃபைன். இந்த நாடு மிச்சம் அழகாக இருக்குது. குட் கன்ரி, குட் பீப்பிள், பட் யுத்தம் மிச்சம் மோசமா இருக்குது.

**அம்மையார்:** யெஸ், யெஸ், டபிள் யெஸ். அதுதான் நாங்கள் சமாதானத்துக்காக யுத்தம் நடத்த வேண்டி இருக்குது.

**மத்தியஸ்தர்:** நிறுத்திடுங்க. எல்லாத்தையுமே நிறுத்திடுங்க. இந்த யுத்தம் வேண்டாம். இந்த இரத்தம் வேண்டாம் இந்தச் சத்தம் வேண்டாம். நிறுத்திடுங்க. பிளீஸ் நிறுத்திடுங்க.

**அம்மையார்:** நிறுத்திடுறோம். எல்லாத்தையும் நிறுத்திடுறோம். ஆமி ரவுண்ஸ் போனா அடிக்கிறாங்களே, அவங்க அடிக்கிறதை நிறுத்தச் சொல்லுங்க. ஆமி காம்புகள அடிக்கிறாங்களே, அவங்கள நிறுத்தச் சொல்லுங்க. லட்டுமாதிரி நினைச்சு குண்டோட அலையுறாங்களே, அவங்கள நிறுத்தச் சொல்லுங்க. நாங்கள் நிறுத்திடுறோம்.

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்

**மத்தியஸ்தர்:** குட் குட், வெரிகுட். நான் இதை மிஸ்டர் பிரபாகரனிடம் சொல்லிடுறேன். வேறு ஏதாவது அவரிடம் நான் சொல்லணுமா?

**அம்மையார்:** யெஸ்! அவங்க கையிலே இருக்கும் பாருங்க ஆயுதம். அதைக் கீழே போடச் சொல்லிடுங்க.

**மத்தியஸ்தர்:** இது கொஞ்சம் கஷ்டமான நிபந்தனையாச்சே!

**அம்மையார்:** நோ! சிம்பிள்! வெரி சிம்பிள்! கையில் இருப்பதைத்தானே கீழே போடச் சொல்கிறோம். ஒரு நிமிஷம்கூட ஆகாது, பொட்டென்றோ அல்லது தொப்பென்றோ போட்டுவிடலாம்.

**மத்தியஸ்தர்:** யெஸ், ஐ.நோ! எங்காவது போய் எடுத்துவந்து போடத்தான் நேரமாகும். திஸ் இஸ் குட் பொயின்ற்.

**அம்மையார்:** உங்கள் மத்தியஸ்தத்தை நாங்கள் வரவேற்கிறோம். பட், நாங்க ஒரு தடவை சொன்னா அதை நீங்க அவங்ககிட்டே நூறு தடவை உறுதியாச் சொல்லணும்.

**மத்தியஸ்தர்:** அதுக்காகத்தானே வந்திருக்கேன். சொல்லிடுறேன். (புறப்படுகிறார். ஹெலிகொப்டரில் வன்னிக்குப் பறக்கிறார்)

**பிரபா:** வணக்கம். பண்டாரவன்னியன் வாழ்ந்த பூமி உங்களை வரவேற்கிறது.

**மத்தியஸ்தர்:** ஹூ இஸ் தட் பண்டாரவன்னியன்?

**பிரபா:** கிங்! அரசன்!

**மத்தியஸ்தர்:** இங்கே நீங்கதானே கிங். நான் உங்களோடு மட்டும் பேசினால் போதுமல்லவா?

**பிரபா:** எம்மோடு மட்டும்தான் பேசவேண்டும், அதற்கு உடன்பட்டால்தான் உம்மோடு நாம் பேசுவோம்.

**மத்தியஸ்தர்:** உங்கள் இடுப்பில் இருப்பதுதான் பிஸ்டல் என்பதோ?

**பிரபா:** ஆம், ஆனால் அஞ்சவேண்டாம். உம்மோடு நான் மட்டும்தான் பேசுவேன். எதிரிகளோடுதான் என் பிஸ்டல் பேசும்.

**மத்தியஸ்தர்:** நோ, நோ, நான் கேட்டது அதற்காக அல்ல, அதை சாதாரண வேகத்தில் உருவி கீழே போட எவ்வளவு நேரமாகும்? ஒரு குத்துமதிப்பாகச் சொல்ல முடியுமா?

**பிரபா:** என்ன கேட்டீர்? எதைக் கேட்டீர்? கொதிக்கிறது இரத்தம், துடிக்கிறது மீசை! தடுக்கிறது நம்மை நீர் நாடிவந்த நட்பு!

**மத்தியஸ்தர்:** (மத்தியஸ்தருக்கு பயத்தில் வியர்த்துவிடுகிறது) கோபமாகப் பேசுகிறீர்கள் மிஸ்டர் பிரபாகரன்.

**பிரபா:** போடுகிறோம், எல்லாவற்றையும் கீழே போடுகிறோம். அணிவகுத்து நம் மண்ணில் நிற்கிறார்களே, அவர்களை கீழே போடச் சொல்லுங்கள். அந்நிய நாடெங்கும் வாங்கிக் கையில் வைத்திருக்கிறார்களே அதையெல்லாம் கீழே போடச் சொல்லுங்கள். நாங்கள் போட்டுவிடுகிறோம். எல்லாவற்றையும் கீழே போட்டு விடுகிறோம். வேண்டுமானால் கிரீஸ்பூசி பொலித்தீன் பைக்குள் போட்டு மண்ணுக்கும் கீழே போட்டு விடுகிறோம்.

**மத்தியஸ்தர்:** (தலையைச் சொறிகிறார். பின்னர் தன் தலையில் இருக்கும் கொஞ்சூண்டு முடியைப் பிய்க்கிறார்) திஸ் இஸ் குட் பொயின்ற். நான் இதை அம்மையார்கிட்டே சொல்கிறேன். வேறு ஏதாவது சொல்லணுமா?

**பிரபா:** நாங்கள் சமாதானத்துக்கு எதிரானவர்களல்ல. ஆனால் சமருக்குப் பயந்தவர்களல்ல. நாங்கள் செய்வதையெல்லாம் சொன்னதில்லை, ஆனா, சொன்னதையெல்லாம் செய்திருக்கிறோம். சொல்லாததையும் செய்திருக்கிறோம்.

**மத்தியஸ்தர்:** திஸ் குட். தட்ஸ் குட்.

*(ஹெலிகொப்டரில் பறந்து தலைநகர் செல்கிறார்)*

**அம்மாயர்:** கம், கம் வெல் கம். என்ன சொன்னார் வன்னி நாட்டார்?

**மத்தியஸ்தர்:** வட் டு யூ மீன், ஹூ இஸ் தட் வன்னி நாட்டார்?

**அம்மையார்:** வன்னிதானே இப்போது அவங்க தளம், அதுதான் அப்படிக் கேட்டேன். தட்ஸ் ஒல்.

**மத்தியஸ்தர்:** குட் நியூஸ். கீழே போடச் சம்மதிச்சுட்டார்.

**அம்மையார்:** (அதிர்ச்சியுடன்) வட், அவரா சொன்னார் இருக்காதே! இருக்கவும் கூடாதே! எதிர்க்கட்சியும் தேர்தலில் நிற்க மறுக்கலாம் தேர்தலே வேண்டாம் என்றும் சொல்லலாம், ஆனால் பிரபா சொன்னது எப்படி உண்மையாகலாம்? நம்பமுடியவில்லை, இல்லை, இல்லை, நம்பமுடியவில்லை!

**மத்தியஸ்தர்:** என்னங்க இது? அவரு கீழே போட நினைத்தாலும் நீங்க விடமாட்டீங்கபோல இருக்குதே!

**அம்மையார்:** (நம்பமுடியாமல் பார்த்துக் கொண்டே) ஓகே, ஓகே! கீழே போடுவது என்று சும்மா சொன்னா சரியாயிடுமா? எங்கே போடணும், எப்படிப் போடணும் என்று முடிவு பண்ண வேண்டாமா?

**மத்தியஸ்தர்:** கீழே போடணும் என்பதுதானே நிபந்தனை. கீழே போடுவதற்கும் நிபந்தனையா?

**அம்மையார்:** ஆயுதத்தை கீழே போட எத்தனை நேரமாகும்?



**மத்தியஸ்தர்:** ஐ திங், வன் மினிட்.

**அம்மையார்:** தட்ஸ் ரைட். அதே ஆயுதத்தை குனிந்து கையிலெடுக்க எத்தனை நேரமாகும்?

**மத்தியஸ்தர்:** அதுவும் வன் மினிட்.

**அம்மையார்:** நோ. அவங்க கீழே போடும் போதுதான் யோசிச்சுக்கொண்டே போடுவாங்க. எடுக்கும்போது ரொம்ப சந்தோஷமாக குயிக்கா எடுத்திடுவாங்க!

**மத்தியஸ்தர்:** திஸ் இஸ் எ குட் பொயின்ற்.

**அம்மையார்:** அதனால ஆயுதத்தை எங்கே, எப்படி போடுறது என்று ஒரு முடிவுக்கு வந்தாகணும்.

**மத்தியஸ்தர்:** ஓ.கே. நான் இதை மிஸ்டர் பிரபாகரன்கிட்டே சொல்கிறேன்.

*(ஹெலிக்கொப்டரில் வன்னிக்குப் பறக்கிறார்)*

**பிரபா:** வருக, வருக, மத்தியஸ்தரே வருக! என்ன சொன்னார் எதிர்த்தரப்பார்?

**மத்தியஸ்தர்:** குட் நியூஸ்! நிறுத்துகிறோம் என்று சொல்லிட்டாங்க!

**பிரபா:** (நம்பமுடியாமல் பார்க்கிறார்) ஈராக்கை அடிப்பதை அமெரிக்கா நிறுத்தலாம், ஈரான்-ஈராக் மோதல் முடியலாம், குர்திஷ் பிரச்சனை தீர்ந்துபோகலாம், இந்தியா பாகிஸ்தான் நட்புமாகலாம், நாம் எப்படி ஒருவரை ஒருவர் நம்ப முடியலாம்? நம்பமுடியவில்லை, இல்லை, இல்லை.

**மத்தியஸ்தர்:** அவங்க நிறுத்தினாலும் நீங்க நம்பமாட்டீங்க போல இருக்கே?

**பிரபா:** நிறுத்தம் என்று அவர்கள் சொல்வது சமாதானத்தில் விருப்பம் என்று காட்டுவதற்காகவே! நிறுத்துவதற்கு முன்னர் எங்கே நிறுத்துவது, எப்படி நிறுத்துவது என்று முடிவு செய்யவேண்டும்!

**மத்தியஸ்தர்:** சொல்லுங்கள். நான் அதை அம்மையாரிடம் சொல்லிவிடுகிறேன்.

**பிரபா:** இங்கே நிறுத்தியுள்ள படைகளை கொண்டுபோய் வேறு எங்காவது நிறுத்தச் சொல்லுங்கள். நாம் நிறுத்தச் சொல்லும் இடங்களில் நிறுத்தக்கூடாது. நிறுத்த வேண்டும் என்று சொல்லுமிடங்களில் நிறுத்த வேண்டும். நமது படைகள் நிறுத்தப்படும் இடங்களில் அவர்கள் படைகள் நிறுத்தக் கூடாது. அவர்கள் படைகள் நிறுத்தும் இடங்களில் நாம் படைகளை நிறுத்த மாட்டோம்.

**மத்தியஸ்தர்:** சுருக்கமாக சொல்லுங்கள்? அவர்கள் எங்கெங்கே நிறுத்தக்கூடாது?

**பிரபா:** தாயகக் கோட்பாட்டிற்கு பாதகம் ஏற்படுமளவுக்கு நிறுத்தக்கூடாது.

**மத்தியஸ்தர்:** தாயகக் கோட்பாட்டை அவங்க ஏற்றுக்கொள்ளுவாங்கள்ா?

**பிரபா:** ஏற்றுக் கொள்ளச் செய்தால்தான் நீர் மத்தியஸ்தர்!

*(மத்தியஸ்தர் புறப்பட்டுச் செல்கிறார்)*

மறுநாள் பத்திரிகைச் செய்தி;

*"மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர் தலைமறைவு!"*




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
436831
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


[illegible]

# உனக்கு நான், எனக்கு நீ





# உல்லாச ஓய்வு




ஜுவல்ஸ்
ஸ்ரீ கல்யாணி
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
323657
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


பிரான்சின் தலைநகரில் தலைநிமிர்ந்து பார்க்கவேண்டிய உயரமான கோபுரம் இது. இதன் பெயர் 'ஈபிள் டவர்'.

ஐரோப்பாவில் மிக உயரமான கோபுரமும் இதுதான். இதன் உயரம் 321 மீட்டர் (கிட்டத்தட்ட 1053 அடி) இதனுடைய அடிப்பரப்பு 31 சதுரமீட்டர் (330 சதுர அடி) இதில் உள்ள விசேஷம் யாதெனில் பாரிஸின் எந்தப் பகுதியில் இருந்து பார்த்தாலும் இக் கோபுரம் கம்பீரமாகத் தெரியும். தேன்கூடு போல இதனை செய்து முடித்தார்கள். இதனை அமைக்க மொத்தம் 7,300 தொன் இரும்பு பயன்படுத்தப்பட்டது.

இக் கோபுரத்தின் மேல் பகுதியில் வானிலை ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. உணவு விடுதிகளும் இருக்கின்றன.

உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் ஈபிள் டவர் பகுதியிலும் நம்நாடுகள் போல மாடுகள் சுதந்திரமாக நடமாடுகின்றன.

மாடுகளை வீதிகளில் கண்டால் 'சே.. நம்நாடு சுத்த மோசமப்பா வெளிநாடுகளில் என்றால் இப்படி இருக்குமா?' என்று கடுப்படிப்பவர்கள், இனிமேல் மூச்! 'இக்கரைக்கு அக்கரை பச்சை' வேண்டாமே!

# முன்தோன்றிய மூத்த குடி



உங்கள் வீடுகளிலும் இதனைக் கண்டு கடுப்போயம் கொண்டு விரட்டியிருக்கக் கூடும். அப்படி விரட்டியடிக்கிறதால நீங்கள் ஒரு முத்த குடிமகனை அவமதித்து விட்டீர்கள்.

ஆமாங்க, உலகம் தோன்றி உயிரினங்கள் தோன்றியகாலம் முதல் இன்றுவரை அழிந்துபோகாமல், உருவம் மாறாமல் உயிர்வாழும் ஒரேயொரு உயிரினம் கரப்பான் பூச்சி மட்டுமே. இது ஒரு உலக சாதனை.

கரப்பான் பூச்சி உலகில் பிறந்து 32 கோடி ஆண்டுகள் ஆகிவிட்டன. மனிதன் தோன்றி சுமார் 50 ஆயிரம் ஆண்டுகளாகின்றன. மனித இனத்தைவிட பலபல மடங்கு ஆண்டுகள் முன் தோன்றிய மூத்தகுடிமகனை மனிதன் நசுக்கிக் கொல்வது கொடுமையல்லவா.

உலகில் தரையில் பறக்கக் கூடியவற்றில் அதிவேகமாகப் பறக்கக்கூடியதும் கரப்பான் பூச்சி மட்டும்தான். 'டிக்ரி யோடபிரோரா' என்னும் இன கரப்பான் பூச்சிகள் மணிக்கு 5.4 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கக்கூடியவை. அதாவது தனது உடலின் நீளத்தைப் போல 50 மடங்கு தூரத்தை ஒரு செக்கனில் பறந்து கடக்க வல்லவை. பிரமிப்பாக இருக்கிறதல்லவா. இனிமேல் ஒரு பேச்சுக்கும் 'பூச்சி' என்று திட்டாதீர்கள்.

# ஒதுங்கும் நட்சத்திரம்



வாரமலர் தினமுரசு

அருகிலுள்ள படத்தைப் பாருங்கள். இவர்தான் சபாடினி. டென்னிஸ் உலகின் ரசிகர்கள் இனிப்புக்கும் பதிலாக உச்சரிக்கும் பெயர் சபாடினி.

அப்படி என்னதான் இவரிடம் இருக்கிறது? எளிமையான அழகு, பிரமாண்டமில்லை காட்டாத அடக்கமான கவர்ச்சி, கண்களில் ஒரு காந்த வீச்சு. டென்னிஸ் மட்டையை சுழற்றும்போது ரசிகர்களை கண்டிழுக்கும் கவர்ச்சி. இவைதான் சபாடினி என்ற மந்திரச் சொல் ரசிகர்களை மயக்கியதின் இரகசியம்.

13 வயதில் டென்னிஸ் போட்டிகளில் புகுந்த சபாடினி 17 வயதில் [illegible], 20 வயதில் அமெரிக்க ஓபன் டென்னிஸில் சாம்பியன் பட்டம் வென்றார். இப்போது சபாடினிக்கு 26 வயது. இதுவரை 350 போட்டிகளில் விளையாடியிருக்கிறார். [illegible]

ஆனால், ஒரு [illegible] டென்னிஸ் வீராங்கனைகளுக்குள் [illegible] மனங்களில் முதலிடத்தைப் [illegible] சபாடினிதான்.

டென்னிஸ் விளையாட்டை [illegible] இல்லாதவர்களும் சபாடினி விளையாடுகிறார் என்றால் முண்டியடித்துப் போய்விடுவார்கள்.

சபாடினிக்கு ரசிகர்கள் மத்தியில் இருந்த மவுசை மனதைக் கண்ட வர்த்தக நிறுவனங்கள் தமது விளம்பரங்களில் நடிக்க கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தன.

பெப்சி நிறுவன விளம்பரம் உட்பட இதுவரை அதிக விளம்பரப் படங்களில் தோன்றிய வீராங்கனையும் இவர்தான்.

சமீபத்தில் டென்னிஸ் ரசிகர்களுக்கு அதிர்ச்சிகரமான செய்தி கிடைத்தது. 'டென்னிஸை விட்டு ஒதுங்கப் போகிறேன்' என்று அறிவித்தார் சபாடினி.

அவரது அறிவிப்பைக்கூட அவரது சொந்த நாடான ஆர்ஜென்டினாவில் நேரடி ஒளிபரப்புச் செய்தார்கள். அத்தனை மரியாதை.

'டென்னிஸில் இருந்து ஒதுங்கினாலும் விளம்பரப் படங்கள் மூலம் தொடர்ந்து தரிசனம் தந்து கொண்டு இருங்கள்.. எங்களுக்கு அதுபோதும். உங்களை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும்' என்று ரசிகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.




[illegible]